
சுவடி : 42
ஏடு : 10
ஏப்பிரல் 2018
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.272/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை – 600 098.
தொடர்புக்கு :
**72992 14554**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# பொதுத்துறை வங்கிகளில் வராக் கடன் என்ற பெயரில் மக்கள் முதலீடு கொள்ளை போகிறது



1960களில் இந்தியாவில் உள்ள தனியார் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்று பொதுவுடைமைச் சிந்தனையாளர்களாலும் முற்போக்குச் சிந்தனையாளர்களாலும் பேசப்பட்டு வந்தது. அதன் உச்சகட்டமாக அன்றைய காங்கிரசுக் கட்சி அரசின் பிரதமர் இந்திரா காந்தி 9.7.1969 இல் தனியாருக்குச் சொந்தமாக இருந்த 14 வங்கி களை நாட்டுடைமை ஆக்கினார். தமிழ்நாட்டில் இந்தியன் வங்கியும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் அதில் அடங்கும். பின் நாளில் மேலும் சில வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன.

மய்ய அரசின் பிரதமர், நிதி அமைச்சர், மற்ற அமைச்சர்கள், அரசின் செய லாளர்கள், ரிசர்வ் வங்கியின் ஆளுநர், வங்கிகளின் தலைவர்களும் மேலாண்மை இயக்குநர்களும் எனப் பார்ப்பனர்களும் மேல்சாதியினரும் இந்தப் பதவிகளில் எல்லாம் அமர்ந்து கொண்டு நிர்வாகம் செய்த பொதுத்துறை வங்கிகளின் செயல் பாடு பெரும் சீர்கேட்டினை அடைந்துள்ளது வெட்ட வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

நாட்டின் பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள் ஆகியவற்றின் மொத்த வராக் கடன் நிலுவை 2017 மார்ச் மாத இறுதியில் 7.11 இலட்சம் கோடியாக இருந்தது. அது 2017 செப்டம்பர் மாத இறுதியில் ரூ.8.4 இலட்சம் கோடியாக அதிகரித்துவிட்டது.

இதில் பொதுத்துறை வங்கிகளின் வராக் கடன் நிலுவை 2014 மார்ச்சு மாத இறுதியில் ரூ.2.16 இலட்சம் கோடியாக இருந்தது. இது 2017 செப்டம்பர் மாத இறுதியில் ரூ.7.33 இலட்சம் கோடியாக அதிகரித்துவிட்டது.

பொதுத்துறை வங்கிகளின் வராக் கடன் நிலுவையில் பாரத ஸ்டேட் வங்கியும் பஞ்சாப் நேசனல் வங்கியும் பாங்க் ஆஃப் இந்தியாவும் முறையே முதல் மூன்று இடங்களைப் பிடித்து முன்னணியில் இருக்கின்றன. 2017 செப்டம்பர் மாத இறுதியில் பாரத ஸ்டேட் வங்கியின் வராக் கடன் நிலுவை ரூ.1,86,115 கோடி; பஞ்சாப் நேசனல் வங்கியின் வராக் கடன் நிலுவை ரூ.57,630 கோடி; பாங்க் ஆஃப் இந்தியாவின் வராக் கடன் நிலுவை ரூ.49,307 கோடி ஆகும்.

கடனை வசூலிப்பதற்காக நடப்பில் உள்ள பொதுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தால் அதிக காலம் எடுத்துக் கொள்ளும் என்பதால் மய்ய அரசு 2002ஆம் ஆண்டில் வங்கிகளின் வராக் கடன்களை வசூலிப்பதற்கென்றே SARFAESI Act (Securitisation and Enforcement of Financial Assets and Enforecment of Security Act) எனப்படும் தனிச் சட்டத்தை இயற்றியது. இந்தச் சட்டம் 2016இல் திருத்தம் செய்யப்பட்டது.

இத்தனிச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்த பின்னரும் பொதுத்துறை வங்கிகளால் வசூலிக்க முடிந்த வராக் கடன் தொகை எவ்வளவு தெரியுமா? அதாவது 4% அளவுக்கே வராக்கடன் வசூலிக்கப்பட்டுள்ளது.

2014-15 ஆம் ஆண்டில் ரூ.30,800 கோடி வராக் கடன் வசூலிக்கப்பட்டது.

2015-16ஆம் ஆண்டில் 46,54,753 கடன்களுக்கு ரூ.2,21,400 கோடி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டது. அதில் ரூ.22,800 கோடி மட்டுமே வசூலிக்கப் பட்டுள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் 22,61,873 கடன்களுக்கு ரூ.2,86,000 கோடி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டது. அதில் ரூ.28,000 கோடி மட்டுமே வசூலிக்கப் பட்டது.

வசூலிக்கப்பட முடியாது என்ற நிலையில் வங்கிகள் வராக் கடன்களைத் தள்ளுபடி செய்கின்றன. அந்த வகையில் பொதுத்துறை வங்கிகள் 2015-16 ஆம் ஆண்டில் ரூ.57,586 கோடிக்கும் 2016-17ஆம் ஆண்டில் ரூ.81,683 கோடிக்கும் வராக் கடன் தள்ளுபடி செய் துள்ளன.

ரிசர்வ் வங்கியின் நெறிமுறைப்படி ஒரு கடன் அது மோசடி என்று தெரியவந்தாலே அந்தக் கடன் நிலுவை யை வராக் கடன் என்று வங்கிகள் வகைப்படுத்தி வரு கின்றன. பஞ்சாப் நேசனல் வங்கி நீரவ் மோடிக்கு வழங்கிய ரூ.12,700 கோடி கடனும் ஆக்சிஸ் வங்கியும் ஐசிஐசிஐ வங்கியும் மேகும் சோக்சிக்கு வழங்கிய ரூ.8,000 கோடி கடனும் மோசடி எனத் தெரியவந்த தால் அவை வராக் கடன்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

யூனியன் பாங்க் ஆஃப் இந்தியாவில் அய்தராபாத் தைச் சேர்ந்த தொட்டம் இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர் நிறுவனம் ரூ.1394 கோடி கடன் வாங்கி மோசடியில் ஈடுபட் டுள்ளதாக சி.பி.ஐ. அதிகாரிகள் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

சென்னையைச் சேர்ந்த கனிஷ்க் கோல்டு நிறு வனத்தினர் பல வங்கிகளில் ரூ.824 கோடி கடன் வாங்கி மோசடி செய்துள்ளதின் பேரில் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சென்னையைச் சேர்ந்த நாதெள்ள சம்பத் ஜுவல்லரி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ரூ.250 கோடி கடன் பெற்று மோசடி செய்துள்ளது தெரிய வந்துள்ளது.

இப்படிப்பட்ட வராக்கடன்களால் பொதுத்துறை வங்கி கள் இழப்புக்கு ஆளாகும் போது மய்ய அரசு அந்த இழப்பைப் பொதுத்துறை வங்கிகள் ஈடுகட்டுவதற்காக மக்களின் வரிப் பணத்தை எடுத்து பொதுத்துறை வங்கிகளுக்கு மறுமுதலீடாகக் கொடுக்கின்றது. இப்படிப் பட்ட நிதி நெருக்கடியைப் பொதுத்துறை வங்கிகள் சமாளிக்கும் பொருட்டு மய்ய அரசு பொதுத்துறை வங்கிகளுக்கு ரூ.2,11,000 கோடி மறுமூலதனமாக அளித்துள்ளது.

கடனை வசூலிக்க நீதிமன்றத்துக்குச் செல்லாமல் வங்கியும் கடன் பெற்றவரும் சந்தித்துப் பேசி ஒரு சமசர முடிவுக்கு வருவதற்காகவே லோக் அதாலத் எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறுசிறு கடன் களை வசூலிப்பதில் லோக் அதாலத் நன்றாகச் செயல் படுகிறது.

பொதுநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, கடனை வசூலிப்பதில் ஏற்படும் சிரமங்கள், காலதாமதம் ஆகிய வற்றைத் தவிர்த்துக் கடன்களை விரைவாக வசூலிப் பதற்கென்றே கடன் வசூல் தீர்ப்பாயங்கள் 38 (Debt Recovery Tribunal-DRT) அமைக்கப்பட்டு உள்ளன. மேல் முறையீடு செய்திட (Debt Recovery Appellet Tribunal-DRAT) கடன் வசூல் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்கள் 5 அமைக்கப்பட்டுள்ளன.

உலகத்தில் பல பகுதிகளில் 1990இல் சமதர்மத் துக்குச் சரிவு ஏற்பட்டது. அப்பொழுது முதல் பொதுவு டைமை ஏற்பாடு சமுதாய அமைப்பு வலிவானதாக இராது என்கிற கருத்தை நிலைநாட்ட வேண்டும் என்று எல்லாப் பொருளாதார நிபுணர்களும் நினைக்கின்றனர். அந்தக் கருத்தை நிலைநாட்டவே இந்தியா முழுவதிலும் இந்திய அரசுக்குச் சொந்தமாக இருக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் இழப்பிலேயே நடக்கின்றன என்கிற கருத்தை நிலைநாட்டவே முயற்சிக்கின்றன.

எல்லாப் பொதுத்துறை நிறுவனங்களிலும் மேலாண்மை இயக்குநர், மேலாளர் முதலான பொறுப்பில் உள்ள வர்கள் ஆளும் கட்சிக்காரர்களின் பரிந்துரைக்குச் செவிசாய்த்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு பங்கு. சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு ஒரு பங்கு, வங்கி நிர்வாகிகளுக்கு ஒரு பங்கு என்று கடன் பெறும் தொகையில் 10 விழுக்காடு இலஞ்சமாகப் பெறுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். அதனால் பாதுகாப் பான உள்தணிக்கைக்கும் இந்தியத் தலைமைக் கணக் காயர் தணிக்கைக்கும் உட்படுத்தாமல் பொதுத்துறை வங்கிகளின் பணம் கொள்ளையடிக்கப்பட அனுமதித்து விட்டனர். பாரதிய சனதா அரசு பணக்காரர்களுக்குப் பொதுத்துறை நிறுவனங்களைச் சாதகமாகச் செயல்பட வைத்து, வருகிற 2019 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுவிட வேண்டுமென்று உறுதியாகச் செயல்படு கிறது. இதை உணர்ந்து மக்கள் அந்த நோக்கத்தை முறியடிக்க முன்வர வேண்டும்.

**1-4-2018** **- வே.ஆனைமுத்து**

# தமிழர்கள் வெகுண்டெழுந்து போராடுவதே
## காவிரி உரிமையை வென்றெடுப்பதற்கான வழி

— க. முகிலன்

**உ**ச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் அமித்வராய், கன்வில்கர் ஆகியோரைக் கொண்ட ஆயம் 16.02.2018 அன்று காவிரி ஆற்றுநீர் பங்கீடு வழக்கில் தன் இறுதித் தீர்ப்பை வழங்கியது. 2007இல் காவிரி நடுவர் மன்றம் தன் இறுதித் தீர்ப்பில் தமிழகத்திற்கு ஒதுக்கிய 192 டி.எம்.சி. நீரில் 14.75 டி.எம்.சி. நீரைக் குறைத்து 177.25 டி.எம்.சி. மட்டுமே உச்சநீதிமன்றம் தன் இறுதித் தீர்ப்பில் வழங்கி தமிழ்நாட்டை வஞ்சித்தது. தீர்ப்பு வெளியான நாளிலிருந்து ஆறுகிழமைகளுக்குள், அதாவது 29.3.18க்குள் இத்தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கான "ஒரு செயல் திட்டத்தை" (A Scheme) நடுவண் அரசு உருவாக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பில் திட்டவட்டமான முறையில் வரையறுக்கப்பட்டுள்ள காவிரி மேலாண்மை வாரியம், காவிரி ஒழுங்காற்றுக் குழு ஆகியவற்றை அமைக்க வேண்டும் என்று இதற்குமுன் நடுவண் அரசுக்கு வலியுறுத்திய உச்சநீதிமன்றம் "ஒரு செயல்திட்டம்" என்ற வழுக்கலான சொற்கோவையை வேண்டுமென்றே தன் தீர்ப்பில் பயன் படுத்தியதா? என்று நினைக்க வேண்டியுள்ளது.

பிப்பிரவரி 16 அன்று உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியான அன்றே ஆறு கிழமைகளுக்குள் காவிரி மேலாண்மை வாரியமோ அல்லது தீர்ப்பில் கூறப்பட்டுள்ள "ஒருசெயல் திட்டமோ" ஏற்படுத்தப்படாது என்று காவிரிச் சிக்கலில் இந்திய அரசு தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து வரும் போக்கை நன்கு உணர்ந்தவர்கள் கூறினர். மேலும் கர்நாடக மாநிலத்தில் மே மாதம் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் மோடி அரசு ஆறு கிழமைகளுக்குள் எந்த நடவடிக்கையும் எடுக்காது என்பது வாக்குவங்கி அரசியலின் அரிச்சுவடி பாடமாகும் என்று அரசியல் நோக்கர்கள் கருத்துரைத்தனர்.

கடந்த காலங்களில் நடுவண் அரசில் காங்கிரசு இருந்தாலும் பா.ச.க. ஆட்சி செய்தாலும் தமிழகத்தின் ஆற்றுநீர் உரிமை களுக்கு எதிராகவே செயல்பட்டு வந்துள்ளன. கடந்த அய்ம்பது ஆண்டுகளாகத் தமிழகத்தில் ஆட்சி செய்துவரும் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தன்னல அரசியல் நோக்கங்களுக்காக இந்திய அரசின் தமிழின உரிமைப் பறிப்பு நடவடிக்கைகளைக் கண்டுங் காணாமல் இருந்துவிட்டன. இதே தன்மையில் தான் பிப்பிரவரி 16 அன்று உச்சநீதிமன்றத் தீர்ப்பு வெளியான பின்னும் இக் கட்சிகள் நடந்து கொண்டன.

தி.மு.க.வின் செயல்தலைவர் மு.க.ஸ்டாலின் அனைத்துக் கட்சிக் கூட்ட அறிவிப்பைச் செய்தபிறகு தமிழகத்தை ஆளும் அ.தி.மு.க., அரசின் சார்பில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை 22.2.18 அன்று கூட்டியது. அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதி களும் தில்லிக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்தித்து, காவிரி மேலாண்மை வாரியத்தை ஆறு கிழமைக்குள் அமைக்குமாறு வலியுறுத்துவது என்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. கர்நாடகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் நரேந்திர மோடி தமிழகப் பிரதிநிதிகளைச் சந்திக்க மாட்டார் என்பது நன்கு தெரிந்திருந்தும் மக்களை ஏமாற்றுவதற்காக இப்படி ஒரு தீர்மானம் போட்டார்கள். மோடியும் சந்திப்பதற்கு நாள் ஒதுக்கவில்லை.

நடுவண் அரசு காவிரியில் தொடர்புடைய நான்கு மாநிலங் களின் தலைமைச் செயலாளர்களின் கூட்டத்தை 9.3.2018



தி.மு.க. செயல்தலைவர் மு.க.ஸ்டாலின் தோழமைக் கட்சிகள் தலைவர்களுடன் 1-4-2018 அன்று வள்ளுவர் கோட்டம் அருகில் நடத்திய ஆர்ப்பாட்டம்



காவல்துறையின் கட்டுக்காவலையும் மீறி மெரினா கடற்கரையில் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத இந்திய அரசைக் கண்டித்து இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்

அன்று நடத்தியது. ஒன்றுபட்ட கருத்து இக்கூட்டத்தில் ஏற்படாது என்று தெரிந்தே நடுவண் அரசு இக்கூட்டத்தைக் கூட்டியது. தானும் நடவடிக்கை எடுத்ததுபோல் காட்டிக் கொள்வதற்காகவும், நான்கு மாநிலங்களுக்குள்ளும் ஒத்த கருத்து உருவாகாததால் ஆறு வாரங்களுக்குள் உச்சநீதிமன்றம் கூறியவாறு நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று கூறுவதற்காகவுமே இக்கூட்டம் எனும் நாடகம்! இக்கூட்டம் முடிந்தபின் செய்தியாளர்களிடம் பேசிய நடுவண் அரசின் நீர்வளத் துறைச் செயலாளர் உபேந்திர பிரசாத் சிங் “30.3.18க்குள் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஏனென்றால் அப்படியொரு உத்தரவை உச்சநீதிமன்றம் தன் தீர்ப்பில் குறிப்பிடவில்லை. நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அமல்படுத்த ஒரு திட்டத்தை உருவாக்கவேண்டும் என்றுதான் உச்சநீதி மன்றத் தீர்ப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது” என்று இந்திய அரசின் வஞ்சகத் திட்டத்தை வெளிப்படையாகக் கூறினார்.

அதன்பிறகு 15.3.18 அன்று தமிழச் சட்டமன்றத்தில், காவிரி மேலாண்மை வாரியத்தை உரிய காலத்திற்குள் அமைக்குமாறு இந்திய அரசை வலியுறுத்தும் தீர்மானம் இயற்றி அனுப்பப் பட்டது. அதன்பின் மார்ச்சு 21, 23 ஆகிய நாள்களில் தமிழக அரசு இது குறித்து இந்திய அரசுக்கு மடல்கள் எழுதியது. மருத்துவ நுழைவுத் தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்திற்கும் இந்திய அரசுக்கு எழுதிய மடல்களுக்கும் இந்திய அரசு மயிரளவுக்கும் மதிப்பளிக்காத போது மீண்டும் அதே சனநாயகக் கேலிக்கூத்தை நடத்துவது ஏன்?

நாடாளுமன்ற மக்களவையில் 37 உறுப்பினர்களுடன் மூன்றாவது பெரிய கட்சியாக அ.தி.மு.க. இருக்கிறது. மாநிலங்கள் அவையில் 11 பேர் இக்கட்சிக்கு இருக்கின்றனர். இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் இருந்தும் அ.தி.மு.க. மருத்துவ நுழைவுத் தேர்வுக்கு விலக்கு பெற ஏதும் செய்யவில்லை. அ.தி.மு.க.வை விட குறைந்த உறுப்பினர்களைக் கொண்ட தெலுங்கு தேசம் கட்சியும் ஆந்திராவின் ஒய்.எஸ்.ஆர்.காங்கிரசும் நாடாளு மன்றத்தின் இரு அவைகளையும் செயல்படாவிடாமல் முடக்கிக் கொண்டிருந்த நாள்களில் அ.தி.மு.க. உறுப்பினர்களும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக்கோரி தொடர்ந்து முழக்க மிட்டதைச் சாதனையாகக் கூறிக் கொண்டனர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கான இறுதி நாளான 29.3.18 அன்றுகூட தமிழக முதல்வர் பழனிச்சாமி இன்று இரவு வரையில் பொறுத்திருந்து பார்ப்போம் என்று கூறிக் கொண்டிருந்தார். காலக்கெடு முடிந்த அடுத்தநாளில் (30.3.18) கூட நடுவண் அரசு உச்சநீதிமன்ற ஆணையின்படி காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்காதது வருந்தத்தக்கது என்றோ, கண்டிக்கத்தக்கது என்றோ தமிழக அரசின் சார்பிலோ, அ.தி.மு.க. கட்சியின் சார்பிலோ எவரும் கூறவில்லை. மோடி அரசின் சார்பிலும் 30.3.18 அன்று எவரும் கருத்து கூறவில்லை.

தமிழக அரசு 31.3.18 அன்று உச்சநீதிமன்றத்தில், நடுவண் அரசின் அமைச்சகச் செயலாளர் பி.கே.சின்ஹா, நீர்வளத்துறைச் செயலாளர் யு.பி.சிங் ஆகியோருக்கு எதிராகத் தமிழக அரசின் பொதுப்பணித்துறைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர் சார்பில், ஆறு வாரங்களுக்குக்குள் உச்சநீதிமன்ற ஆணையை நிறைவேற்றாத தற்காக நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தமிழக அரசு தொடுத் துள்ளது. 3.4.18 அன்று அ.தி.மு.க. சார்பில் உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் இந்திய அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடுத்த அதேநாளில் (31.3.18) நடுவண் அரசு, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து விளக்கம் அளிக்கக் கோரியும், இதைச் செயல்படுத்த மேலும் மூன்று மாதங்கள் கால நீட்டிப்புக் கேட்டும் விண்ணப்பம் அளித்தது. அதில் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

1. மாநிலங்களுக்கிடையிலான ஆற்றுநீர்ச் சிக்கல் தீர்வுச் சட்டத்தின் பிரிவு 6-ஏ அடிப்படையில் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ள ‘ஒரு செயல்திட்டம்’ (A Scheme) என்றால் என்ன? அந்தச் செயல் திட்டத்தை நடுவண் அரசு அமைக்க முடியுமா?
2. புதியதாக அமைக்கப்படும் வாரியத்தின் பணிகள் என்ன? எப்படிச் செயல்படவேண்டும்? மேலும் வாரியத்தின் நிர்வாக, தொழில்நுட்ப அம்சங்களை மாற்ற நடுவண் அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா?
3. கர்நாடகத்தில் வருகிற மே 12ஆம் நாள் சட்டப் பேரவைக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. காவிரிச் சிக்கல் கர்நாட கத்தில் உணர்வுபூர்வமானதாக இருப்பதால், கடந்த

காலங்களில் பல்வேறு சட்டம்-ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன. அதனால் மனித உயிரிழப்புக்கு ஏராளமான சொத்துகளும் அழிக்கப்பட்டுள்ளன. எனவே சட்டம் ஒழுங்கையும் இரு மாநில நட்புறவையும் கருத்தில் கொண்டு காவிரி மேலாண்மை வாரியத்தை மூன்று மாதங்களுக்குப் பிறகு அமைக்க கால நீட்டிப்புத் தேவைப்படுகிறது. (காவிரிக் காகத் தமிழகத்தில் வன்முறையிலான போராட்டங்களை நடத்தாததால் இந்திய அரசு தமிழர்களைக் கோழைகளாகக் கருதுகிறதா?

எந்நிலையிலும் எதற்கும் அஞ்சாமல் உறுதியான நடவடிக்கை எடுக்கக்கூடிய வல்லமைபடைத்தவர் நரேந்திர மோடி என்று பா.ச.க.வினர் புகழ் பாடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் நரேந்திரமோடி கர்நாடகச் சட்டமன்றத் தேர்தலையும் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற முடியாது என்றும் கால நீட்டிப்புக் கேட்டு உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பம் போட்டுள்ளார். மோடி ஆட்சியின் நோக்கம் கர்நாடகச் சட்டமன்றத் தேர்தல் வரையில் மட்டுமின்றி, 2019இல் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் வரையில் காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதைத் தள்ளிப் போடுவதே ஆகும். கருநாடத்தில் மீண்டும் காங்கிரசுக் கட்சியின் ஆட்சி அமையுமானால் பழியைக் காங்கிரசு மீது போட்டுவிடலாம் என்றும் ஒருமனக் கணக்கு பா.ச.க.வுக்கு இருக்கிறது.

மோடி அரசு எந்த நோக்கத்திற்காக உச்சநீதிமன்றத்தில் 31.3.18 அன்று விண்ணப்பித்ததோ, அது சரி என்று உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதி 2.4.18 அன்று இதை விசாரணைக்கு ஏற்ற நிலையிலேயே கருத்துரைத்துள்ளார். 'செயல்திட்டம்' (ஸ்கீம்) என்பது காவிரி மேலாண்மை வாரியம் என்று மட்டும் பொருள் கொள்ள முடியாது'' என்று தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா மோடி அரசின் நிலைப்பாட்டை ஆதரித்துள்ளார். தமிழகத்துக்கு உரிய நீர் கிடைக்கும் என்று ''அருள்வாக்கு''க் கூறியுள்ளார்.

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சியின் நோக்கமும் தில்லியில் மோடி ஆட்சியின் நோக்கமும் ஒன்றே ஆகும். இருவரும் திட்டமிட்டுப் பேசிவைத்தது போல் உச்சநீதிமன்றத்தில் விண் ணப்பித்துள்ளனர். அ.தி.மு.க. 3.4.18 அன்று ஆர்ப்பாட்டம் நடத்துவதுடன் அமைதியாடைந்துவிடும். யாரேனும் எதிர்த்துக் கேட்டால் உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலுக்காகக் காத்திருக் கிறோம் என்று பா.ச.க.வின் குரலாக விடைசொல்லும்.



திருச்சியில் இளைஞர்கள் இரயில் மறியல் போராட்டம்



உழவர்களுடன் தில்லியில்
100 நாட்களுக்குமேல் போராட்டம் நடத்திய அய்யாக்கண்ணு

22.2.18 அன்று அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டிய எடப்பாடி அரசு 29.3.18 அன்று காலக்கெடு முடிந்ததும் மீண்டும் அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டாமல், தனிப்போக்காகச் செயல்பட்டது ஏன்? தில்லியில் வகுத்துத் தரப்படும் திட்டத்தின்படி செயல்படும். ஒரு ஏவல் அரசாக எடப்பாடி ஆட்சி இருக்கிறது என்பது மீண்டும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. தில்லியின் நோக்கம் காவிரிச் சிக்கலில் தமிழகக் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயல்படாமல் தடுப்பதே ஆகும். ஆனால் கர்நாடகத்தில் காவிரிச் சிக்கலில் அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் மக்களின் விழிப்புணர்வால் ஒன்றுபட்டுச் செயல்படுகின்றன.

காவிரிப் பாசன உழவர் சங்கங்களின் கூட்டமைப்பு 3.4.18 அன்று போராட்டம் நடத்தஉள்ளது. தி.மு.க. 1.4.18 முதல் தமிழகம் முழுவதும் தோழமைக் கட்சிகளுடன் இணைந்து போரட்டங்களை நடத்தி வருகிறது. 5.4.18 அன்று பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. விக்ரமராசா தலை மையிலான வணிகர் சங்கம் 3.4.18 அன்றும் வெள்ளையன் தலைமையிலான சங்கம் 11.4.18 அன்றும் கடை அடைப்பு செய்ய உள்ளன. பா.ம.க. 11.4.18 அன்று வேலை நிறுத்தம் செய்ய உள்ளது. விசயகாந்த் 6.4.18 அன்று ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளனார். ஜி.கே.வாசன் தனியாகப் போராட்டம் அறிவித்துள்ளார். வேல்முருகன் தனியாகச் சுங்கச் சாவடிகளில் போராட்டம் நடத்துகிறார். 1.4.18 முதல் முற்போக்கு இயக்கங்களும் புரட்சிகர அமைப்புகளும் தீவிரமான போராட்டங்களை நடத்தி வருகின்றன. நடுவண் அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள் ஆகியவை செயல்படவிடாமல் நடத்தப்படும் போராட்டங்களே மோடியின் மண்டையில் உரைக்கும்.

தமிழகத்தின் வேளாண்மைக்கும், மக்களின் உயிர் வாழ்வுக்கும், குடிநீருக்கும் பெரும் ஆதாரமாக உள்ள காவிரி ஆற்று நீர் உரிமையைக் காக்க வேண்டியது ஒட்டுமொத்த தமிழர்களின் தலையாயக் கடமையாகும். அரசியல் கட்சிகள் சில நாள்கள் போராட்டம் நடத்தி ஓய்ந்து போகக்கூடும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் காவிரி நீரால் வளங்கொழித்த வேளாண்மையும் நிலமும் பாலையாகிவிடக்கூடிய பேராபத்து நம்முன் நிற்கிறது. காவிரி நீர் கர்நாடகம் தரும் சலுகை அல்ல; காலந்தோறும் நாம் பெற்றிருந்த உரிமை! எனவே மாணவர்கள், இளைஞர்கள், உழவர்கள், பெண்கள் என்று தமிழர்கள் அனைவரும் வெகுண்டெழுந்து தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே நம் காவிரி உரிமையை வென் றெடுக்க முடியும்!

# அரசமைப்புச் சட்ட அவையில் அம்பேத்கர் விடுத்த எச்சரிக்கை! இன்று நிறைவேறியிருக்கிறதா?

இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காக அரசமைப்புச் சட்ட அவை 9.12.1946 அன்று முதன்முதலாகக் கூடியது. 25.11.1949 அன்று அரசமைப்புச் சட்டம் அரச மைப்புச் சட்ட அவையால் இறுதி செய்யப்பட்டது. 26.11.1949 அன்று நிறைவேற்றப்பட்டது. 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 17 நாள்கள் - அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட எடுத்துக் கொண்ட காலம் ஆகும். 25.11.1949 அன்று அரசமைப்புச் சட்ட அவையின் விவாதங்கள் முடிந்தபின், அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் தலைவரான டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் இறுதியாக உரை நிகழ்த்தினார். அப்போது, எதிர்காலத்தில் இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்துவது குறித்த தன் கவலையையும் எச்சரிக்கையையும் வெளிப்படுத்தினார். 1994இல் மகாராட்டிரா மாநில அரசு ஆங்கிலத்தில் "இந்திய அரசமைப்புச் சட்டத்தில் முதன்மையான கர்த்தா டாக்டர் அம்பேத்கர்" என்ற தலைப்பில், அம்பேத்கர் எழுத்துகளும் பேச்சுகளும் நூல் வரிசையில் 13ஆவது தொகுதியாக வெளியிடப்பட்ட நூலில் உள்ள அம்பேத்கர் உரையில் ஒரு பகுதி தமிழாக்கம் செய்யப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளது.

"நான் அரசமைப்புச் சட்ட அவைக்கு வந்ததன் நோக்கம் பட்டியல் குல வகுப்பினரின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது தவிர வேறொன்றுமில்லை. இதற்கு மேலும் பொறுப்புகளை ஏற்குமாறு பணிக்கப்படுவேன் என்று நான் நினைத்தும் பார்க்கவில்லை. அதனால், வரைவுக் குழுவின் உறுப்பினராக நான் தேர்வு செய்யப்பட்டபோது மிகவும் வியப்படைந்தேன். வரைவுக்குழுவின் தலைவராக ஆக்கப்பட்டபோது மேலும் வியப்படைந்தேன்.

1950 சனவரி 26 அன்று இந்தியா ஒரு சனநாயக நாடாக இருக்கும். அதாவது மக்களால் மக்களுக்காக மக்களே நடத்துகின்ற அரசு இருக்கும். இக்கருத்து என் சிந்தனையில் சுழன்று கொண்டிருக்கிறது. இந்தியாவின் சனநாயக அரசமைப்புச் சட்டத்தின் எதிர்காலம் என்னவாக இருக்கும்? இந்திய நாடு இதைப் பேணிப் பாதுகாக்குமா? அல்லது அதை மீண்டும் இழந்துவிடுமா?

வடிவமைப்பு என்ற நிலையில் மட்டுமல்லாமல், உண்மையான தன்மையில் சனநாயகத்தைப் பேண வேண்டுமானால் நாம் என்ன செய்யவேண்டும்? முதலாவதாக நாம் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறேனென்றால், நம்முடைய சமுதாய, பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவதற்காக அரசமைப்புச் சட்ட நெறிமுறைகளை மட்டுமே பின்பற்ற வேண்டும். குருதி சிந்தும் புரட்சிகரமான வழிமுறையைக் கைவிடவேண்டும். மேலும் இதன் பொருள் என்னவெனில், சட்ட மறுப்பு, ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம் ஆகியவற்றையும் கைவிடவேண்டும். சமூக, பொருளாதாரக்



குறிக்கோள்களை அடைவதற்கு அரசமைப்புச் சட்ட வழிமுறைகளால் முடியாத நிலையில் அரசமைப்புப் சட்ட நெறிமுறைக்கு முரணான வழிமுறைகளை மேற்கொள்வதில் நியாயம் இருக்கிறது. அதேசமயம் சட்டப்படியான வழிமுறைகள் உள்ளபோது, சட்டத்துக்கு எதிரான முறைகளை மேற்கொள்வது நெறிமுறையானது அல்ல. சட்டத்துக்குப் புறம்பான வழிமுறைகள் அராஜகவாதத்திற்கு அடிகோலும். ஆகவே இவ்வழிமுறைகளை எவ்வளவு விரைவில் கைவிடுகின்றோமோ, அந்த அளவிற்கு நமக்கு நல்லது.

இரண்டாவது, ஜான் ஸ்டுவர்ட் மில் சனநாயகவாதிகளுக்கு விடுத்த எச்சரிக்கையை நாம் பின்பற்றுவதாகும். "உங்களுடைய உரிமைகளை எந்தவொரு பெரிய மனிதனின் பாதங்களின் முன் வைக்காதீர்கள்; உங்களுடைய சமூக அமைப்புகளைச் சீர்குலைக்கக்கூடிய அதிகாரங்களை எந்தப் பெரிய மனிதனிடமும் அளிக்காதீர்கள்" என்பதே ஜான் ஸ்டுவர்டின் எச்சரிக்கையாகும். வாழ்நாள் முழுவதும் நாட்டுக்காக உழைத்த உயர்ந்த மனிதர்களிடம் நன்றியுடன் இருப்பதில் தவறு இல்லை. ஆனால் நன்றி உணர்வை வெளிப்படுத்துவதற்கு வரம்புகள் உள்ளன. இது குறித்து அய்ரிஷ் நாட்டின் தேசாபிமானியான டேனியல் ஓ கன்னல்

‘எந்தவொரு மனிதனும் தன் சுயமரியாதையை இழந்து நன்றி பாராட்டமாட்டான்; எந்தவொரு பெண்ணும் நன்றி உணர்ச்சிக்காகத் தன் கற்பை இழக்கமாட்டாள்; எந்தவொரு நாடும் சுதந்தரத்தை இழந்து நன்றி பாராட்ட முன்வராது’ என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இந்த எச்சரிக்கை வேறு எந்தவொரு நாட்டையும் விட இந்தியாவுக்கு மிகவும் தேவையானதாக இருக்கிறது. ஏனெனில் பக்தி அல்லது பக்தி மார்க்கம், அல்லது தலைவர் வழிபாடு என்பது அரசியலில் செல்வாக்குச் செலுத்துகிறது. உலகில் வேறு எந்தவொரு நாட்டிலும் இருப்பதைவிட ஒப்பிட முடியாத அளவில் இந்தியாவில் தலைவர் வழிபாடு அல்லது பக்தி அரசியலில் ஆதிக்கம் செய்கிறது. மதத்தில் பக்தி என்பது ஆன்மாவின் விடுதலைக்கான ஒரு வழியாக இருக்கலாம். ஆனால் அரசியலில் பக்தி அல்லது தலைவர் வழிபாடு என்பது உறுதியாக இழிவுக்கே இட்டுச் செல்லும்; இறுதியில் சர்வாதிகாரமாக மாறும்.

மூன்றாவது செய்தி என்னவெனில், வெறும் அரசியல் சனநாயகத்துடன் மனநிறைவு அடைந்துவிடக்கூடாது. நம்முடைய அரசியல் சனநாயகத்தைச் சமூக சனநாயகமாக உயர்த்தவேண்டும். சமூக சனநாயகம் என்றால் என்ன? அது ஒரு வாழ்க்கை நெறி. அதில் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் அகியவை குறிக்கோளாக ஏற்கப்பட்டிருக்கும்.

சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் தனித்தனியான கோட்பாடுகள் எனக் கருதக்கூடாது. அவை ஒன்றோடொன்று ஒத்திசைந்தே இயங்கக்கூடியவை. ஒன்றி லிருந்து மற்றொன்றைப் பிரித்துப் பார்ப்பது சனநாயகத்தின் முதன்மையான நோக்கத்தையே சிதைப்பதாகும். சமத்து வத்திலிருந்து சுதந்தரத்தைப் பிரிக்க முடியாது; அதேபோன்று சுதந்தரத்திலிருந்து சமத்துவத்தைப் பிரிக்க முடியாது. சமத்துவம் இல்லாதபோது, சுதந்தரம் என்பது சிறுகூட்டத்தால் பெரும் எண்ணிக்கையினர் மீது மேலாதிக்கம் செய்ய வழிகோலும். சுதந்தரம் இல்லாத சமத்துவம் தனிமனிதரின் உள்ளார்ந்த முன் முயற்சியை அழிக்கும். சகோதரத்துவம் இல்லாத சுதந்தரமும் சமத்துவமும் இயல்பான சமூக வளர்ச் சிக்கு வழிசமைக்கா. இந்நிலையை உருவாக்கிட அதிகாரம் கொண்ட கண்காணிப்பாளர் தேவைப்படுகிறார்.

இந்திய சமூகத்தில் இரண்டு கூறுகள் அடியோடு இல்லை என்பதை ஏற்றுக்கொண்டு நாம் இதை அணுகுவோம். ஒன்று சமத்துவம் இல்லை என்பதாகும். சமூகத்தளத்தில், இந்தியாவில் சமத்துவமற்ற படிநிலைக் கோட்பாட்டின் (The Principle of graded inequality) அடிப்படையில் அமைந்துள்ள சமுதாயத்தைக் கொண்டுள்ளோம். இதனால் சிலருக்கு உயர்வும் மற்றவர்களுக்கு இழிவும் ஏற்பட்டிருக்கிறது. பொருளாதாரத் தளத்தில், பெரும்பான்மையானவர்கள் கொடிய வறுமையில் வாட, மிகச் சிலரோ செல்வச் செழிப்பில் கொழிக்கின்றனர்.

1950 சனவரி 26 அன்று இத்தகைய முரண்பாடுகள் கொண்ட வாழ்வில் நாம் நுழைகிறோம். அரசியலில் சமத்து வம் பெற்றிருப்போம். சமுதாய, பொருளாதார வாழ்வில் நம்மிடையே சமத்துவம் இருக்காது. அரசியலில் ஒரு மனிதனுக்கு ஒரு வாக்கு; ஒரு வாக்குக்கு ஒரே மதிப்பு என்கிற கொள்கையை ஏற்று இருப்போம். சமுதாய மற்றும் பொரு ளாதார வாழ்வில், நம்முடைய சமுதாய, பொருளாதாரக் கட்டமைப்பின் காரணமாக ஒவ்வொரு மனிதனும் ஒரே மதிப்பு உடையவன்தான் என்கிற கொள்கையை ஏற்க மறுப்பவர்களாகவே இருப்போம். இத்தகைய முரண்பாடுகள் கொண்ட வாழ்நிலையை இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கவிடப் போகிறோம்? இன்னும் எவ்வளவு காலத்துக்குச் சமுதாயச் சமத்துவத்தையும் பொருளாதாரச் சமத்துவத் தையும் மறுக்கப் போகிறோம்?

இன்னும் நீண்டகாலத்துக்கு இவற்றை மறுப்பது என்பது நம்முடைய அரசியல் சனநாயகத்திற்கே ஆபத்தானதாக முடியும். எவ்வளவு விரையில் முடியுமோ அவ்வளவு விரை வில் இந்த முரண்பாடுகளைக் களைய வேண்டும். இல்லா விட்டால் இந்தச் சமத்துவமின்மையால் பாதிக்கப்பட்டவர்கள், இந்த அரசமைப்புச் சட்ட அவை அரும்பாடுபட்டு உருவாக்கி யுள்ள அரசியல் சனநாயகக் கட்டமைப்பையே தகர்த்தெறி வார்கள்.

(Dr. Babasaheb Amebdkar Writings and Speeches, Vol.13. Dr. Ambedkar The Principal Architect of The Constitution of India, பக்கம் 1208, 1214, 1215, 1216.
தமிழாக்கம் : க.முகிலன்)

## இங்கிவனை யாம் பெறவே!
## நூல் வெளியீட்டு விழா

பேராசிரியர் இரா.இளவரசு அவர்களுக்கு வந்த மடல்களும் இவர் அவர்களுக்குப் பதில் அளித்து எழுதிய மடல்களும் தொகுக்கப் பெற்று

இங்கிவனை
யாம் பெறவே!

என்ற தலைப்பில் 17.03.2018 சனி அன்று மாலை 5.30 மணிக்கு எழும்பூர் இக்சா மையத்தில் வெளியிடப்பட்டது.

கோ.மணிவாசகம் வரவேற்புரையாற்றினார். கு.திருமாறன் தலைமை வகித்தார்.

பேரா.இரா.வேலம்மாள், வைகறைவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பேரா.ஆ.இரா.வேங்கடாசலபதி, சா.சு.இளங்கோ, புலவர் தமிழகன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர். இரா.செம்மல் நன்றியுரை விழா முடிவுற்றது. பேரா. இரா இளவரசு அறக்கட்டளையினர் விழாவினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

# அரசியலை இந்துத்துவ மயமாக்கும் முயற்சியே-
# இராம இராச்சிய இரத யாத்திரை

**க.முகிலன்**

சங்பரிவாரங்களால் இந்துத்துவக் கோட்பாட்டின் தந்தை எனப் போற்றப்படுகின்ற வி.தா.சாவர்கர், ''அரசியலை இந்துமயமாக்கு; இந்துமதத்தை இராணுவ மயமாக்கு'' என்ற முழக்கத்தை முன்னிறுத்தினார். இந்த முழக்கத்தின் அடிப்படையில்தான் ஆர்.எஸ்.எஸ்.-ம் அதன்சேய் அமைப்புகளும் இயங்கி வருகின்றன. ஆர்.எஸ்.எஸ்.இன் அரசியல் முகமான பாரதிய சனதாக் கட்சிக்கும் இதே கொள்கைதான்.

1980 முதல் அரசியலை இந்துமயமாக்குவதற் காகச் சங்பரிவாங்கள் அயோத்தியில் இராமர் கோயில் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை முதன்மைப் படுத்திச் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் பல மாநிலங்களிலும் நடுவண் அரசிலும் பா.ச.க. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது. ஆர்.எஸ்.எஸ். தன்னை ஒரு கலாச்சார அமைப்பு என்று சொல்லிக்கொண்டே இந்துத்துவ அரசியலையும் பா.ச.க.வின் ஆட்சியையும் இயக்கி வருகிறது.

அரசியலை இந்துமயமாக்குதல் என்கிற திட்டத்தின் ஒரு பகுதியாக இராமஇராச்சிய இரதயாத்திரை வடக்கே அயோத்தியில் தொடங்கி தெற்கே திருவனந்தபுரத்தில் நிறைவடையுமாறு திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளது. கேரள மாநிலத்தின் தலைநகரமான திருவனந்தபுரத் துக்கு அருகில் உள்ள செங்கோட்டுக்கோணம் என்ற ஊரில் ''ஸ்ரீராமதாச சர்வதேச சேவா சங்கம்'' என்கிற அமைப்பு உருவாக்கப்பட்டபோதிலும், இச்சங்கம் மகா ராட்டிரா மாநிலத்தில் வலிமையுடன் இயங்குகிறது. இந்தியாவின் பிற பகுதிகளிலும் இதற்குக் கிளைகள் இருக்கின்றன.

ஸ்ரீராமதாச சர்வதேச சேவா சங்கத்தின் சார்பில், 13.2.2018 அன்று அயோத்தியில் விசுவ இந்து பரிசத்தின் தலைமையிடமான கரசேவபுரத்திலிருந்து இராம இராச்சிய இரத யாத்திரைப் புறப்பட்டது. கரசேவ புரத்தில் 1993 முதல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோயில் கட்டுவதற்கான தூண்கள் மற்ற கட்டுமானப் பொருள்களைத் தயாரிக்கும் வேலை நடை பெற்று வருகிறது. இந்த இரத யாத்திரை உத்தரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், மகாராட்டிரம், கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம் ஆகிய ஆறு மாநிலங்களில் 41 நாள்களில் 6000 கி.மீ. தொலைவை 224 நாடாளுமன்றத் தொகுதிகள் வழியாகச் செல்லும் வகையில் திட்டமிடப்பட்டது. அயோத்தியில் சங்பரிவாரங்கள் கட்டு வதற்குத் திட்டமிட்டுள்ள இராமர் கோயிலின் வடிவில் இரத ஊர்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.



2018 பிப்ரவரி 13 அன்று அயோத்தியில் இராம இராச்சிய இரதம் புறப்படல்

விசுவஇந்து பரிசத்தின் பொதுச் செயலாளர் மகா சிவராத்திரி நாளில் இந்த இரத யாத்திரையைத் தொடங்கி வைத்தார். இந்துமதச் சாமியார்களையும் இளைஞர்களையும் திரட்டித் தீவிரமான இந்துத்து வத்தை முன்னெடுப்பதற்காக ஆர்.எஸ்.எஸ்.இன் கிளை அமைப்பாக 1964இல் விசுவ இந்து பரிசத் உரு வாக்கப்பட்டது. விசுவ இந்து பரிசத்தான் 1984இல் பாபர் மசூதி உள்ள இடத்தில் தான் இராமர் பிறந்தார்; எனவே அங்கு இராமர் கோயில் கட்டவேண்டும் என்ற கோரிக்கையை முதன்முதலில் எழுப்பியது. பா.ச.க. 1989இல் தன் கட்சியின் பேரவைக் கூட்டத்தில் இதற் கான தீர்மானம் இயற்றியது. 1984இல் நாடாளு மன்றத்தில் இரண்டு உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்த பா.ச.க. அயோத்தியில் இராமர் கோயில் கட்டுதல் என்ற முழக்கத்தை முன்னெடுத்ததன் மூலம் 1989இல் 86 நாடாளுமன்றத் தொகுதிகளில் வென்றது.

இராம இராச்சிய இரதயாத்திரையைத் தொடக்கி வைத்த விசுவஇந்து பரிசத்தின் பொதுச்செயலாளர் சம்பத்ராய், ''ஆர்.எஸ்.எஸ்.க்கும், விசுவ இந்து பரிசத் துக்கும் இந்த இரத யாத்திரைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை'' என்று பேசினார். இது 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பது போன்றதே ஆகும். மேலும் சம்பத் ராய், ''ஸ்ரீஇராமதாச சர்வதேச சேவா சங்கம் கடந்த 27 ஆண்டுகளாக இதுபோன்ற ஆன்மீகப் பரப்புரை யைச் செய்துவருகிறது. இந்த ஆண்டு அயோத்தி லிருந்து இராமேசுவரத்திற்கு இந்தப் பயணம் திட்ட மிடப்பட்டுள்ளது'' என்று கூறி இந்த இரதயாத்திரைக் கும் அரசியலுக்கும் தொடர்பு இல்லை என்று உணர்த்திட முயன்றார்.

2018 மே மாதம் கர்நாடகத்திலும் திசம்பரில் மத்தியப் பிரதேசத்திலும் சட்டமன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற விருப்பதால்தான் இந்த இரண்டு மாநிலங்கள் வழியாக இரத யாத்திரைச் செல்வதற்குத் திட்டமிடப் பட்டது. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பா.ச.க.வுக்கு ஓரளவுக்கு ஆதரவு இருப்பதால் இரத யாத்திரைத் திட்டத்தில் தமிழகமும் சேர்க்கப்பட்டது. மேலும் 2014இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது நரேந்திர மோடி, அயோத்தில் இராமனுக்குக் கோயில் கட்டுதல் என்பதைப் பற்றிப் பேசாமல், இந்தியாவின் வளர்ச்சி, நாட்டுக்கு நல்லகாலம் பிறக்கப்போகிறது, அயல்நாட்டில் உள்ள கருப்புப் பணத்தை மீட்டு வந்து ஒவ்வொரு இந்தியரின் வங்கிக் கணக்கிலும் உருவா 15 இலட்சம் போடப்படும் என்பவற்றைப் பேசி, பா.ச.க.வைத் தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெறச் செய்து தலைமை அமைச்சரானார். ஆனால் கடந்த நான்கு ஆண்டுக் கால ஆட்சியில் தேர்தல் வாக்குறுதிகளில் எதையும் நிறைவேற்றவில்லை என்பதுடன் பணமதிப்பிழப்பு நடவடிக்கை, ஜி.எஸ்.டி. அமலாக்கம் போன்றவற்றால் உழவர்கள்; சிறுதொழில் செய்வோர், தொழிலாளர்கள் முதலானவர்கள் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளனர். ஆண்டிற்கு இரண்டு கோடி புதிய வேலை வாய்ப்பு என்ற வாக்குறுதி கானல் நீராகி விட்டது. மாறாக அமைப்புச் சார்ந்த தொழில்களில் வேலை இழப்புகள் தொடர்கதையாகிவிட்டன. இத்தகைய அரசியல் பின்னடைவுகளிலிருந்து மீள்வதற்கான ஒருவழியாகவே, குரங்கு தன் குட்டியின் கையை விட்டு ஆழம் பார்ப்பது போல் இந்த இராம இராச்சிய இரத யாத்திரையை ஆர்.எஸ்.எஸ்.-விசுவஇந்து பரிசத் பின்நின்று இயக்குகின்றன.

இந்த இரதயாத்திரையின் நோக்கங்களாக, அயோத்தியில் இராமனுக்குக் கோயில் கட்டுதல், இந்தியாவில் இராம இராச்சியத்தை அமைத்தல், பள்ளிப் பாடத் திட்டத்தில் இராமாயணத்தை இடம் பெறச் செய்தல், தற்போது ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்று இருப்பதை இராமனுக்கு உரிய நாளான வியாழக் கிழமையை விடுமுறை நாளாக அறிவித்தல், துறவிகள், மாடதிபதிகள் ஆகியோருடன் கலந்து பேசி ‘தேசிய இந்துநாள்” (National Hindu Day) என்பதை அறிவித்தல் ஆகியவை முன் கைப்பட்டுள்ளன.

பாபர் மசூதியா? இரமன் பிறந்த இடமா? என்கிற சிக்கல் உச்சநீதிமன்றத்தில் வழக்காக விசாரணையில் இருக்கும்போது, பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோயில் கட்டுவோம் என்று கூறி இரதயாத்திரை நடத்துவது சட்டத்தின் ஆட்சி என்கிற கோட்பாட்டுக்கு எதிரானதல்லவா? உச்சநீதிமன்றத்தின் செயல்பாட்டில் தலையிடுவதல்லவா? இந்த இரத



அயோத்தியில் கரசேவைபுரத்தில் இராமர் கோவில் கட்டுவதற்காகப் புனித நீராட்டுச் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ள பெருங்கற்கள்

யாத்திரை தங்கு தடையின்றி செல்வதற்கும், தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நடுவண் அரசின் உள்துறை அமைச்சகம் இராம இராச்சிய இரதம் பயணிக்கும் ஆறு மாநில அரசுகளுக்கும் ஆணையிட்டு அறிக்கை அனுப்பியுள்ளது. இந்தியாவில் இருப்பது இந்துத்துவ ஆட்சியே என்பதை இது பறைசாற்றுகிறது.

இராமஇராச்சியம்-இராமனின் அரசசை அமைக்கப் போகிறோம் என்கிறார்கள். ‘அரசு’ என்பது முற்றிலும் அரசியல் சார்ந்ததாகும். ஆயினும் இராம இராச்சியம் என்பது ஆன்மீகம் சார்ந்தது என்று பா.ச.க.வினரும் மற்ற சங்பரிவாரங்களும் விதண்டா விவாதம் செய்து கொண்டிருக்கிறார்கள். இராமஇராச்சியம் என்பதைக் காந்தியார் சுதந்திரப் போட்டக் காலத்தில் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார். பிரித்தானிய அரசிடம் வலிமையுடன் பேரம் பேசுவதற்காக, பல ஆயிரம் சாதிகளாகப் பிரிந்து கிடந்தவர்களை இந்துக்கள் என்ற ஓர்மை உணர்வில் அணி திரட்டிட இராம இராச்சியம் என்ற முழக்கத்தை முன்வைத்தார் காந்தியார்.


இந்து-முசுலீம் ஒற்றுமையை வலியுறுத்திக் கொண்டே காந்தியார் இராம இராச்சிய பசனையையும் பாடிக் கொண்டிருந்தார். காந்தியார் ஒரு புதிரான மனிதர் என்பதற்கான ஒரு சான்று இது. 1947இல் நாட்டுப் பிரிவினையையொட்டி இந்து-முசுலீம் மோதல்களும் படுகொலைகளும் நிகழ்ந்து கொண்டிருந்த போது பிப்ரவரி 26 அன்று பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில், ‘இராம இராச்சியம் என்பது இந்துக்களின் ஆட்சி என்று யாரும் தவறாக நினைக்க வேண்டாம். என்னுடைய இராமன் என்பது கடவுளின் இன்னொரு பெயர். நான் கூறும் இராம இராச்சியம் என்பது உலகில் கடவுளின் ஆட்சியை-“குடராஜ்” (Khuda Raj) அமைப்பதே ஆகும்” என்று கூறினார். (Khuda என்பது இஸ்லாத்தில் கடவு

ளைக் குறிக்கும்) ஆனால் சங்பரிவாரங்கள் காந்தியார் சொன்ன இராம இராச்சியத்தை அமைக்கப் போவ தாகக் கூறி, பார்ப்பன மேலாதிக்க ஆட்சியை நிறுவிட முயல்கின்றனர்.

வால்மீகி எழுதியதுதான் மூல இராமாயண மாகும். இராமாயணத்தில் உள்ள இராமன் ஆட்சியே உலகில் சிறந்த ஆட்சி என்று இந்துத்துவவாதிகள் கூறிவருகின்றனர். வால்மீகி இராமாயணத்தில் ''பிராம ணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் அனைவரும் பேராசையின்றி அவரவர்களுக்குத் தர்மப்படி விதிக்கப்பட்ட கடமைகளையும் வேலை களையும் மனநிறைவோடு செய்கின்றனர்'' (காண்டம் 116, வசனம் 89) என்று கூறப்பட்டுள்ளது. எனவே வருணாசிரமத்தை-நால்வருண சமூகக் கட்டமைப் பைக் கட்டிக் காப்பதே இராம இராச்சியத்தின் குறிக் கோளாகும். ஆகவேதான் சூத்திரனான சம்புகனுக்குத் தவம் செய்யும் உரிமை சாத்திரப்படி இல்லை என்ப தால் இராமன் அவன் தலையை வாளால் வெட்டிக் கொன்றான். எனவே நால்வருணத்தை-சாதியக் கட்டமைப்பை-இதன் வழியிலான சமூக ஒடுக்கு முறையை-பொருளாதாரச் சுரண்டலை நிலைநாட்டிட முயலும் இராம இராச்சிய இரதயாத்திரையைச் சூத்தி ரர்களும், தலித்துகளும், பழங்குடியினரும் எதிர்க்க வேண்டியுள்ளது.

இராம இராச்சிய இரதயாத்திரை 20.3.18 அன்று கேரளத்திலிருந்து தமிழ்நாட்டில் செங்கோட்டைக்குள் நுழைந்தது. அதற்கு முன்பே மதச்சார்பின்மையிலும் சனநாயகத்திலும் நம்பிக்கை உள்ள பல்வேறு அமைப்பு கள், தமிழ்நாட்டு அரசு இந்த இரத யாத்திரையைத் தமிழ்நாட்டில் அனுமதிக்கக்கூடாது; அவ்வாறு அனுமதித் தால் போராட்டம் நடத்துவோம் என்று அறிவித்தன. ஆனால் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு திருநெல்வேலி மாவட்டத்தில் 144 தடை ஆணைப் பிறப்பித்தது. தொல்.திருமாவளவன், வேல்முருகன், ஜவாஹருல்லா போன்ற தலைவர்களைச் செங்கோட்டைக்குப் புறப்படுவதற்கு முன்பே கைது செய்தது.

20.3.2018 அன்று சட்டப் பேரவையில் எதிர்க் கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின், இந்த இரத யாத்தி ரைக்கு அனுமதி வழங்கப்பட்டதையும், இதை எதிர்த்துப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தவர்களைக் கைது செய்திருப்பதையும் கண்டித்துப் பேசினார். மு.க.ஸ்டாலின் பேச்சு வன்முறையைத் தூண்டுவதாக இருப்பதாகத் துணை முதலமைச்சர் பன்னீர்செல்வம் கூறியதன் பேரில் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பட்டது. முதலமைச்சர் பழனிச்சாமி ஆன்மீக இரத யாத்திரைக்கு அரசியல் சாயம் பூசப்படுவதாகக் குற்றம் சாட்டினார். இசுலாமிய இராச்சியம், கிறித்தவ இராச்சியம் என்று பிற மதத்தவர்கள் யாத்திரை நடத்தினால் 'மத ஊர்வலம்' என்று கூறி தமிழக அரசு அனுமதிக்குமா? செயலலிதா முதலமைச்சராக இருந்தபோது, இராமனுக்கு அயோத்தியில் கோயில் கட்டாமல், பாக்கித்தானிலா



6-12-1992இல் அயோத்தியில் சங்பரிவாரங்களால் பாபர் மசூதி இடிக்கப்பட்டது.

கட்ட முடியும் என்று சங்பரிவாரங்களின் குரலை எதிரொலித்தவர். அயோத்தியில் கரசேவை நிகழ்ச்சிக்கு ஆட்களை அனுப்பியவர். எனவே செயலலிதாவின் வழிவந்த இந்த ஆட்சி இரத யாத்திரைக்கு அனுமதி அளித்ததில் வியப்பதற்கு ஏதுமில்லை!

இரத யாத்திரைக்கு மற்ற அய்ந்து மாநிலங்களில் எதிர்ப்பு இல்லாத போது, தமிழ்நாட்டில் மட்டும் எதிர்ப்பது ஏன்? என்று இந்துத்துவவாதிகள் வினவுகின்றனர். ஆம்! தமிழ்நாடு மற்ற மாநிலங்களிலிருந்து பலவகையிலும் தனித்தன்மையானது. சமற்கிருத மொழியை விட மூத்ததும், தனித்து இயங்கவல்லதும், பல கோடி மக்களுக்கு இன்றளவும் தாய்மொழியாக இருப்பதுமான தமிழ்மொழியின் தாயகம் தமிழ்நாடு. அதனால் சமற்கிருத்தையும் அம்மொழியின் வாயிலாக ஆதிக்கம் செய்யும் பார்ப்பனர்களையும் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் தொடர்ந்து எதிர்த்து வருகிறது. எனவேதான் தமிழ்நாடு மட்டும் இந்தி ஆதிக்கத்தை 1938 முதல் எதிர்த்து வருகிறது. வகுப்புவாரி இடஒதுக்கீட்டுக் கொள்கையைக் காப்பாற்றுவதில் தமிழ்நாடு தனித்து விளங்குகிறது. மருத்துவ நுழைவுத் தேர்வு (நீட்) சமூக நீதிக்கு எதிரானது என்று தமிழ்நாடு மட்டும் தொடர்ந்து போராடி வருகிறது. இவ்வாறு எண்ணற்ற காரணங்கள் இருக்கின்றன.

1922 இல் திருப்பூரில் தமிழ் மாகாண காங்கிரசின் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், இராகோபாலாச்சாரியை மேடையில் வைத்துக் கொண்டே தந்தை பெரியார், சம்புகனைக் கொன்ற-நால்வருணத்தைப் பாதுகாக்கும் இராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்று பேசினார். அச்சில் வெளிவந்த அனைத்து இராமாயணங்களையும் படித்து ஆராய்ந்து இராமன் "ஒரு அவதார புருஷன்" என்பது ஒரு பித்தலாட்டம், திராவிடர்களின் பண்பாட்டுக்கு எதிரான நூல் இராமாயணம் என்று தன் வாழ்நாள் முழுவதும் எழுதியும் பேசியும் வந்தார். காமராசர் முதலமைச்சராக இருந்தபோது இராமன் பட எதிரிப்புப் போராட்டம் பெரியார் தலைமையில் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டது. அறிஞர் அண்ணா இராமாயணம் கொளுத்தப் படவேண்டும் என்று ஆற்றிய உரை "தீ பரவட்டும்" என்ற தலைப்பில் நூலாக வெளிவந்து பல்லாயிரக் கணக்கான இளைஞர்களால் விரும்பிப் படிக்கப்பட்டது. 1971இல் சேலத்தில் பெரியார் தலைமையில் இராமன் படத்தைச் செருப்பால் அடிக்கும் பேரணி நடத்தப்பட்டது.

இன்று சங்பரிவாரங்கள், இசுலாமியரும் கிறித்து வரும் இராமனை இந்தியாவின் ஒப்பற்ற இலட்சிய புருஷனாக ஏற்றுக்கொண்டால்தான் இந்தியாவில் வாழமுடியும் என்று அச்சுறுத்துகின்றனர். "அயோத்தியில் பாபர் காலத்தில் இராமன் பிறந்த இடத்தில் கட்டப்பட்டிருந்த கோயிலை இடித்துவிட்டு மசூதி கட்டப்பட்டது. ஆகவேதான் பார் மசூதி தகர்ப்பட்டது. எனவே இசுலாமியர்கள் இந்துக்களின் நம்பிக்கைக்கு மதிப்பளித்து, பாபர் மசூதி இருந்த இடத்தை இராமன் கோயில் கட்டுவதற்கு அளிக்கவேண்டும்" என்று சங்பரிவாரங்கள் வலியுறுத்தி வருகின்றன. அத்வானி போன்ற தலைவர்களும், அயோத்தியில் நாங்கள் குறிப்பிடும் இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்பது எங்கள் மத நம்பிக்கை; இதில் உச்சநீதிமன்றமும் தலையிட முடியாது என்று எச்சரிக்கின்றனர்.

"ராம் லல்லா"-வின் (குழந்தை இராமன்-பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டுள்ள இராமன் சிலை) சார்பில் 8.2.18 அன்று உச்ச நீதிமன்றத்தில் வாதிட்ட மூத்த வழக்குரைஞர் கே.பராசரன், "இராமர் பிறந்தது திரேதயுகத்தில். 30,000 ஆண்டுகளுக்கு முன் இது நிகழ்ந்தது. இவ்வளவு நீண்ட காலத்திற்கு முன் நிகழ்ந்ததற்கு இப்போது சான்று எப்படித் தர முடியும்"? என்று வாதிட்டு இந்துக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் இராமன் பிறந்த இடத்தை இந்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றார். புராண மரபுப்படி திரேதயுகம் 1,36,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இன்றுள்ள மனிதர்கள் (Homo Sapiens Sapiens) பரிணாம வளர்ச்சியில் தோன்றி 60,000 ஆண்டுகள் ஆகின்றன என்பது மானுடவியலில் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் அறிவியல் உண்மையாகும். அரசு என்கிற வடிவம் ஏற்பட்டு பத்தாயிரம் ஆண்டுகள்தான் ஆகிறது. ஆனால் ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே இராமன் ஒப்பற்ற ஆட்சியை நடத்தினான் என்கிற இந்துத்துவவாதிகளின் பித்தலாட்டத்தை எப்படி எதிர்க்காமல் இருக்கமுடியும்?

இந்துமதம் என்று சொல்லப்படுவதில் சைவம், வைணவம் என்ற இருபெரும் பிரிவுகள் இருக்கின்றன. இவற்றில் பல கடவுள்கள் இருக்கின்றனர். இவை தவிர பெண் தெய்வங்கள், நாட்டார் வழக்கியல் தெய்வங்கள், சாதிகளுக்கான குலசாமிகள் என்று எண்ணற்ற கடவுள்களை நம்புகிறார்கள்; வழிபடுகிறார்கள். இவற்றில் பல கடவுள்களுக்குச் சிறியதும் பெரியதுமான கோயில்கள் உள்ளன. பெருங்கோயில்களில் ஆண்டுதோறும் திருவிழா நடக்கிறது. சாதி இந்துக்களின் முதன்மையான வீதிகளில் உற்சவர் சிலை வைக்கப்பட்ட தேர் உலா நடக்கிறது. இதே தன்மையில் இசுலாமியரும் கிறித்தவரும் மதவிழாக்களைக் கொண்டாடுகின்றனர். சில இடங்களில் ஒரு மதத்தின் திருவிழாவில் மற்ற மதத்தவரும் கலந்து கொள்கின்ற


னர். அரசமைப்புச் சட்டத்தில் ஒருவர் தான் விரும்பும் எந்த மதத்தையும் நம்பவும், பின்பற்றவும், பரப்புரை செய்யவும் உரிமை உண்டு என்று கூறப்பட்டுள்ளது. இந்த நிலைகளைத் தடுக்க வேண்டும் என்று பெரி யாரியலாளர்களோ, அம்பேத்கரியவாதிகளோ, பொது வுடைமை இயக்கத்தினரோ கோருவதில்லை. ஆனால் கடவுளின்-இராமனின் பெயரால், மதத்தின் பெயரால் அரசியல் நடத்துவதை எதிர்க்கின்றனர். மதஉரிமை என்ற பெயரால் இந்துத்துவப் பாசிச அரசியல் செய் வதைக் கண்டிக்கின்றனர்.

ஆனால் சங்பரிவாரங்கள் அயோத்தியில் இராமர் கோயில்-அதுவும் பாபர் மசூதியிடத்தில்தான்-கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை அரசியல் குறிக் கோளாக முன்வைத்துதான் பா.ச.க. இந்திய அளவில் முதன்மையான அரசியல் கட்சியாக வளர்ந்துள்ளது. பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயனை எதிரி யாகக் காட்டி இந்துக்களை ஒன்று திரட்டியதுபோல், இப்போது சங்கபரிவாரங்கள் இசுலாமியர்களை இந் நாட்டின் ஆக்கிரமிப்பாளர்களாகக் காட்டி இந்துக்களை அரசியல் வாக்கு வங்கியாக அணி திரட்டுகின்றன. இதன்மூலம் பார்ப்பன-பனியா ஆதிக்கத்தையும், சுரண்டலையும் நிலை நிறுத்திட முயல்கின்றன. பார்ப்பன-பனியா ஆதிக்கச் சூழ்ச்சியைப் புரிந்து கொள்ளும் திறனற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிலும், தலித்துகள்-பழங்குடியினரிலும் ஒரு பகுதியினர் வீபிடனர்களாக மாறி அவர்களின் தாள் பணிந்து கிடக்கின்றனர்.

நேருவும் காங்கிரசும் சோசலிசம் பற்றியெல்லாம் பேசினாலும் காங்கிரசுக் கட்சி 1885இல் தோற்றுவிக் கப்பட்ட காலம் முதலே பார்ப்பன-பனியாவின் மேலா திக்கத்தில் இருந்து வருவதால், சங்பரிவாரங்களுக்கு எதிராக உண்மையான மதச் சார்பின்மையை முன் னெடுக்கவில்லை. 1986 பிப்பரவரி 1 அன்று பிரதமராக இருந்த இராசிவ் காந்தியின் ஆணையின் பேரில்தான் பாபர் மசூதியின் வாயில் பூட்டுகள் அகற்றப்பட்டன. குடுவையில் அடைத்து வைக்கப்பட்ட பூதத்தைத் திறந்துவிட்ட கதையாயிற்று. அயோத்தியில் இராமர் கோயில் கட்டுதல் என்ற பெயரால் நடந்த கலவரங் களில் ஆயிரக்கணக்கான முசுலீம்கள் கொல்லப்பட்டனர்.

எனவே அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் கட்டுவது, இராம இராச்சியம் அமைப்பது என்கிற சங்பரிவாரங்களின் குறிக்கோள், பார்ப்பன-பனியா மேலாதிக்கத்தை நிலைபெறச் செய் வதற்காகவே என்பதால் மதச்சார்ப்பற்ற, சனநாயக, முற்போக்கு இயக்கங்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் சங்பரிவாரங்களின் சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும்.

## புதிய பார்வை இதழின் ஆசிரியர்
# ம.நடராசன் மறைந்தார்



புதிய பார்வை இதழின் ஆசிரியரும், திராவிடர் இயக்கம், தமிழ் தமிழர் முன்னேற்றத் தில் அக்கறை காட்டிய வருமான ம.நடராசன் 20.3.2018 அன்று மறைந்தார்.

23.10.1942இல் பிறந்த நடராசன் 1965இல் நடை பெற்ற இந்தி எதிர்ப்புப் போரில் தஞ்சைப் பகுதியில் மாணவர் தலைவராக விளங்கி னார்.

1975இல் ம.நடராசன்-சசிகலா திருமணம் கலைஞர் தலைமையில் நடைபெற்றது.

தமிழக அரசின் மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றியபின் அரசியல், பொது வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட்டார்.

ஒவ்வொரு ஆண்டும் தஞ்சையில் மிகப் பெரிய அளவில் பொங்கல் விழாவைச் சிறப்புடன் நடத்து வார். தோழர் வே.ஆனைமுத்து அவர்களை அழைத்து பலமுறை அந்நிகழ்வில் பேசவைத்தார். மொழிப் போர் ஈகியரின் வாரிசுகளைப் பாராட்டி நிதி உதவி யும் அளித்து வந்தார்.

பெரியார் திடலில் நடைபெற்ற தன்னுடைய 70ஆவது பிறந்தநாள் விழாவில் ஆனைமுத்து அவர்களை அழைத்துப் பெரியார் சிந்தனைகள் தொகுப்புப் பணிக்காகப் பாராட்டியதுடன் ஒரு இலட்சம் கொடுத்து பெரியார் சிந்தனைகள் தொகுப்பு நூல்களை வாங்கி பெரியார் கொள்கைகள் பரவிட வழிவகை செய்தார்.


அண்ணாவின் பேச்சுகளையும், எழுத்துக்களையும் பல தொகுப்புகளாக வெளியிட்டார்.

2009இல் ஈழப்போரில் கொல்லப்பட்ட தமிழர் களின் நினைவாகத் தஞ்சை பகுதியில் முள்ளிவாய்க் கால் முற்றத்தை அமைத்ததில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. நடராசன் அவர்களின் அரசியல் நிலைப் பாடுகளில் நமக்கு முரண்பாடு உண்டு எனினும், தமிழ் மொழி, இனம் ஆகியவற்றின் மேம்பாட்டில் குன்றாத ஆர்வமுடன் வாழ்நாள் முழுவதும் செயல் பட்டார்.

- **ஆசிரியர் குழு**

# ஐன்ஸ்டீனுக்கு அடுத்து மக்களால் போற்றப்பட்ட அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்

- க. முகிலன்



2008 ஏப்பிரல் 21 அன்று அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் 50ஆவது ஆண்டு விழாவில் ஹாக்கிங் உரையாற்றுகிறார்

ஐசக் நியூட்டன் (1642-1726) நவீன கால அறிவியலின் தந்தை என்று கருதப்படுகிறார். அவர்தான் புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்தார் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். "ஒவ்வொரு வினைக்கும் அதற்குச் சமமான எதிர் வினை உண்டு" என்கிற நீயூட்டனின் மூன்றாவது விதி உலகம் முழுவதும் மக்களால் நடைமுறையில் பேச்சுவழக்கில் பயன்படுத்தப்படுகிறது.

நீயூட்டனுக்கு அடுத்து பல அறிவியில் கண்டுபிடிப்புகளை வெளியிட்டவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (1879-1955) ஆவார். 1921இல் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. புகழ்பெற்ற நகைச்சுவை நடிகரான சார்லி சாப்ளின், "ஐன்ஸ்டீனின் அறிவியல் கோட்பாடுகளைப் புரிந்த கொள்ளாத போதிலும் மக்கள் அவரிடம் பேரன்பு கொண்டுள்ளனர்" என்று கூறினார். இதற்குக் காரணம், ஐன்ஸ்டீன் மக்கள் பற்றாளராக-சமுதாய நலனில் அக்கறை கொண்டவராக வாழ்ந்ததே ஆகும். "நீ என்ன பெரிய ஐன்ஸ்டீனா?" என்று பேச்சுவழக்கில் கேட்கப்படும் அளவுக்கு அறிவின்-அறிவியலின் அடையாமாக ஐன்ஸ்டீன் மக்கள் மனங்களில் வாழ்கிறார்.

ஐன்ஸ்டீனுக்கு அடுத்து உலக அளவில் மக்களால் நேசிக்கப்பட்ட-வியந்து போற்றப்பட்ட அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங் 2018 மார்ச்சு 14 அன்று தன் 76ஆம் அகவையில் மறைந்தார். வானத்தை அண்ணாந்து பார்க்கவும் முடியாத நிலையில், சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறே இப்பேரண்டத்தைத் தன் மண்டை ஓட்டுக்குள் கொண்டு வந்து நிறுத்தி, உள்ளஉரன்மிக்க அறிவாற்றலால் ஆராய்ந்து, புதிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டவர் ஸ்டீபன் ஹாக்கிங். 1988இல் எழுதிய "காலம் ஒரு வரலாற்றுச் சுருக்கம்" (A Brief History of Time) என்ற நூலின் மூலம் பேரண்டத்தின் இயக்கத்தை மக்களும் எளிதில் படித்து அறிந்து மகிழுமாறு செய்தவர் ஹாக்கிங். ஆய்வுக் கூடத்தின் அறிவியலை வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்ததால் ஹாக்கிங் மக்களின் அறிவியலாளராகத் திகழ்ந்தார்.

ஸ்டீபன் ஹாக்கிங் 1942 சவனரி 8 அன்று இங்கிலாந்தில் பிறந்தார். கலிலியோ இறந்த 300 ஆவது ஆண்டில் தான் பிறந்தது குறித்து ஹாக்கிங் பெருமையுடன் கூறுவது வழக்கம். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் இயற்பியலில் பட்டம் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்பைப் படித்தார். 1963இல் அவரது 21ஆவது பிறந்த நாளுக்குச் சில நாள்கள் கழித்து அவருக்கு "அமியோட் ராஃபிக் லேட்டரல் ஸ்கிலரோசிஸ்" (Amyotrophic Lateral Sclerosis) என்ற தசை-நரம்பு செயலிழப்பு நோய் இருப்பதாக மருத்துவர்கள் கூறினார்கள். இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழமுடியும் என்றனர். அப்போது ஹாக்கிங் "என் மூளை முழுத்திறனுடன் செயல்படுமா?" என்று மருத்துவர்களிடம் கேட்டார். அவர்கள் "மூளை இயல்பான தன்மையில் இயங்கும்" என்றனர். மூளையின் செயல்திறனைக் கொண்டே உடலின் ஊனத்தை வென்று தன் அறிவியல் ஆராய்ச்சியைத் தொடர்வது என உறுதி பூண்டார். "உரம் ஒருவர்க்கு உள்ள வெறுக்கை" - ஒருவனுக்கு வலிமையாவது ஊக்க மிகுதியே - என்று வள்ளுவன் சொன்னது போல் அதன்பின் 55 ஆண்டுகள் வாழங்வாங்கு வாழ்ந்து காட்டிய ஒப்பரிய ஆற்றலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்.

தனது தசை மீதான கட்டுப்பாட்டை ஹாக்கிங் கொஞ்சம் கொஞ்சமாக இழக்கத் தொடங்கிய போதிலும் துன்பத்துடன் சிறுது தொலைவு நடப்பது, எளிய வேலைகளைச் செய்வது, உடைகளை மாற்றிக் கொள்வது போன்றவற்றைச் செய்தார். 1965இல் ஜேன்வைல்டு என்கிற மொழியியல் மாணவியை மணந்தார். இவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தனர்.

1974இல் கருந்துளைகள் பற்றிய மர்ம முடிச்சுகளை ஹாக்கிங் கட்டவிழ்த்தார். இதுவே இவரது முதன்மையான கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது. "கருந்துளைகள் உண்மையில் கருப்பாக இருப்பதில்லை. அவற்றிலிருந்து ஒரு கட்டத்தில் கதிர்வீச்சும், அணுத்துகள்களும் கசியத் தொடங்கும்; இறுதியில் வெகுநீண்ட யுகங்களுக்குப் பிறகு கருந்துளை வெடித்து மறைந்துவிடும்" என்று கண்டறிந்து அறிவித்தார். இதை அறிவியல் முறையில் எண்பித்தார். இதற்கு ஹாக்கிங் கதிர்வீச்சு என்று பெயரிடப்பட்டது. அவரது கதிர்வீச்சு குறித்த



2007 ஏப்பிரல் 26 அன்று அட்லாண்டிக் கடலுக்கு மேலே 24,000 அடி உயரத்தில் வானூர்தியில் சுழியம் புவி ஈர்ப்பு நிலையை அனுபவிக்கும் ஹாக்கிங்

சூத்திரத்தைத் தனது கல்லறையில் பொறித்து வைக்க வேண்டும் என்று 2002இல் ஹாக்கிங் விருப்பம் தெரிவித்தார்.

1985ஆம் ஆண்டு ஹாக்கிங் சுவிட்சர்லாந்துக்குச் சென்றார். அங்கே அவருக்கு நுரையீரல் அழற்சி நோய் (நிமோனியா) ஏற்பட்டது. "அவர் உயிர்ப் பிழைக்க வாய்ப் பில்லை; அதனால் அவர் உடலிலிருந்து உயிர்க்காக்கும் கருவிகளை அகற்றிவிடலாம்" என்று மருத்துவர்கள் கூறினர். இதை ஏற்க மறுத்த அவருடைய மனைவி ஹாக்கிக்கைக் கேம்பிரிட்ஜ் மருத்துமனையில் சேர்த்தார். ஹாக்கிங்கிற்கு மூச்சுக் குழலில் அறுவை செய்யப்பட்டது. நோயின் பிடி யிலிருந்து மீண்டார். ஆனால் அதுவரை சிரமப்பட்டுப் பேசிக் கொண்டிருந்த ஹாக்கிங்கின் பேச்சுத்திறன் முற்றிலுமாகச் செயலிழந்துவிட்டது.

அந்நிலையிலும் ஹாக்கிங் மனந்தளரவில்லை. அவர் தன்னுடைய கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உயர் தொழில்நுட்பம் கொண்ட கணினி அவருடைய சக்கர நாற்காலியில் பொருத்தப்பட்டது. ஒன்றிரண்டு விரல் அசைவுகள், கன்னத்தின் அசைவு ஆகியவற்றைக் கொண்டு கணினியில் சொற்களை உருவாக்கினார். இத்தன்மையில் பல அறிவியல் நூல்களை எழுதினார். இவ்வாறு ஹாக்கிங் எழுதிய "காலம் ஒரு வரலாற்றுச் சுருக்கும்" எனும் நூல் 1988இல் வெளிவந்தது. அதிக அளவில் விற்பனையாகும் நூல் பட்டியலில் 237 கிழமைகள் இந்நூல் தொடர்ந்து இடம்பெற்று கின்னஸ் சாதனைப் படைத்தது. இந்நூல் நாற்பது மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூல் தோழர் நலங்கிள்ளியின் சிறந்த தமிழாக்கத்தில் 2002 ஆம் ஆண்டு வெளிவந்தது. சார்பியல் கோட்பாடு, குவாண்டம் கோட்பாடு, கருந்துளைகள், வெளி-காலம் (Space and Time) முதலான அறிவியல் கோட்பாடுகளைச் சாதாரண மக்களும் புரிந்துகொண்டு விவாதிக்கும் நிலையை இந்நூல் ஏற்படுத்தியிருப்பது ஹாக்கிங்கின் மாபெரும் வெற்றியாகும்.

உலக நடப்புகள் குறித்து அவ்வப்போது ஹாக்கிங் தன்னுடைய கருத்துகளை வெளியிட்டுவந்தார். வியத்நாம் மீதான அமெரிக்காவின் படையெடுப்பபைக் கடுமையாகக் கண்டித்தார். இசுரேல் நாட்டு அரசு தங்கள் நாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தது. இசுரேல் பாலஸ்தீன மக்கள் மீது நடத்தும் இனவெறித் தாக்குதலைக் கண்டிக்கும் வகையில் அந்த அழைப்பை ஏற்க மறுத்தார். 2007 ஆம் ஆண்டில் ஹாக்கிங், "உலகளாவிய அணு ஆயுதப்போர், மரபணுத் தொழில்நுட்பம் மூலம் வடிவமைக்கப்பட்ட வைரசு, இன்னும் நாம் கற்பனையே செய்திராத ஆபத்துகள் போன்றவற்றால் ஏற்படும் பேரழிவால் பூமியில் உயிர் வாழ்க்கைத் துடைத் தழிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது" என்று எச்சரித்தார்.

சக்கர நாற்காலியில் கழுத்துக்குக்கீழ் முற்றிலுமாகச் செயலிழந்து அமர்ந்திருந்தபோதிலும் ஹாக்கிங் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்ததுடன், கருத்தரங்குகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று மக்களைச் சந்திப்பதில் பேரார்வம் கொண்டிருந்தார். 2012இல் இலண்டனில் மாற்றுத் திறனாளிகளுக்காக நடைபெற்ற ஒலிம்பிக் விளை யாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நகைக்சுவையாகக் பேசும் இயல்பினராக விளங்கினார். இயல்பாகப் பேசுந்திறனை இழந்தபிறகு, கணினியில் அவர் உருவாக்கும் சொற்கள் பேச்சொலியாக மாற்றப்பட்டன. ஒரு நிமிடத்திற்கு 15 சொற்கள் வரை அவரால் உருவாக்க முடிந்தது. அப்போது ஹாக்கிங் "குரலை இழக்கும்முன் பேசியதைவிட கணினி மூலம் ஓரளவு நன்றாகவே பேச முடிகிறது. இங்கி லாந்துக்காரனான என்னுடைய செயற்கைக் குரல் அமெரிக்க



2009 ஆகத்து 12இல் குடியரசுத் தலைவர் ஒபாமா அமெரிக்காவின் உயரிய சுதந்தர விருதை ஹாக்கிங்கிற்கு அணிவிக்கிறார்

ஆங்கில ஒலிப்புடன் இருப்பதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை'' என்று சொன்னார். சொற்களைப் பேச்சொலியாக மாற்றும் கருவி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் தயாரிக்கப்பட்டதே அதற்குக் காரணமாகும்.

குன்றாத ஆர்வத்துடன் வாழ்ந்தவர் ஹாக்கிங். சூடான காற்று நிரம்பிய பலூனில் பறந்து தனது 60ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். 2007இல் தனித்தவகைமையில் வடிவமைக்கப்பட்ட போயிங் 727 வானூர்த்தியில் சுழியம் ஈர்ப்பு விசை நிலையிலான பயணத்தை மேற்கொண்டு எடையற்ற தன்மையை அனுபவித்தார். இதுபோன்ற ஆபத்தான செயல்களில் ஏன் ஈடுபடுகிறீர்கள் என்று ஹாக்கிங்கிடம் கேள்வி கேட்டபோது, ''உத்வேகத்தில் எந்த ஊனமும் இல்லாதபோது, உடல் ஊனங்களால் முடங்கிப் போய்விடக் கூடாது என்று எல்லோருக்கும் உணர்த்திட விரும்பினேன்'' என்று விடை கூறினார்.

1982இல் ''பிரிட்டிஷ் பேரரசின் கமாண்டர்'' என்ற விருது ஹாக்கிங்கிற்கு வழங்கப்பட்டது. 2009ஆம் ஆண்டு குடிரயசுத் தலைவராக இருந்த ஒபாமா, அமெரிக்காவின் மிக உயரிய விருதான சுதந்தரத்திற்கான விருதை ஹாங்கிங்கிற்கு வழங்கியபோதிலும் அவருக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை. இதுகுறித்து அவருக்கே உரிய எள்ளல் தன்மையில், ''ஆராய்ந்து பார்த்து உறுதி செய்யப்பட்ட கோட்பாட்டியல் பணிகளுக்குத் தான் நோபல் பரிசு வழங்கப்படுகிறது; நான் எந்த விஷயம் குறித்து கோட்பாடுகளை உருவாக்கினேனோ அதை ஆராய்ந்து பார்ப்பது மிகமிக கடினம்'' என்று சொன்னார். ஹாக்கிங் எழுதிய ''தி தியரி ஆஃப் எவ்விரிதிங்'' (The Theory of Everything) நூலை அடிப்படையாகக் கொண்டு அவரைப் பற்றிய திரைப்படம் தயாரிக்கப்பட்டது. அதில் ஸ்டீபன் ஹாக்கிங்காக நடித்த நடிகருக்கு 2014ஆம் ஆண்டு சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருது வழங்கப்பட்டது.

''இந்தப் பேரண்டத்தின் வியத்தகு நுண்ணிய வடிவமைப்பையும் இயக்கத்தையும் பார்க்கும்போது, ஒரு பேராற்றல் தான் (கடவுள்) படைத்திருக்க முடியும்'' என்று நியூட்டன் சொன்னார். ஆனால் ஹாக்கிங், ''இப்பேரண்டத்தின் உருவாக்கத்தைப் பற்றி விளக்குவதற்கு இந்தப் பேரண்டத்திற்கு வெளியில் உள்ள கடவுள் போன்ற எதன் உதவியையும் நாடவேண்டியதில்லை. இறைவன் உலகைப் படைத்தார் என்று நம்புவதற்கு எந்தக் காரணமும் இல்லை'' என்று கூறினார்.

''தி கார்டியன்'' ஏட்டிற்கு அளித்த பேட்டியில், ''மனித மூளையைக் கணினியைப் போலவே நான் கருதுகிறேன். அதன் உட்கூறுகள் எல்லாம் வேலையை நிறுத்திக் கொள்ளும் போது அதுவும் (மூளை) வேலையை நிறுத்திக் கொள்ளும். முற்றிலும் பழுதுபட்டு இயக்கம் நின்றுபோன கணினிக்கு சொர்க்கமோ அடுத்த பிறவியோ கிடையாது. சொர்க்கம், அடுத்த பிறவி என்ற கதையெல்லாம் இருட்டைப் பார்த்து பயப்படுபடுவர்களுடையது'' என்று ஹாக்கிங் கூறியது பெரியார் பேசுவது போலவே இருக்கிறது.

ஸ்டீபன் ஹாக்கிங்கின் மறைவுக்குத் தலைமை அமைச்சர் என்ற முறையில் மரபான இரங்கல் அறிக்கை வெளியிட்டார் நரேந்திர மோடி. அனால் ஹாக்கிங் மறைந்து இரண்டு நாட்கள் கழித்து - 16.3.2018 அன்று மணிப்பூரில் நடைபெற்ற 105ஆவது இந்திய அறிவியல் மாநாட்டில் நடுவண் அரசின் அறிவியல் அமைச்சர் ஹர்ஷ்வர்தன் பிரதமர் நரேந்திரமோடியின் முன்னிலையில், ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் புகழ்பெற்ற e=mc2 சூத்திரத்தைவிட மிகச்சிறந்த அறிவியல் சூத்திரங்கள் வேதங்களில் இருப்பதாக ஹாக்கிங் சொல்லியிருக்கிறார் என்று கூறினார். நிகழ்ச்சி முடிந்தபின், ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம், ஹாக்கிங் இவ்வாறு கூறியதற்கான ஆதாரத்தைக் கேட்டபோது, ''நீங்கள்தாள் அதைக் கண்டுபிடிக்கவேண்டும்; உங்களால் முடியாதுபோனால் நான் இதற்கான ஆதாரத்தை அளிப்பேன்'' என்று கூறி நழுவிவிட்டார்.

2001ஆம் ஆண்டு தில்லியில் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் நினைவுச் சொற்பொழிவை ஹாக்கிங் நிகழ்த்தினார். அப்போது, ''பெரும்பாலான அறிவியலாளர்கள் சோதிடவியலை ஏற்பதில்லை. ஏனெனில் எங்களுடைய கோட்பாடு ஆய்வுகள் மூலம் எண்பிக்கப்பட்டவை. ஆனால் சோதிடம் என்பது ஆய்வுகள் மூலம் எண்பிக்க முடியாத ஒன்றாகும்'' என்று கூறினார்.

மணிப்பூர் அறிவியல் மாநாட்டில் பேசிய நரேந்திரமோடி ஹாக்கிங் குறித்து அறிவியல் அமைச்சர் தெரிவித்த கருத்தை மறுக்கவில்லை. ஏனெனில் இப்போதுள்ள அறிவியல் கோட்பாடுகளும், இனி கண்டுபிடிக்கவுள்ள அறிவியல் கோட்பாடுகளும் வேதங்களில் இருக்கின்றன என்று நம்புகிறவர் நரேந்திரமோடி. அதனால்தான் தலைமை அமைச்சரான பின், மருத்துவர்கள் மாநாட்டில் பேசியபோது, வேதகாலத்திலேயே பிளாஸ்டிக் அறுவை முறை இருந்தது என்றும், அதன்படிதான் விநாயகன் தலை துண்டிக்கப்பட்ட பின் யானையின் தலை பொருத்தப்பட்டது என்றும் கூறினார்.

அரசமைப்புச் சட்டத்தில் அரசு மக்களிடம் அறிவியல் மனப்பான்மையை வளர்க்கவேண்டும் என்று கூறப்பட



2014 மே 29 அன்று இங்கிலாந்தின் அரசி எலிசபெத்துடன் ஹாக்கிங்

டுள்ளது. நீண்டகாலம் இந்தியாவை ஆட்சி செய்த காங்கிரசுக் கட்சியும் இதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வில்லை. பா.ச.க.வின் வாஜ்பாய் ஆட்சியும், மோடியின் ஆட்சியும் ‘இராமன் பிறந்த இடம்’ ‘இராமன் பாலம்’ போன்ற வை எங்கள் மத நம்பிக்கை என்று கூறி, அறிவாராய்ச்சிக்கே இடமில்லாமல் செய்துவரும் சூழலில், ஸ்டீபன் ஹாக்கிங்கின் அறிவியல் கருத்துகளை மக்களிடம் பரப்பவேண்டியது நம் கடமையாகும்.

## பொறியாளர் க.வீரமுத்து நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு விழா



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் ஆதரவாளராக இருந்து மறைந்த பொறியாளர் க.வீரமுத்து அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி 11.3.2018 ஞாயிறு காலை 10.30 மணிக்கு சென்னை சாலி கிராமம் கோல்டன் பாரடைஸ் திருமணக் கூடத்தில் நடைபெற்றது. பொறிஞர் க.வீரமுத்துவின் இளவல் க.இராமசாமி வரவேற்புரை யாற்றினார். சென்னைப் பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தர் முனைவர் பொற்கோ தலைமை தாங்கினார். சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஆ.குலசேகரன் படத்திறப்புச் செய்தார். முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி ந.இராமச்சந்திரன் நினைவு மலரை வெளியிட்டார். கவிஞர் அறிவுமதி முதல் படியைத் பெற்றுக் கொண்டார். கவிஞர் காவிரி நாடன், வெ.பாலுச்சாமி, சி.குப்புசாமி, கலசஇராமலிங்கம், டெல்டா நாரயாணசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வீ.பாரதி நன்றியுரையுடன் நினைவேந்தல் விழா நிறைவுற்றது. மா.பெ.பொ.க. சார்பில் கோவி. இராமலிங்கம், கோ.ரா.சுந்தரகாந்தம், ப.வடிவேலு ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனி அரசியல் உரிமை**

# ஏன் வேண்டும்!

“சுயராச்சிய அரசமைப்பில் பெரும்பான்மையி னரின் கொடுங்கோன்மைக்கு எதிராகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஏதேனும் ஒரு வகுப்புக் குத் தனி அரசியல் உரிமைகள் தரப்பட வேண்டும் என்றால், அது தாழ்த்தப்பட்ட வகுப்புதான் என்று பலரும் கருதி வருவதாக நான் உறுதியாக நம்புகிறேன். இதோ ஒரு வகுப்பு இருக்கிறது; இவ்வகுப்பைச் சேர்ந்தவர் கள் வாழ்வுக்கான போராட்டத்தில் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்பதில் அய்யமே கிடையாது.

அவர்களைக் கட்டிப் பிணைத்துள்ள மதமானது அவர்களுக்குக் கவுரவத்துக்குரிய இடம் தருவதற்குப் பதிலாக அவர்களைத் தொழுநோயாளிகளாக, சாதா ரணமாகக் கலந்து உறவாடத் தகாதவர்களாக முத்திரை யிடுகிறது. பொருளாதார வகையில் சொன்னால், இவ்வகுப்பானது தனக்கென்று சுயேச்சையான வாழ்க்கை வழி ஏதுமில்லாமல், அன்றாடம் சோற்றுக்கு உயர் வகுப்பு இந்துக்களையே முழுக்க முழுக்க சார்ந்திருக் கிறது.

இந்துக்களின் சமூக காழ்ப்புகளின் காரணத்தா லேயே எல்லா வழிகளும் அடைபட்டுவிட்டன என்ப தல்ல. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழ்க்கையில் ஏணிப்படியில் ஏறுவதற்கு வாய்ப்பே இல்லாமல் செய்யும் பொருட்டு சாத்தியமான ஒவ்வொரு கதவையும் மூடித் தாழிட இந்து சமூகம் முழுவதிலும் திட்டவட்டமான முயற்சி நடைபெறுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் சாதி இந்துக்கள், தங்களிடையே எவ்வளவுதான் பிளவு பட்டிருந்தாலும், சாதாரண இந்தியக் குடிமக்களின் தரப் பிலான சிதறலான சிறுபகுதியாய் அமைந்துள்ள தாழ்த் தப்பட்ட வகுப்பினரின் தரப்பிலான எந்தவொரு முயற்சி யையும் ஈவிரக்கமின்றி அடக்கி ஒடுக்குவதற்கு எப் போதும் நிரந்தர சதியில் ஈடுபட்டிருப்பதாகச் கூறுவது மிகையாகாது”

- டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்

(1932இல் பிரித்தானிய அரசு இந்தியாவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மேதை அம்பேத்கர் கோரிய தனிவாக்காளர் தொகுதி முறையை வழங்கியது. அதை எதிர்த்து காந்தியார் எரவாடா சிறையில் சாகும் வரை உண்ணாநோன்பை மேற்கொள்ளப் போவதாக அறிவித் திருந்தார். காந்தியார் தன் நிலையை மாற்றிக் கொள்ளு மாறு வேண்டி அம்பேத்கர் 1932 செப்டம் பர் 19 அன்று வெளியிட்ட அறிக்கையின் ஒரு பகுதி மேலே தரப் பட்டுள்ளது)

# சனநாயகமும் இந்தியத் தேர்தல் ஆணையமும்

**- குட்டுவன்**

இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 68 ஆண்டுகள் நிறைவடையப் போகிறது. இந்திய அரசியலின் தன்மைகளை அடையாளப்படுத்துவதில் அரசியல் கட்சிகள்தான் முதலிடம் வகிக்கின்றன. இன்று பணக்காரர்களும் தொழிலதிபர்களும்தான் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற நிலையில் அரசியல் உள்ளது. முதலாளிகள், அரசியல் தலைவர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோரிடம் ஒரு கமுக்கமான உடன்பாடு ஏற்பட்டுள்ளது. சாதாரண மக்களின் குரல் எடுபடவே இல்லை.

நேரு காலத்தில் இந்திய சனநாயகத்தைப் பற்றியும் சமூகப் பொருளாதார அமைப்புகள் பற்றியும் பல அறிஞர்கள் நூல்கள் வாயிலாகவும் கட்டுரைகள் வழியாகவும் கருத்துகளைத் தெரிவித்தனர். நூல்களைத் தொடர்ந்து படிக்கும் ஆர்வமுடைய நேரு, பல அறிஞர்களுடன் உரையாடி இந்தியாவின் சனநாயகத் தன்மைகளையும் நெறிகளையும் உயர்த்துவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டார். நோபல் பரிசுப் பெற்ற ஸ்விடன் நாட்டைச் சேர்ந்த பொருளாதார அறிஞர் குன்னர் மிர்தல் ''ஆசிய நாடகம்'' (Asian Drama) என்ற தனது நூலில் ''இந்தியாவை உயர்குடி மக்கள்தான் ஆளுகின்றனர். ஏழைகள் தங்களுடைய கோரிக்கைகள் என்ன என்பதையே அறியாமல் உள்ளனர். அதனால் அவர்களுடைய குரல்கள் ஆட்சியியலில் எடுபடவே இல்லை'' என்றார். இந்த நிலைமைதான் இன்றும் தொடர்கிறது. அண்மையில் வெளியான புள்ளிவிவரப்படி ஒரு விழுக்காடு பெரும் செல்வந்தர்கள் இந்தியாவின் 76 விழுக்காட்டு சொத்துகளையும் பணத்தையும் முடக்கிவைத்துள்ளனர். 50 விழுக்காடு ஏழை மக்கள் ஒரு வேளை உணவிற்கே திண்டாடுகின்றனர். இத்தகைய சூழலில் சனநாயகமும் சனநாயகத்திற்குப் பாதுகாப்பாக உள்ள நீதித் துறையிலிருந்து நிர்வாகத் துறை வரை கட்சி அரசியலுக்கு அஞ்சி நீதியை ஏழைகளுக்கு வழங்க மறுக்கின்றன.

நேரு காலத்தில் காங்கிரசுக் கட்சியில் உட்கட்சி சனநாயகம் ஓரளவிற்காவது இயங்கியது. பலர் கூறுவது போல இந்தியாவில் சனநாயகம் சிதைந்து கொண்டே வருகிறது. சட்டமன்ற நாடாளுமன்றத் தேர்தல்களின் போது நடைபெறும் ஊழல்கள், தேர்தல் களத்தில் வேட்பாளர்களாகப் போட்டியிடுபவர்களின் குற்றப் பின்னணி ஆகியவை சனநாயகத்தைக் காப்பதற்குப் பெரும் அறைகூவல்களாக உள்ளன. இந்திய அரசியலில் குற்றப் பின்னணியைப் பற்றி ஆய்வு செய்த வோரா (VOHRA) குழுவின் அறிக்கையை இன்று வரை ஒன்றிய அரசு மக்கள் மன்றத்தில் வைக்கவே இல்லை. காரணம் அக்குழுவின் அறிக்கையில் குற்றப் பின்னணியோடு அரசியல் களத்தில் இறங்குபவர்களின் எண்ணிக்கைப் பற்றி விரிவாகச் சுட்டப்பட்டுள்ளது. இத்தகைய குற்றப் பின்னணி உடையவர்கள் எவ்வாறு அரசு நிர்வாகங்களில் தலையிட்டு ஊழல்களைப் பெருமளவிற்குச் செய்கிறார்கள் என்பதையும் இக்குழுச் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்திய சனநாயகத்தின் பல்வேறு கூறுகளை ஆய்வு செய்தால் முதன்மையான அமைப்பாக இந்தியத் தேர்தல் ஆணையம் உள்ளது. இவ்வாணையம் தற்போது தனது கடமையிலிருந்தும் பொறுப்பிலிருந்தும் வழுவி நீதி மன்றத்தின் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது. 2014க்குப் பிறகு இந்தியத் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் ஆளும் கட்சிக்குச் சார்பாகவே அமைந் துள்ளன என்ற குற்றச்சாட்டுகள் எழுந்த வண்ணமே உள்ளன. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமை ஆணையருக்கான தகுதிகள் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெறவில்லை என்பது வருத்தத்திற் குரியது. தற்போது எழும் பெரும் சிக்கல்களுக்கு இதுவே காரணமாக உள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 324(1)ஆம் பிரிவில் வாக்காளர் பட்டியலை உருவாக்குதல், நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களை நடத்துதல் இந்தியக் குடியரசுத் தலைவர், துணைத்தலைவர் தேர்தல்களை நடத்துதல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தியத் தேர்தல் ஆணையரை இந்தியக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார் என்ற பிரிவும் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையரின் பணிகள் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளின் பணிகளுக்கு ஒப்பானவை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. தலைமைத் தேர்தல் ஆணையரையும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும் நீக்க வேண்டும் என்றால் நாடாளு மன்றத்தின் வழியாகத்தான் நீக்க முடியும் என்ற பிரிவு இந்தியத் தலைமை தேர்தல் ஆணையருக்கு உயர் பாதுகாப்பை வழங்குகிறது. 1950லிருந்து தொடங்கி இன்றுவரை 22 தலைமைத் தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றியுள்ளனர். 1991ஆம் ஆண்டு தேர்தலின் போது டி.என்.சேஷன் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார எல்லைக்குள் அதிரடியான நடவடிக் கைகளை எடுத்து, தேர்தலில் ஈடுபட்ட கட்சிகளின் தேர்தல் செலவுகளை வெகுவாகக் குறைத்தார். மேலும் அரசியல் கட்சிகள் அச்சம் கொள்கிற அளவிற்குத் தேர்தல் செலவை ஆய்வும் செய்தார். அதற்குப் பிறகு எடுத்துக்காட்டான முறையில் 2001 முதல் 2004 வரை இருந்த லிங்டோ சிறப்பான முறையில் பணி புரிந்தார். பெரும்பாலான தேர்தல் ஆணையர்கள் இந்திய ஆட்சிப் பணியில் இருந்து நியமனம் செய்யப்பட்டனர். ஒன்றிய அரசின் பரிந்துரை வழியாகக் குடியரசுத் தலைவர் தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கிறார். உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் போது மூத்த நீதிபதிகள் அடங்கிய (கொலிஜியம்) குழு நீதிபதிகளின் தகுதிகளை ஆய்வு செய்கிறது. ஆனால் நீதிபதிகள் நியமனம் போன்று எவ்வித நடைமுறைகளும்

தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் போது கடைப்பிடிக்கப்படு வதில்லை.

பிரதமர் மோடி குஜராத் மாநிலத்தின் முதல்வராக இருந்தபோது தலைமைச் செயலாளராகப் பணியாற்றி, அவருடைய கட்டளைகளைத் தலை மேல் ஏற்று நடைமுறைப்படுத்திய ஒரே தகுதியின் அடிப்படையில் ஜூலை 6 2017இல் அச்சல் குமார் ஜோதி இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார். இவரது நியமனத்திற்குத் பிறகுதான் தேர்தல் ஆணை யத்தின் மீது இருந்த நம்பிக்கை தவிடுபொடியானது. நடந்து முடிந்த குஜராத் மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ச.க வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் மற்ற மாநிலங்களின் தேர்தல் அறிவிப்போடு குஜராத் சட்ட மன்றத் தேர்தலை அறிவிக்காமல் சில மாதங்கள் தள்ளி வைத்தது, ஓய்வு பெற்ற பல தலைமைத் தேர்தல் ஆணையர்களுக்கு அதிர்ச்சியை அளித்தது. குறிப்பாக 2010லிருந்து 2012 வரை தேர்தல் ஆணையராக இருந்து நேர்மையாகப் பணியாற்றிய குரேஷி ஊடக விவாதத்தில் பங்கேற்ற போது இது போன்று ஒரு சட்ட மன்றத் தேர்தல் அறிவிப்பைத் தள்ளிப் போட்டது முறை யற்ற செயல் என்றார். ஜோதி தள்ளி போட்டதன் காரண மாக அந்தக் குறுகிய காலத்தில் ஒன்றிய பாஜக அரசின் அழுத்தத்தின் பேரில் 120 பொருட்களின் மீது சரக்கு-சேவை வரி விகிதம் அதிரடியாகக் குறைக்கப்பட்டது. வரி விகிதம் குறைக்கப்பட்ட பொருட்களில் பெரும்பாலானவை குஜராத் மாநிலத்தில் உற்பத்திச் செய்யப்படுபவை என்பதும் வெளிச்சத்திற்கு வந்தது. இப்படிப்பட்ட அப்பட்டமான அரசியல் ஏமாற்றுத்தனத்தை பாஜக செய்வதற்கு வழி வகுத்தவர் ஜோதி என்றால் மிகையாகாது.

மேலும் இரட்டைப் பதவிகளை வகித்தனர் என்ற குற்றச் சாட்டின் அடிப்படையில் தில்லி முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சியைச் சார்ந்த 20 சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்கத்தை ஜோதி ஓய்வு பெறும் நாளன்று அறிவித்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. இந்த அறிவிப்பை 24 மணி நேரத்திற்குள் இந்தியக் குடியரசுத் தலைவரும் ஏற்றார் என்பதும் இந்திய சனநாயகத்தின் மீது விழுந்த பேரிடியாகும்.

20 சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்கம் செல்லாது என்று தில்லி நீதிமன்றத்தின் அமர்வு மார்ச் 23 2018 அன்று அறிவித்துள்ளது. குறிப்பாக தேர்தல் ஆணையம் இயற்கை நீதியின் கோட்பாடுகளுக்கு (Principles of Natural Justice) எதிராகச் சட்டத்தைத் தவறான முறையில் பயன்படுத்திப் பழுதாக்கியுள்ளனர் என்று தீர்ப்பில் கடுமையான முறையில் அமர்வு நீதிபதிகள் குறிப்பிட்டுள் ளனர்.

மேலும் ஜெயலலிதா மறைவிற்குப் பிறகு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்தி ஆர்.கே.நகர் சட்டமன்ற இடைத்தேர்தலில் தினகரன் பிரிவு தேர்தல் சின்னமாக குக்கர் சின்னம் பெறுவதை இறுதி நாள் வரை இழுத்தடித்தது தினகரனை அச்சுறுத்த - இரட்டை இலை யைப் பெறுவதற்காகத் தேர்தல் ஆணையருக்குப் பணம் அளிக்க முயற்சி செய்தார் என்ற ஒரு வழக்கையும் போட்டு நடுநிலை தவறியது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒருதலைப் போக்கினை எதிர்த்து தில்லி உயர்நீதிமன்றத் தில் தினகரன் தொடர்ந்த வழக்கில்- மார்ச் 2018இல் தினகரன் புதிய கட்சித் தொடங்குவதற்கும் குக்கர் சின்னத்தைத் தேர்தல் சின்னமாகப் பயன்படுத்துவதற்கும் ஒரு தீர்ப்பை அளித்து இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் பத்து நாட்களுக்குள் ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று தில்லி உயர்நீதிமன்றம் கேட்டுக்கொண்டது.

புதுதில்லி உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு இந்தியத் தலைமை தேர்தல் ஆணையம் தனது நடுநிலைமைத் தகுதியை இழந்துவிட்டதோ என்ற ஐயத்தை எல்லோர் உள்ளத்திலும் ஏற்படுத்தியது.

தலைமைத் தேர்தல் ஆணையர் நியமன விவகாரத் தில் தலையிடும் போக்கு காங்கிரசு ஆட்சியில் தான் தொடங்கியது. 1989இல் இராஜிவ் காந்தி பிரதமராக இருந்த போது தலைமைத் தேர்தல் ஆணையரின் அதிகாரத் தைக் குறைப்பதற்காக, தலைமைத் தேர்தல் ஆணை யருடன் மேலும் இரண்டு ஆணையர்களை நியமித்தார். 1990இல் பிரதமராக இருந்த வி.பி.சிங் மீண்டும் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையராக ஒருவரே இருக்கும் நிலையை உருவாக்கினார். இந்த உத்திரவுக்குப் பின் டி.என்.சேஷன் அவர்கள் பல தேர்தல் சீர்த்திருத்தங் களைக் கொண்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மீண்டும் தற்போது தலைமைத் தேர்தல் ஆணைய ராக ஒருவரும் இரண்டும் ஆணையர்களும் உள்ளனர். இருப்பினும் தேர்தல் ஆணையத்தால் இந்த குற்றப் பின்னணி அரசியலை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை. காரணம் தேர்தல் ஆணையத்தின் கைகள் ஆணையர் நியமனத்தின் வழியாகக் கட்டப் படுகின்றன. இந்திய அரசியலில் குற்றப் பின்னணி உடையவர்களைப் பற்றிப் பல குறிப்புகள் வெளி வந்துள்ளன. 1996ஆம் ஆண்டில் மட்டும் 4 ஒன்றிய அமைச்சர்கள் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றப் பின்னணி உடையவர்கள் என்று அடையாளம் காணப் பட்டுள்ளது. கொலை கற்பழிப்பு, கொள்ளை, ஆள்கடத்தல், அமைதிக்குக் கேடு விளைவித்தல் ஆட்களைத் தாக்குதல் போன்ற குற்றச் செயல்களை இவர்கள் செய்தார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணைய ராக இருந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி 2004-05இல் இந்தியாவில் இருந்த 4000 சட்டமன்ற உறுப்பினர்களில் 700 உறுப்பினர்கள் ரௌடிகள் என்றும் கடும் குற்றப் பின்னணி உடையவர்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார். ஊழலையும் குற்றச் செயல்களையும் தடுப்பதற்குப் புதிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார். சட்டத்தை உடைப்பவர் எக்காலத்திலும் சட்டத்தை இயற்றுபவராக இருக்கக் கூடாது (No law breaker ever be law maker) என்றும் குறிப்பிட்டார்.

தேர்தல் சீர்த்திருத்த அமைப்பு 16ஆவது நாடாளு மன்றத் தேர்தலின் போது (2014) வெற்றி பெற்ற வேட்பாளர்கள் சமர்ப்பித்த வேட்பு விண்ணப்பங்களை ஆய்வு செய்தது. அந்த ஆய்வின் முடிவில் 16ஆவது நாடாளுமன்றம்தான் அதிக அளவில் குற்றப் பின்னணி உடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை உடையது என்ற புள்ளி விவரத்தை அளித்தது. மொத்த நாடாளு மன்ற உறுப்பினர்களில் 34 விழுக்காட்டினர் குற்றப் பின்னணி உடையவர்கள் என்று குறிப்பிட்டுள்ளது.

2017 புள்ளிவிவரப்படி நாடாளுமன்றம் சட்டமன்ற உறுப்பினர்களில் அதிக அளவில் பெண்கள் சார்ந்த பாலியல் குற்றசாட்டுகளுக்கு உள்ளான அதிக நபர்கள் பாஜகவைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றப் பின்னணி உடைய நாடாளுமன்ற உறுப்பினர் களில் அதிக எண்ணிக்கையில் மகாராட்டிரா, உத்திரப் பிரதேசம், பீகார் மாநிலங்களில் உள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2014 நாடாளுமன்றத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்களில் 82 விழுக்காட்டினர் பணக்காரர்கள். தெலுங்கு தேசம், தெலங்கான ராஷ்டிரிய சமிதி, ஒய்.எஸ்.ஆர். காங்கிரசு ஆகிய மூன்று கட்சிகளில் தான் அதிக அளவில் சொத்து உடையவர்கள் உள்ளனர் என்பதும் இவ்வாய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய பின்னணி உடையவர்கள் சாதாரண-சாமானிய மக்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் முன் வைப்பார்களா? இந்திய நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக-பல துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் நிதிச்சட்டம் (Finance Bill) நாடாளுமன்றத்தில் மார்ச் 13 2018 அன்று எவ்வித விவாதமுமின்றி நிறை வேற்றப்பட்டுள்ளது என்பது நாடாளுமன்ற சனநாயகம் வெட்கித் தலைகுனியும் அளவில் தளர்ந்து வருகிறது என்பதற்குச் சிறந்த அடையாளம்.

இந்திய சனநாயகத்தின் முதன்மையான அமைப்பான நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றங்களுக்கும் தேர்தலை நடத்தும் இந்தியத் தேர்தல் ஆணையமும் சிதைக்கப்பட்டு வருகின்றன என்பதை மேற்கூறிய தரவுகள் சுட்டுகின்றன. இந்நிலை மாற சில அரசமைப்புச் சட்ட வல்லுநர்கள் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுப்பதற்குத் பிரதமர் நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்ற நீதிபதி ஆகியோர் கொண்ட குழுதான் எதிர்காலத்தில் தலைமைத் தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியுள்ளனர். மேலும் தேர்தலுக்கான செலவினை முழு அளவில் தேர்தல் ஆணையமே செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நேர்மையாகச் செயல்பட்ட பல முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர்கள் தேர்தல் ஆணையத்தின் வழியாக ஒன்றிய அரசிற்குப் பரிந்துரை வழங்கியுள்ளனர். அடிப் படை மாற்றங்கள் மேற்கூறிய அமைப்புகளில் ஏற்கப்படா விட்டால் இந்தியாவில் சனநாயகம் என்பது கேலிக்கூத்து என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

## காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திடு..
### காஞ்சியில் அஞ்சலகம் முன் ஆர்ப்பாட்டம்




காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத இந்திய அரசைக் கண்டித்து காஞ்சிபுரம் தலைமை அஞ்சலகம் முன் பாலாற்றுப் பாதுகாப்புக் கூட்டியக்கம் ஆர்ப்பாட்டம். 02 04 2018 திங்கட்கிழமை காலை 11 20 மணி அளவில் காந்தி சாலை தேரடி யிலிருந்து பேரணியாக புறப்பட்டு மோடி அரசே பாஜக அரசே

* அமைத்திடு அமைத்திடு காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திடு
* ஒரே தேசம் ஒரே நாடு கூப்பாடு போடும் பாஜகாவே
* காவரி தமிழகம் வர மறுப்பதேன்.
* கர்நாடகத்தில் தேர்தல் பதவி இலாபங்களுக்காக
* தமிழக காவிரியை பலிகொடுக்காதே.
* தமிழகத்தை பாலை நிலமாக்காதே.
* மீத்தேன் நிலக்கரி எடுக்க காவிரிப் படுகையை அழிக் காதே

என உணர்வெழுச்சியுடன் ஊர்வலமாக வந்து ரயில்வே சாலையில் உள்ள தலைமை அஞ்சலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பாலாற்றுப் பாதுகாப்புக் கூட்டியக்கத்தின் ஒருங்கிணைப் பாளர் காஞ்சிஅமுதன் தலைமையில் நடைபெற்ற இவ்வார்ப்பாட்டத்தில் மா.பெ.பொ.க. காஞ்சி மாவட்டச் செயலாளர் சி.நடராசன், மா.து.செயலாளர் தீ.கோபாலகிருட்டிணன், சம்பந்தம் சிவக்குமார், ஐந்திணை கலைப்பாட்டு இணை யத்தின் தலைமை நெறியாளர் பாவலர் பூங்குன்றன், காஞ்சி உலக ஒளி, தமிழ்நாடு விவசாயிகள் இயக்கச் செயலாளர் அருங்குன்றம் சி.தேவராசன் நீதி, பாலாற்றுப் பாதுகாப்புக் கூட்டியக்கத்தின் சீதாவரம் மோகன், கோ.மணிமேகலை, தமுஎகச முத்து அருணன், தன்னாட்சி தமிழகத்தின் தாண்டவமூர்த்தி, பெ.பழனி மற்றும் பொறியாளர் இரமேசு உள்ளிட்டு விவசாயிகள் பலர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டத் தை இயற்கை விவசாயி பேரின்பன் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து பேசினார்.

# சிலைகள் உடைப்பு

- இராமியா

திரிபுரா மாநிலத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட உடனேயே, அதாவது பா.ஜ.க. ஆட்சிக் கட்டிலில் அமர்வதற்கு முன்பேயே, அவசரஅவசரமாக அங்கே லெனின் சிலை உடைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைத்தால் பெரியார் சிலைகள் அனைத்தும் உடைக்கப்படும் என்று அக்கட்சியின் தேசியச் செயலாளரான எச்.ராஜா அறிவித்தார். காவிகள் ஓரிடத்தில் பெரியாரின் சிலையைச் சேதப்படுத்தவும் செய்தனர்.

ஆனால் தமிழ்நாட்டில் இதற்குக் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது. திராவிட இயக்கத்தினர் மட்டும் அல்லாது அனைத்து மக்களும் அவ்வாறு எதிர்ப்பு தெரிவித்தது ஒரு சிறப்பாகும். அதுவும் "நாங்கள் கடவுள் நம்பிக்கையாளர்கள் தான். பெரியார், கடவுளை மறுப்பவர் என்பதும் நன்றாகத் தெரியும். அந்த வகையில் பெரியாருடன் மாறுபட்டாலும், அவர் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு ஆற்றிய பெரும் பணியை அறிவோம். எங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கு அவர்தான் வழிகாட்டி" என்று தெளிவான முழக்கத்துடன் அவர்கள் குரல் கொடுத்ததானது பெரியாரின் எதிரிகளை மிரளச் செய்து இருக்கிறது.

இதைத் தொடர்ந்து நாட்டின் பிற பகுதிகளில் அம்பேத்கரின் சிலைகள் சேதப்படுத்தப்பட்டன. எது நடந்தாலும் கருத்து சொல்வது இல்லை என்ற முடிவோடு "அமைதி" காத்துக் கொண்டு இருந்த பிரதமர் மோடி வாயைத் திறந்தே தீர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேற்கு வங்காளத்தில் ஜனசங்கம் (அந்நாளைய பா.ஜ.க.) கட்சியின் நிறுவனர்களில் ஒருவரான சியாமா பிரசாத் முகர்ஜியின் சிலை சேதப்படுத்தப்பட்டது. உடனே பிரதமர் மோடி சிலைகளை உடைப்பது தவறு என்று திருவாய் மலர்ந்து அருளிவிட்டார்.

ஆனால் "நான் இப்படிச் சொன்னேன் என்பதற்காக நீங்கள் அமைதியாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை." என்பது காவிக் கும்பலினரின் இரகசியக் குறியீடு போல் இருக்கிறது. தமிழ்நாட்டு மக்களின், அதுவும் திராவிட இயக்கங்களைச் சாராத மக்களின் கடும் எதிர்ப்பைக் கண்டு அஞ்சி, தங்கள் பெரியார் சிலை உடைப்புப் பேச்சுக்கு வருத்தம் தெரிவித்த காவிக் கும்பலினர் மீண்டும் வீரியமாக அப்பேச்சைத் தொடர்ந்து பேசி வருகின்றனர். ஓரிடத்தில் உடைக்கவும் செய்துள்ளனர்.

பெரியார் சிலையை உடைத்தது / உடைப்பது தவறு என்று கொந்தளித்த மக்களைப் பார்த்து "அது ஒரு கல் தானே? அதை உடைப்பதில் மனம் ஏன் நோகிறது?" என்றும் "பெரியார் விநாயகர் சிலைகளை உடைத்தாரே?" என்றும் வினாக்களை எழுப்புகின்றனர்.

விநாயகர் சிலைகளின் மீது கற்பித்து வைக்கப்பட்டு உள்ள புனிதம் உண்மை அல்ல என்று மெய்ப்பிப்பதற்காகவே பெரியார் அவற்றை உடைத்துக் காண்பித்தார். அதுவும் கோவில்களில் உள்ள சிலைகளையோ, மற்றவர்களுக்கு உரிமையான சிலைகளையோ அவர் உடைக்கவில்லை. தன் சொந்தக் காசைச் செலவழித்து விநாயகர் சிலைகளை வாங்கி உடைத்துக் காண்பித்தார். அதையும் அவர் இரகசியமாகச் (பெரியார் சிலைகளைக் காவிகள் திருட்டுத்தனமாக உடைப்பது போல்) செய்யவில்லை. மக்கள் திரளுக்கு நடுவே "இது கல் தான். இதில் புனிதம் ஒன்றும் இல்லை. இதை உடைப்பதால் எந்தக் கேடும் வந்து விடாது என்று புரிய வைப்பதற்காகவே உடைக்கிறேன்." என்று வெளிப்படையாகக் கூறியே உடைத்தார். இதே போல் கோவிலில் உள்ள கடவுள் சிலைகளையும் உடைத்தால் ஒரு கேடும் வந்து விடாது என்று பிரச்சாரம் செய்தாரே ஒழிய கோவிலுக்குள் நுழைந்து அங்கிருக்கும் சிலைகளை உடைக்கவில்லை.

காவிக் கும்பலினரே! நீங்கள் பெரியார் சிலைகளை உடைக்க வேண்டும் என்று விரும்பினால் முதலில் அவற்றை விலை கொடுத்து வாங்குங்கள். பின் அவற்றை உடைப்பதற்கான காரணங்களைத் தெளிவாகக் கூறுங்கள். பின் உடையுங்கள். பெரியார் இருந்திருந்தால் தன் சிலையை உடைக்க முனைபவர்களுக்குத் தானே சிலைகளை விற்க ஆயத்தமாக இருப்பதாக அறிவித்து இருப்பார்.

1970-71ஆம் ஆண்டில் பெரியார் இராமர் படத்திற்குச் செருப்பு மாலை அணிவித்தும், செருப்பால் அடித்துக் கொண்டும் ஊர்வலம் சென்ற போது, பெரியார் படத்திற்குச் செருப்பு மாலை அணி விப்போம் என்றும், பெரியார் படத்தைச் செருப்பால் அடிப்போம் என்றும் கூறி, சனாதனவாதிகள் கொதித்து எழுந்தனர். உடனே பெரியார் செருப்பு மாலை அணிவிப்ப தற்காகத் தன்னுடைய உருவப் படம் விலைக்குக் கிடைக்கும் என்றும், வெளியில் போலியான உருவப்படம் வாங்கி ஏமாறாமல் தன்னிடம் தத்ரூபமான உருவப் படத்தை வாங்கிச் செருப்பு மாலை அணிவிக்கலாம் என்றும், படத்தைச் செருப்பால் அடிக்கலாம் என்றும் அறிவித்தார். அது மட்டும் அல்லாமல் மாலையாக அணிவிப்பதற்கும் படத்தை அடிப்பதற்கும் செருப்புகளையும் விற்பனை செய்ய ஆயத்தமாக இருப்பதாகவும் அறிவித்தார். இன்னும் வேண்டினால் பிய்ந்த செருப்புகளையும் அளிக்கத் தயார் என்றும் கூறினார். சனாதனக் கும்பல் பேச்சு மூச்சில்லாமல் அடங்கி விட்டது.

இப்போதும் காவிகளுக்கு, பெரியாரின் நிலைப்பாட்டையே அறைகூவல் விடுக்கிறோம். நீங்கள் பெரியார் சிலைகளை உடைக்க வேண்டும் என்றால் முதலில் அவற்றை விலை கொடுத்து வாங்குங்கள். பின் என்ன காரணங்களுக்காக உடைக்க விரும்புகிறீர்கள் என்று தெளிவாக அறிவியுங்கள். அக்காரணங்கள் ஏற்புடையவை என்றால் மற்றவர்களும் உங்களைப் பின்பற்றுவார்கள். அதை விடுத்து மற்றவர்கள் அமைத்த, மற்றவர்களுக்கு உரிமையான சிலைகளை உடைக்க நினைக்காதீர்கள். அது திருட்டும் கொள்ளையும் ஆகும்.

## இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த

# மும்பை உழவர் பேரணி

- க.முகிலன்

இந்தியாவின் நிதிக்கான தலைநகரமாகத் திகழும் மும்பை மாநகர மக்கள் 2018 மார்ச்சு 11 ஞாயிற்றுக் கிழமை அன்று தங்கள் கண்களால் நம்பமுடியாத ஒரு காட்சியைக் கண்டு வியந்தனர். 40,000 உழவர்கள் தலையில் சிவப்புத் தொப்பியை அணிந்துகொண்டு, தங்கள் கைகளில் சுத்தி-அரிவாள் பொறித்த செங் கொடிகளை ஏந்தியவாறு, போக்குவரத்துக்கோ, மக்க ளுக்கோ, உடைமைகளுக்கோ எந்த இடையூறும் உண்டாக்காமல், ஒப்பற்ற ஒழுங்கமைவுடன் பேரணி யாக வந்தனர்.

6.3.2018 அன்று மகாராட்டிரத்தின் நாசிக் நகரில் 20,000 பேருடன் புறப்பட்ட உழவர்களின் பேரணியில் வழி நெடுகிலும் உழவர்கள் இதில் சேர்ந்ததால் மும்பை நகருக்குள் நுழைந்தபோது 40,000 பேர் என்று பெருகியது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உழவர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தமிழகத்தைச் சேர்ந்த அய்யாக் கண்ணு நூற்றுக்கும் மேற்பட்ட உழவர்களுடன் தில்லி யில் பல மாதங்கள் பலவகையிலான போராட்டங் களை நடத்தினார். 2017 நவம்பர் மாதம் மகாராட்டிரம், ஆந்திரா, தமிழ்நாடு, மத்தியப்பிரதேசம், கருநாடகம் உள்ளிட்டப் பல்வேறு மாநிலங்களின் உழவர்கள் தில்லி நாடாளுமன்ற வீதியில் பேரணி நடத்தினர். வேளாண் விளை பொருள்களுக்கு உரிய விலையை வழங்க வேண்டும்; ஊரக வங்கிகள் உள்ளிட்ட எந்த வங்கியில் வேளாண்மைக்காகக் கடன் பெற்றிருந்தாலும் அதைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்ற இரண்டு கோரிக் கைகளை முதன்மைப்படுத்தி தில்லியில் உழவர்கள் பேரணி நடத்தினர்.

உழவர்கள் நடத்தும் போராட்டங்களில் பொதுவாக நீர்ப்பாசன வசதி உள்ள உழவர்களே கலந்து கொள் வார்கள். ஆனால் 2018 மார்ச்சு 6 முதல் 12 மகாராட் டிரத்தில் உழவர்கள் நடத்திய பேரணியில் நாசிக், தானே, பால்கர், நந்துர்பார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பழங்குடி உழவர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து




நாசிக்கிலிருந்து 180 கி.மீட்டர் நெடும் பயணமாக வந்த 40,000 உழவர்கள் 11-3-2018 அன்று மும்பை நகருக்குள் நுழையும் காட்சி



பேரணியில் வந்த உழவர்களுக்கு மக்கள் உணவளித்தனர்

கொண்டனர். இவர்கள் காலங்காலமாகக் காட்டுப் பகுதிகளில் உழுது பயிரிட்டு வரும் நிலங்களைத் தமக்கு உரிமையாக்கும் வகையில் அரசு பட்டா வழங்கவேண்டும் என்று நீண்டகாலமாகக் கோரி வருகின்றனர். நிலப் பட்டா இருந்தால்தான் வங்கிகளில் வேளாண் கடன் பெற முடியும். அரசு அறிவிக்கும் கடன் தள்ளுபடி போன்ற சலுகைகளைப் பெற முடியும். நிலப்பட்டா இல்லாததால் தனியாரிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கி வேளாண்மை செய்யும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

நடுவண் அரசு, 2006 ஆம் ஆண்டு ‘‘பழங் குடியினர் மற்றும் வாழையடி வாழையாகக் காடுகளில் வாழ்வோருக்குக் காடுகள் மீதான உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தை [Tribes and other Traditional Forest Dwellers (Recognition of Forest Right) Act 2006] இயற்றியது. 1991இல் புதிய பொருளாதாரக் கொள்கையை நடுவண் அரசும், மாநில அரசுகளும் செயல்படுத்தத் தொடங்கியபின், பெரு முதலாளிய நிறுவனங்கள் காடுகளையும் அதன் கனிம வளங்களையும் கொள்ளையடிக்க அரசுகளும், அதிகார வர்க்கமும், அரசியல்வாதிகளும் துணைபோனதால், காடுகள் மீது பழங்குடியினர் காலங்காலமாகக் கொண்டிருந்த உரி மைகளை இழந்ததுடன், அவர்களின் வாழ்விடங்களிலிருந்து காவல் துறையின் துணையுடன் விரட்டியடிக்கப்படும் கொடிய நிலையும் ஏற்பட்டது. இதைத் தடுப்பதே 2006 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்தின் நோக்கமாகும்.

மற்ற மாநிலங்களைவிட மகாராட்டிர அரசு இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முன்னிலையில் இருந்தபோதிலும், பழங்குடியினர் உழுது பயிரிட்டு வந்த நிலத்தின் சிறு பகுதிக்கு மட்டுமே பட்டா தரப்பட்டது. மானாவாரி நிலங்களான இவை பயிரிடுவோருக்கு முழுமையாக உரிமையாக்கப்பட வேண்டும் என்பதே பழங்குடியினரின் முதன்மையான கோரிக்கை. எனவேதான் ஏழை உழவர்களான இப் பழங்குடியினர் கந்தல் உடையுடன், வெறுங் காலுடன் நடந்ததால் பாதங்களில் குருதி கொட்ட, நாசிக்கிலிருந்து 180 கிலோ மீட்டர் நடந்து மும்பைக்குப் பேரணியாக வந்தனர்.

இப்பேரணியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் (CPM) உழவர் பிரிவான அனைத் திந்திய உழவர் சங்கம் நடத்தியது. சவகர் லால் நேரு பல்கலைக் கழகத்தின் மாணவர் மன்றத்தின் முன்னாள் தலைவராக இருந்த வரும், தற்போது அனைத்திந்திய உழவர் சங்கத்தின் இணைச் செயலாளராக இருப்ப வருமான விஜூ கிருஷ்ணன் என்பவர்தான் இந்தப் பேரணியைத் திட்டமிட்டு நடத்தினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உழவர் சங்கம் இப்பேரணியை நடத்தியபோதிலும், சிவப்புத் தொப்பி அணிந்து, செங்கொடியை ஏந்திவந்த போதிலும், வாக்கு அரசியலுக்கு அப்பாற்பட்ட தன்மையில், உழவர்களின் கோரிக் கைகளை மட்டுமே முதன்மைப்படுத்தும் வகையில் நடத்தப் பட்டதால் கட்சிவேறு, சாதி வேறுபாடு கருதாமல் வர்க்க ஓர்மையுடன் உழவர்கள் கலந்து கொண்டது இப்பேரணியின் பெருஞ்சிறப்பாகும். செங்கொடி என்பது உழைக்கும் மக்களின் உரிமைக்கான-விடுதலைக்கான குறியீடாகக் கருதப்பட்டது.

பழங்குடி உழவர்களுக்கு நிலப்பட்டா வழங்குதல், கடன் தள்ளுபடி செய்தல், வேளாண் விளை பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கச் செய்தல், நதிநீர் இணைப்பு உள்ளிட்ட ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து உழவர்கள் இப் பேரணியை நடத்தினர். இக்கோரிக்கைகளுக்காக 12.3.18 அன்று மகாராட்டிரச் சட்டப் பேரவையை முற்றுகையிடப் போவதாக அறிவித்திருந்தனர். 11.3.18 ஞாயிறு மாலை மும்பை மாநகரத்திற்குள் நுழைந்த உழவர்களை வழி நெடுகிலும் மக்கள் திரண்டு நின்று வரவேற்று தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். ஆறு நாள்களாக 180 கி.மீ. நடந்து களைத்து வந்த உழவர்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் அளித்தனர். செருப்பும் அணியாமல் பலர் நடந்து வந்ததைக் கண்டு அவர்களுக்குக் காலணியை வழங்கினர். நீண்ட தொலைவு நடந்து வந்ததால் கடுமை யாகப் புண்ணாகியிருந்த பாதங்களுக்கு மருத்துவர்கள் மருந்து இட்டனர். தமக்கு உணவளிக்கும் உழவர்கள் எனக் கருதி மும்பை மாநகர மக்கள் நன்றியுணர்வுடன் உதவிகள் செய்தனர். அது கண்டு உழவர்கள் நெஞ்சம் நெகிழ்ந்தனர்.

12.3.18 திங்கட்கிழமை காலை உழவர்கள் பேரணி சட்டமன்றத்தை நோக்கிப் புறப்படுவதாகத் திட்டமிடப்பட்டி ருந்தது. மும்பை நகரத்தை அடைந்தபிறகு பேரணியின் ஏற்பாட்டாளர்கள் இத்திட்டத்தில் மாற்றம் செய்தனர். காலை யில் பேரணி சென்றால் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதச் செல்லும் மாணவர்களுக்கும் வேலைக்குச் செல்லும் பொது மக்களுக்கும் இடையூறாக இருக்கும் எனக்கருதி, தங்கள் மெய்வருத்தம் பாராமல், தூக்கத்தையும் தொலைத்து,

நள்ளிரவில் புறப்பட்டு பொழுது விடியும் நேரத்தில் சட்டமன்றத் துக்கு அருகில் உள்ள ஆசாத் திடலை அடைந்தனர். உழவர் களின் இந்தச் சமூகப் பொறுப்புணர்வையும், செயலையும் மும்பை நகர மக்கள் மட்டுமின்றி, இந்திய மக்களும் ஊடகங் களும் வியந்து பாராட்டினர்.

மகாராட்டிர முதல்வர் பட்னாவிசு, இப்பேரணியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னின்று நடத்தியதாலும், பழங்குடியினரே பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்ட தாலும் இதை மாவோயிஸ்டுகள் நடத்தும் பேரணி என்று கூறினார். மேலும் 2017 சூன் மாதம் ரூ.34,000 கோடிக்கு உழவர் கடன் தள்ளுபடித் திட்டத்தை அறிவித்துச் செயல் படுத்தி வருவதால், இந்தப் பேரணி மாநிலத்தின் அமைதியைச் சீர்குலைக்கும் நோக்கம் கொண்டது என்று கூறிவந்தார். 6.3.18 அன்று உழவர்கள் பேரணி தொடங்கிய நாள் முதல் அதற்கு மற்ற அரசியல் கட்சிகள், பொதுமக்களிடையே ஆதரவு பெருகியதாலும், ஆறு நாள்கள் 40,000 உழவர்கள் எத்தகைய இடையூறும் ஏற்படுத்தாமல், ஒழுங்கமைவான முறையில் பேரணி நடத்தியது கண்டு ஆட்சியாளர்கள் செய்வதறியாது திகைத்தனர். தொலைக்காட்சிகள் இப் பேரணிக்கு முதன்மை தந்து மக்களிடம் இதைக் கொண்டு சேர்த்ததில் முதன்மையான பங்காற்றின. எனவே முதல மைச்சர் தலைமையிலான அமைச்சர்கள் உழவர் பேரணி யின் பிரதிநிதிகளைச் சந்திக்க முன்வந்தனர். இச்சந்திப்பு 12.3.18 காலை 11 மணிக்குச் சட்டமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

முதலமைச்சர் உழவர்களின் ஒன்பது கோரிக்கைகளை ஆறு மாதங்களுக்குள் நிறைவேற்றுவதாக எழுத்துவடிவில் உறுதி அளித்தார். 2017 சூன் மாதம் ரூ.34,000 கோடிக்கு அறிவிக்கப்பட்ட வேளாண் கடன் தள்ளுபடி 2009 முதல் 2016 வரையிலான காலத்திற்கு மட்டும் என்று இருந்ததை 2001 ஆம் ஆண்டு முதல் வாங்கிய வேளாண் கடன்களும் தள்ளுபடி செய்யப்படும் என்று முதல்வர் உறுதி அளித்தார். மேலும் குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடன் தள்ளுபடி, ரூ.1.5 இலட்சம் வரை மட்டுமே தள்ளுபடி என்கிற வரம்புகளை மறு ஆய்வு செய்வதாக அரசு உறுதி அளித்துள்ளது. பழங்குடியினர் உழுது பயிரிடும் நிலத்தில் குறைந்தது 4 எக்டர் வரையில் நிலப்பட்டா வழங்கப்படும் என்று முதல்வர் பட்னாவிசு தெரிவித்தார். எனவே உழவர்கள் போராட்டத்தை திரும்பப் பெற்றனர். உழவர்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிட அரசு சிறப்புத் தொடர்வண்டி மற்றும் பேருந்துகளை ஏற்பாடு செய்தது.

திட்டவட்டமான கோரிக்கைகளை முன்வைத்து, மக்களிடம் பரப்புரை செய்து, பெருமளவில் மக்களைத் திரட்டி சீரிய வகையில் போராட்டங்கள் நடத்தினால் மட்டுமே அரசு செவிசாய்க்கும்; கோரிக்கைகளை ஏற்று நடைமுறைப்படுத்த முன்வரும் என்பதை மகாராட்டிர உழவர் பேரணி உணர்த்து கிறது. மகாராட்டிரத்தில் 2017ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உழவர்கள் தொடர்ந்து போராடியதால்தான் சூன் மாதம் ரூ.34,000 கோடி வேளாண் கடன் தள்ளுபடி அறிவிக்கப் பட்டது. 2017 நவம்பரில் நாடாளுமன்ற வீதியில் பல மாநிலங்களைச் சேர்ந்த உழவர்கள் திரண்டு பேரணி நடத்தியதால்தான் 2018 நிதிநிலை அறிக்கையில் சுவாமி நாதன் தலைமையிலான தேசிய உழவர் ஆணையத்தின் பரிந்துரையின்படி, பயிரின் உற்பத்திச் செலவில் 50 விழுக் காடு இலாபம் கிடைக்கும் வகையில் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்படும் என்று நிதி அமைச்சர் அருண் ஜேட்லி அறிவித்தார்.

தமிழ்நாட்டில் உழவர்களும், அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் மும்பைப் பேரணியிலிருந்து பாடம் கற்க வேண்டியுள்ளது. போராட்டம் என்பது அரசு அலுவலகம் முன்னரோ, அரசு ஒதுக்கும் இடத்திலோ இரண்டு மணி நேரம் முழக்கங்களை எழுப்பி, உரையாற்றிவிட்டுக் கலைந்து செல்வது என்பதாகவே சுருங்கிப் போய்விட்டது. இத்தன் மையில் எத்தனை போராட்டங்கள் நடத்தினாலும் ஆளும் வர்க்கம் மதிக்காது. இந்நிலையைக் கடந்து, தங்கள் கட்சி, அமைப்பு, சாதி, மதம், ஆகியவற்றை ஒதுக்கிவைத்து விட்டு, மக்களைப் பாதிக்கின்ற, மாநில உரிமைகளைப் பறிக்கின்ற பிரச்சனைகளில் மிகப்பெரிய அளவில் மக்களைத் திரட்டிப் போராடினால்தான் ஆட்சியாளர்களை அசைக்க முடியும். காவிரி ஆற்றுநீர் உரிமைகளைக் கூட இத்தன்மையில் மக்கள் திரள் போராட்டத்தை நடத்தவில்லை. சல்லிக்கட்டு உரிமைக்காக மட்டுமே இத்தன்மையிலான மக்கள் போராட்டம் நடந்தது.

தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்ற கொள் கையை 1991 முதல் நடைமுறைப்படுத்த தொடங்கியபின், அரசுகள் வேளாண்மையைப் புறக்கணித்தன. உயர்தொழில் நுட்பம் கொண்ட-அதிக அளவில் தனியார் முதலீடு தேவைப் படும் சேவைப் பிரிவுக்கும், தொழில்களுக்கும் அரசுகள் முன்னுரிமை தந்து பல சலுகைகளை அளித்தன. வேளாண்மை நலிவடைந்ததால், கடன் சுமையால் உழவர்கள் தற்கொலை செய்து கொண்டனர். 1997 முதல் 2017 வரையிலான 21 ஆண்டுகளில் 3,20,000 உழவர்கள் தற்கொலை செய்து கொண்டனர் என்று அரசின் புள்ளிவிவரமே சொல்கிறது. மகாராட்டிரத்தில் மட்டும் 2017 இல் 2,414 உழவர்கள் தற்கொலை செய்து கொண்டனர். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் உழவர்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருவதற்குக் காரணம் என்ன?

நரேந்திர மோடி தலைமை அமைச்சராகப் பதவி ஏற்ற பின், வேளாண்மைத் தொழில் மேலும் நலிவடைந்தது. 2004-05 முதல் 2013-14 வரை இருந்த மன்மோகன் ஆட்சிக் காலத்தில் வேளாண்மையின் வளர்ச்சி 3.7 விழுக்காடாக இருந்தது. மோடியின் நான்கு ஆண்டுக்கால ஆட்சியில் இது 1.85 விழுக்காடாக வீழ்ச்சி அடைந்தது. 2016 நவம்பர் மாதம் நரேந்திரமோடி திடீரென பணமதிப்பு நீக்க நடவடிக்கையை அறிவித்தார். இதனால் ரூ.500, ரூ.1000 பணத்தாள்கள் ஒரே இரவில் செல்லாதவையாகிவிட்டன. நவம்பர் மாதம் என்பது தென்மேற்குப் பருவமழையைக்

கொண்டு பயிரிடப்பட்ட காரிப் பருவ பயிர்கள் அறுவடை செய்யப்பட்டு, ராபி பருவத்துக்கான (நவம்பர்-மார்ச்சு) பயிர்கள் விதைப்பு செய்யப்படும் காலமாகும். பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் காரிப் பயிர்களின் விளை பொருள்களை விற்க முடியாத நிலை ஏற்பட்டது. அவற்றின் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்தது. அதேபோன்று ராபி பருவ பயிர்களுக்கான இடுபொருள்களை வாங்க முடியாமல் உழவர்கள் திண்டாடினர். இவற்றால் உழவர்கள் பெரும் இழப்புக்கு ஆளாயினர்.

2016இல் பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் இழப்புகளையும் இன்னல்களையும் தாண்டி 2017 காரிப் பருவத்தில் உழவர்கள் வேளாண்மையில் ஈடுபட்டனர். அப்போது நடுவண் அரசு ஜி.எஸ்.டி.யை நடைமுறைப்படுத்தியதால் அறுவடை சமயத்தில் வேளாண் விலை பொருள்கள் கடும் வீழ்ச்சியடைந்தன. 2017 ஆம் ஆண்டிற்கு மக்காச் சோளத்துக்கு ஒரு குவிண்டால் (100 கிலோ) ரூ.1,425 என்று குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) நடுவண் அரசு அறிவித்தது. ஆனால் சந்தையில் ரூ.1,050-ரூ.1,100 விலைக்கு மேல் உழவர்களால் விற்க முடியவில்லை. இதேபோல் உளுந்துக்கு ரூ.5,200 என்று அரசு விலையை நிர்ணயித்தது. ஆனால் சந்தையில் ரூ.3,500க்கு மேல் உழவர்களால் விற்கமுடியவில்லை. (The Hindu 21-1-18). மேலும் துவரை, உளுந்து, முதலான பயறு வகைகள் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுவதால், உள்நாட்டிலேயே உற்பத்தியைப் பெருக்கமாறு 2017இல் அரசு உழவர்களை ஊக்குவித்தது. இயல்பான மழைப் பொழிவு இருந்ததால் பயறு வகைகளில் 220 இலட்சம் டன் விளைச்சல் கிடைத்தது. ஆனால் அரசு 20 இலட்சம் டன் பயறு வகைகளை மட்டுமே கொள்முதல் செய்தது. இந்தச் சூழலிலும் பொறுப்பற்ற முறையில் 60 இலட்சம் டன் பயறு வகைகளை அரசு இறக்குமதி செய்தது. எனவே அரசு, சுவாமிநாதன் குழுவின் பரிந்துரையின் “(C2+50%” என்ற அடிப்படையில் குறைந்தபட்ச ஆதரவு விலையை அறிவித்தாலும் அந்த விலையில் விளை பொருள்களைக் கொள்முதல் செய்வதற்குரிய திட்டவட்டமான கட்டமைப்பு இல்லாவிட்டால் உழவர்களுக்கு அதனால் ஒரு பயனும் ஏற்படாது. மோடி ஆட்சிக்கு வந்தபின், அறுவடைக் காலங்களில் விளை பொருள்கள் கடும் வீழ்ச்சியடைவதற்கு முதன்மையான காரணம் கொள்முதலில் தனியார் வணிகர்களின் ஆதிக்கம் மேலோங்கிவிட்டதே ஆகும்.

1965 முதல் நடுவண் அரசின் வேளாண்மை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் வேளாண் செலவு மற்றும் விலைக் குழுவின் பரிந்துரையின் பேரில் வேளாண் விளை பொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை (Minimum Support Price-MSP) நடுவண் அரசு ஆண்டுதோறும் அறிவித்து வருகிறது. தற்போது 7 வகையான தானியங்கள், 5 வகையான பருப்புகள், 7 வகையான எண்ணெய் வித்துகள், 4 வகையான வணிகப் பயிர்கள் (பருத்தி, கரும்பு, சணல், தேங்காய்) ஆகியவற்றின் விளை பொருள்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையை அரசு அறிவிக்கிறது.

எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையிலான தேசிய உழவர் ஆணையம் 2006ஆம் ஆண்டு நடுவண் அரசுக்கு அளித்த அறிக்கையில், உழவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவிற்கான வருவாயை உறுதி செய்ய, உற்பத்திச் செலவில் 50 விழுக்காடு இலாபம் கிடைக்குமாறு விளை பொருள்களின் விலையை அரசு நிர்ணயம் செய்யவேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது. இது “(C2+50%” என்ற அளவீடாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதன்படி அரசு விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று கடந்த பத்து ஆண்டுகளாக உழவர்கள் போராடி வருகின்றனர். இதற்கான வாக்குறுதியை பா.ச.க. 2014 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் அளித்தது. அதன்பின் இவ்வாறு விலை நிர்ணயம் செய்வது வேளாண்மைச் சந்தையைச் சீர்குலைக்கும் என்று உச்ச நீதிமன்றத்தில் மோடி அரசு கூறியது. 2019 நாடாளுமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டு 2018ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் சுவாமிநாதன் ஆணையத்தின் பரிந்துரையின்படி ராபி பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை அறிவித்திருப்பதாகத் தெரிவித்துள்ளது. “(சிவ+50%” என்ற தொகையைவிடக் குறைவான விலையே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பது 2018 மார்ச்சு சிந்தனையாளன் இதழில் விளக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவதாலேயே அதன் பயன்கள் உழவர்களுக்குக் கிடைத்துவிடாது. அந்த விலையில் கொள்முதல் செய்வதற்கான போதிய கட்டமைப்பு இல்லை. தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பு (NSSO) 2013இல் நடத்திய ஆய்வில், நெல் விளைச்சலில் 17 விழுக்காடு, கோதுமை விளைச்சலில் 19 விழுக்காடு மட்டுமே அரசுத்துறை நிறுவனங்களால் உழவர்களிடம் கொள்முதல் செய்யப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது. இதனால் அதிக அளவில் நிலம் உடைய, பணக்கார உழவர்கள் பெரிதும் பயனடைகின்றனர். மொத்த உழவர்களில் 84 விழுக்காட்டினர் சிறு, குறு உழவர்களாவர். இவர்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலோ, தனியார் வணிகர்களிடமோ அவர்கள் நிர்ணயிக்கும் விலைக்கே விற்கின்றனர். நெல், கோதுமை அல்லாத பயிர்களைப் பயிரிடும் எல்லா உழவர்களும் தங்கள் விளை பொருளைத் தனியாரிடமே விற்கும் நிலைதான் இருக்கிறது.

எனவே எல்லா விளை பொருள்களையும் அரசு அறிவிக்கும் விலையில் அரசின் பொறுப்பில் கொள்முதல் செய்யும் நிலை ஏற்படாத வரையில், குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வால் உழவர்களுக்கு 50 விழுக்காடு இலாபம் கிடைக்காது. இந்த நிலையில் 2022க்குள் உழவர்களின் வருவாயை இரண்டு மடங்காக உயர்த்தப்போவதாக மோடி அரசு வாய்வீரம் பேசிக் கொண்டிருக்கிறது. இதற்காக 585 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைத் தேசிய மின்னணு வேளாண் சந்தையுடன் இணைத்திருப்பதாகவும், 22,000 கிராமப்புறச் சந்தைகளின் கட்டமைப்பை உயர்த்தப் போவதாகவும் கூறுகிறது. இதுவெறும் ஏட்டுச் சுரைக்காய்த் திட்டமே!

84 விழுக்காடாக உள்ள சிறுகுறு உழவர்கள் தங்கள் விளைபொருள்களில் ஒரு பகுதியை மட்டுமே விற்பனை



புண்ணாகியிருந்த உழவர்களின் கால்களுக்கு மருந்திட்ட மருத்துவர்கள்

செய்கின்றனர். எனவே இவர்களின் உற்பத்திச் செலவைக் குறைப்பது முதன்மையாகும். இடுபொருள்களின் விலையைக் குறைப்பதும், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் கிடைக்கச் செய்வதும் இன்றியமையாததாகும்.

2005 முதல் 2012 வரையிலான ஏழு ஆண்டுகளில் உழவர்களின் எண்ணிக்கை 16 கோடியிலிருந்து 14.1 கோடியாகக் குறைந்துள்ளது. நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் எண்ணிக்கை 8.5 கோடியிலிருந்து 6.9 கோடியாகக் குறைந்துள்ளது. ஆண்டிற்கு 50 இலட்சம் பேர் வேளாண் தொழிலை விட்டு நகரங்களுக்கு வேலைதேடிச் சென்றனர். இவர்களில் பெரும்பாலோர் கட்டுமானத் தொழில் கூலியாட்களாயினர். 2004-05இல் 260 இலட்சம் பேராக இருந்த கட்டுமானத் தொழிலாளர் எண்ணிக்கை 2011-12இல் 510 இலட்சம் பேராக உயர்ந்தது. ஆனால் 2012க்குப் பிறகு கட்டுமானத் தொழிலிலும் பெரும்தேக்கம் ஏற்பட்டுள்ளது. வேளாண்மையிலும் வேலை வாய்ப்பு இல்லை என்ற நிலை. ஆனால் ஆண்டுதோறும் 20 இலட்சம் புதிய இளைஞர்கள் வேலை செய்யும் அகவையில் (Workforce) நுழைகின்றர். இதனால் நாட்டில் பெரிய அளவில் வேலையில்லாத் திண்டாட்டம் பல ஆண்டுகளாக நீடிக்கிறது.

மோடி 2014 நாடாளுமன்றத் தேர்தலில் ஆண்டிற்கு இரண்டு கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன் என்று வாய்ப்பந்தல் போட்டார். கடந்த நான்கு ஆண்டுகளில் சில இலட்சம் புதிய வேலை வாய்ப்புகள் மட்டுமே உருவாகியுள்ளன. அதைவிட அதிகமாக பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் வேலை இழப்புகள் ஏற்பட்டுள்ளன. ‘இந்தியாவில் தயாரிப்போம்’ (Make in India) என்ற முழக்கத்தை மோடி ஆட்சிக்கு வந்ததும் முழக்கினார். ஆனால் ஒரு உருபாய் மதிப்புள்ள பொருளிலிருந்து தொடுதிரைக் கைப்பேசி வரை சீனாவில் தயாரிக்கப்பட்ட பொருள்களே சந்தையில் குவிந்து கிடக்கின்றன.

எனவே வேளாண் விளை பொருள்களுக்குச் சுவாமிநாதன் குழுவின் பரிந்துரையின்படி, விலை நிர்ணயம் செய்வதும், அந்த விலையில் அரசே கொள்முதல் செய்வதும் உறுதி செய்யப்படும் போது மட்டுமே உண்மையில் உழவர்களின் வருவாய் உயரும். அந்நிலையில் கடன் தள்ளுபடி என்கிற கோரிக்கைக்கே இடமில்லாத நிலை ஏற்படக்கூடும். அதே சமயம் மக்கள் பெருமளவில் பயன்படுத்தும் பொருள்களை இந்தியாவிலேயே தயாரிக்கும் நிலையை ஏற்படுத்தினால்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க முடியும். வேளாண்மையில் உழைக்கும் உழவர்களும், நிலமற்ற வேளாண் தொழிலாளர்களும், நகர்ப்புற தொழிலாளர்களும் சாதி உணர்வைக் கடந்து வர்க்க ஓர்மையுடன் செயல்பட்டால்தான் இதை நோக்கிப் பயணிக்க முடியும். மும்பை உழவர் பேரணி உணர்த்துப் பாடமும் இதுவே ஆகும்.

## புதுச்சேரியில் தனித்தமிழ் இயக்க நூற்றாண்டு விழா மாநாடு!

2.3.2018, வெள்ளி - 3.3.2018 சனி ஆகிய இரண்டு நாள்களில் மாலை நேரங்களில் 6.00 மணிக்குப் புதுச்சேரிக் கடற்கரை காந்தி திடலில் தனித்தமிழ் இயக்க நூற்றாண்டுவிழா மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது.

2.3.2018 அன்று மாலை புதுச்சேரி முதலமைச்சர் வே.நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது. தனித்தமிழ் இயக்க நூற்றாண்டு விழா மாநாட்டுக் குழுச் செயலர் முனைவர் க.தமிழமல்லன் வரவேற்றுப் பேசினார். அமலோற்பவம் மேனிலைப்பள்ளி முதுநிலை முதல்வர் ச.அ.உலூர்துசாமி, அலமுகட்டு மானங்கள் இராம.கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் அமலோற்பவம் மேனிலைப் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து தனித்தமிழ் அறிஞர்கள் மறைமலையடிகள், பாவாணர், பாரதிதாசன் ஆகியோர் படங்களை மல்லிகா சுந்திரன், விசயவேணி ச.ம.உ, பூங்கொடி பராங்குசம் ஆகியோர் திறந்து வைத்தனர். பின்னர் நடைபெற்ற தனித்தமிழ் இலக்கியக் கருத்தரங்களில் குடும்பவிளக்கு, இராவண காவியம், அண்ணல் ஆயி இலக்கியங்கள் பற்றி இராச.குழந்தை வேலனார், முனைவர் இ.சூசை, பூங்குழலி பெருமாள் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தனித்தமிழ் இயக்க நூற்றாண்டு விழா மாநாட்டுக் குழுப் பொருளாளர் ஆணையர் த.தியாகராசன் மாநாட்டுத் தீர்மானங்களைப் படித்து வழங்கினார். ம.தி.மு.க. பொதுச் செயலர், வைகோ அவர்கள் சிலப்பதிகாரத் தனித்தன்மை என்பது பற்றிய சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார். விழாவின் நிறைவாகத் திருவாட்டி த.தமிழ்த்தென்றல் நன்றி கூறினார். ஏராளமான மக்கள் நிகழ்ச்சிக்கு வந்திருந்து சுவைத்துக் கேட்டு மகிழ்ந்தனர். புதுச்சேரியில் நீண்ட காலத்திற்குப் பின் மிகச் சிறந்த இலக்கிய நிகழ்ச்சி இதுவென்று அனைவரும் பாராட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டுரைத் தொடர்-57

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

1940 ஆகஸ்டு திருவாரூர் மாநாட்டிற்கு பிறகு நீதி கட்சியில் பெரிய போராட்டங்கள் எதுவும் நடைபெற வில்லை. 1939 இலேயே இரண்டாம் உலகப் போர் தொடங்கிவிட்டது. 1942க்கு பிறகு விடுதலை ஏடு போர் பிரச்சாரத்துக்காக ஆங்கில அரசிடம் கொடுக்கப்பட்டு விட்டது. குடிஅரசு இதழும் ஏறத்தாழ ஓராண்டு காலம் வெளிவரவில்லை.

அதன்பிறகு நடைபெற்ற நிகழ்வு என்பது 1944இல் சேலத்தில் ஆகஸ்டு மாதத்தில் நடைபெற்ற 'திராவிடர் கழகம்' பெயர் மாற்றம் மற்றும் அமைப்புகளில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டது. ஆங்கிலேயர் கொடுத்த பட்டம், பதவிகளை துறந்துவிடவேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. காலையில் 'தமிழகர் கழகம்' என்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை பிற்பகலில் 'திராவிடர் கழகம்' என்று மாற்றிவிட்டார் பெரியார் என்று தமிழ்த் தேசியவாதிகளால் பொய்யானப் பரப்புரைச் செய்யப்பட்டு வருகிறது. அது உண்மையல்ல என்பதை விளக்கும் கட்டுரை இது.

**திராவிடர் கழகப் பெயர் மாற்றம் ஒரே நாளில் நிகழ்ந்தா?**

தென்னிந்தியர் நலவுரிமைச் சங்கம் என்ற ஜஸ்டிஸ் கட்சிக்குத் திராவிடர் கழகம் என்ற பெயர் மாற்றம் ஒரே நாளில் எடுக்கப்பட்ட முடிவல்ல. ஓராண்டுக் காலமாகப் பல்வேறு மாநாடுகளில் விவாதிக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

26-4-43 நண்பகல் 2 மணிக்குச் சேலம் தேவாங்கர் பள்ளிக் கூடத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம் பெரியார் தலைமையில் கூடியது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் - 2**

"ஜஸ்டிஸ் கட்சிக்கு (S.I.L.F) தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் என்றிருக்கும் பெயரைத் தென்னிந்திய திராவிடர் கழகம் என்றும், ஆங்கிலத்தில் South Indian Dravidan Federation என்றும் பெயர் திருத்தப்பட வேண்டும்.

**தீர்மானம் - 4**

இத்தீர்மானங்களைச் சேலத்தில் நடக்க போகும் கட்சி மாநாட்டில் உறுதிப்படுத்தி அமலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

(குடி அரசு 4-12-43 பக்கம் 5)

ஜஸ்டிஸ் கட்சிக்கு அமைந்த தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் என்ற பெயர் இனித் தென் இந்திய திராவிடர் கழகம் என்பதாக அழைக்கப்பட வேண்டும் என்பதாகும். இந்தத் தீர்மானமும் ஒரு விதத்தில் திருவாரூர் மகாநாட்டில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்றே சொல்லலாம்.



(குடி அரசு 4-12-43 பக்கம் 11)

கோவையில் 19-11-43 அன்று அறிஞர் அண்ணாவின் சந்திரோதயம் நாடகத்திற்குப் பெரியார் தலைமைத் தாங்கினார். அப்போது பெரியாருக்கு வாசித்தளித்த வரவேற்புத் தாளில் கோவை மாவட்ட திராவிட கழகத் தால் என்று அச்சிட்டிருந்தனர்.

(குடி அரசு 18-12-43 பக்கம் 4)

சேலம் நகரில் செவ்வாய்பேட்டை திராவிடர் கழகத்தின் முதலாவது ஆண்டுவிழா 16-1-44 முற்பகல் 11 மணிக்குத் தொடங்கியது. தொடக்கத்தில் சேலம் தோழர்கள் பெரியார் ஈ.வெ.ரா., அண்ணாதுரை, என்.அர்ச்தனன், ஜ.ச. கண்ணப்பர் ஆகியவர்களை இரட்டைக் குதிரை கோச்சு வண்டியில் அமரவைத்து ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

(குடி அரசு 22-1-44 பக்கம் 6)

1943இலேயே இங்குத் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டு முதலாமாண்டு விழாவும் நடை பெற்றுள்ளது. புவனகிரி திராவிடர் கழக ஆரம்ப விழா 6-2-44 காலை 10.30 மணிக்கு சி.பி.சின்னராசு தலைமையில் நடைபெற்றது. பெரியார் அவர்களுக்குத் திராவிடர் கழகத்தாரால் வாழ்த்து மடல் வாசித்து அளிக்கப்பட்டது.

(குடி அரசு 12-2-44 பக்கம் 5)

சென்னையில் நீதி கட்சியின் சென்னை மாவட்ட மாநாடு 13-2-44 அன்று தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முதலாவது தீர்மானம் கட்சியின் பெயர் மாற்றத் தீர்மானமாகும்.

1. 'தென் இந்தியர் நல உரிமைச் சங்கம்' என்பதைச் சென்னை மாகாண 'திராவிடர் கட்சி' என்று மாற்றுமாறு சேலத்தில் நடைபெறப்போகும் மாகாண மாநாட்டிற்கு இம்மாநாடு தெரிவித்துக் கொள்கிறது.

(குடி அரசு 26-2-44 பக்கம் 14)

திருச்சி மாவட்ட நீதிக்கட்சி 15ஆவது மாநாட்டில் 20-2-44 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று கட்சியின் பெயர் மாற்றத் தீர்மானம் பற்றியது ஆகும்.

அண்மையில் சேலத்தில் நடக்கவிருக்கும் நமது மாகாண மாநாட்டில் நமது கட்சியின் பெயரைத் "திராவிடர் கழகம்" என்று மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை இம்மாநாடு சிபாரிசு செய்கிறது.

(குடி அரசு 4-3-44 பக்கம் 4)

நாகையில் திராவிடர் கழகம் திறப்பு விழா 9-3-44 முற்பகல் 11.45 மணிக்கு நடைபெற்றது. நாகை திராவிடர் கழகத்தாரால் பெரியாருக்கு நல்வரவேற்பிதழ் வாசித்து அளிக்கப்பட்டது. சி. பி. சின்னராசு, எஸ். கே. சாமி ஆகியோர் உரையாற்றிய பின் டி. வி. சொக்கப்பா தலைமையில் 'பெரியார் திராவிடர் கழகத்தை'த் திறந்து வைத்தார்.

(குடி அரசு 18-3-44 பக்கம் 5)

11-3-44 அன்று திருச்சி பொன்மலையில் கற்கண்டார் கோட்டை 'திராவிடர் கழக'த் திறப்பு விழாவும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. பெரியாருக்கு 102 காலணாக்கள் பணமுடிப்பளித்தனர்.

(குடி அரசு 18-3-44 பக்ம் 10)

### கோவை மாவட்ட திராவிட இளைஞர் மாநாடு

17-4-44 அன்று ஈரோடு சரஸ்வதி ஹால் என்னும் மண்டபத்தில் கோவை மாவட்ட முதலாவது திராவிட இளைஞர் மாநாடு தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும். க. அன்பழகன், இரா.நெடுஞ்செழியன் உள்ளிட்டோர் கலந்து கொள் வார்கள். அனைவரும் வருக.

(குடி அரசு 15-4-44 பக்கம் 5)

மேற்கண்ட மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களில் ஒன்று பெயர் மாற்றத் தீர்மானம் ஆகும். அண் மையில் நடக்கவிருக்கும் நீதி கட்சியின் மாகாண மாநாட்டில் அக்கட்சியின் பெயரைத் "திராவிடர் கழக"மென்று மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை இம்மாநாடு வலியுறுத்துகிறது/

சேலத்தில் சூன் 18, 19 ஆகிய நாட்களில் நடைபெற்ற சேலம் மாவட்ட திராவிட இளைஞர் மாநாட்டு தீர்மானங் களில் முதன்மையானது.

1. நீதி கட்சியையும், தன் மதிப்பியக்கத்தையும், ஒன்றுபடுத்தி திராவிடர் இயக்கமென்று பெயரிட்டு நிதியும், கழகங்களும், தினசரித்தாளும் அமைத்து ஆக்க வேலை செய்ய பெரியார் ஈ. வெ. ரா.வை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(குடி அரசு 8-7-44 பக்கம் 11)

11-7-44 அன்று தஞ்சையில் ஊ. ஆ. பூ. சௌந்தர பாண்டியன் தலைமையில் தஞ்சை மாவட்ட திராவிடர் இளைஞர் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட் டில் நீதிக் கட்சியையும் தன் மதிப்பியக்கத்தையும் ஒன்றுபடுத்தி 'திராவிடர் இயக்கம்' என்று பெயரிட வேண்டும்மென்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(குடி அரசு 29-7-44 பக்கம் 2)

திராவிடர்களே சேலம் மாநாட்டிற்குச் செல்லுங்கள் என்ற தலையங்கம் எழுதப்பட்டது. அத்தலையங்கத்தில் நாம் திராவிடர், நம் கழகம் திராவிடர் கழகம், நமக்கு வேண்டியது திராவிட நாடு என்று வலியுறுத்தப் பட்டிருந்தது.

(குடி அரசு 12-8-44 பக்கம் 6)

20-8-44இல் நடத்த இருந்த சேலம் மாநாடு சரியான ஏற்பாடு செய்யப்படாததால் 27-8-44க்குத் தள்ளி வைக்கப்பட்டு நடைபெற்றது.

### சேலம் மாநாட்டுக்கு வரும் தீர்மானங்கள் கட்சி அரசியல் தீர்மானங்கள்

1. (அ) இந்த மாநாடானது ஜஸ்டிஸ் கட்சி என்னும் இக்கட்சிக்கு உள்ள 'தென்இந்தியர் நலஉரிமைச் சங்கம்' என்ற பெயரை 'திராவிடர் கழகம்' `Dravidian Association' என்று பெயர் மாற்றத் தீர்மானிக்கிறது.

(குடி அரசு 26-8-44 பக்கம் 3)

சேலம் மாநாடு ஒரு வாரம் தள்ளிப் போடப்பட்டதால் மாநாட்டிற்கு வரும் தீர்மானங்கள் முன் கூட்டியே குடி அரசு இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

27-8-44இல் நடைபெற்ற சேலம் மாநாடு சேலம் நகரையே உலுக்கியது. ஊர்வலத்தில் 30,000 பேர், உயிருக்குத் துணிந்த வீரர்கள் 5,000 பேர், 40 குதிரை கள், 2 யானைகள், 4 சக்கர இரட்டைக் குதிரை சாரட்டில் தலைவர் ஊர்வலம் டஜன் கணக்கான கார்கள் பின் தொடர்ந்தன. புதிய உடையுடனும் கொடியுடனும் 300 தொண்டர்கள், 5 ஜதை பாண்டு, 10 ஜதை மேளம், 100 தப்பட்டை, 40 கொம்புகள் பெரியார் வாழ்க, திராவிட நாடு திராவிடர்க்கே, திராவிடர் கழகம் ஓங்குக என்ற முழுக்கம் பிற்பகல் மாநாடு பெரியார் தலைமையில் மாலை 3 மணிக்கு கூடியது. ஜஸ்டிஸ் கட்சியின் பெயரை அதாவது தென்னிந்திய நல உரிமைக் கழகம் என்பதைத் திராவிடர் கழகம் என்பதாக மாற்ற வேண்டும் என்ற தீர்மானம் தோழர் அண்ணாதுரை அவர்களால் முன்மொழியப் பட்டது. தோழர் டி. சண்முகம் அவர்கள் அமோதித்தார். இத்தீர்மானத்தைத் தோழர்கள் சி. ஜி. நெட்டோ, அ. கணேச சங்கரன், எ. வேணுகோபால் ஆகியவர்கள் விஷய ஆலோசனைக் கூட்டத்தில் அனுமதித்து விட்டுப் "போதுமான கால நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை" என்பதாக ஆட்சேபித்தார்கள். தலைவர் பெரியார் எழுந் திருந்து 'ஜஸ்டிஸ்' என்பது பத்திரிக்கையின் பெயர் என்றும், இக்கட்சியின் பெயர் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்பதாகவும், சேலத்தில் 26-11-43 இல் கூடிய நிர்வாக சபை கூட்டத்தில் (இவர்களும் கூடியிருந்த நிர்வாகசபைக் கூட்டத்தில்) ஜஸ்டிஸ் கட்சி என்றிருப்பதை 'திராவிடர் கழகம்' என்பதாக மாற்ற வேண்டுமென் மாகாண மாநாட்டுக்கு சிபாரிசு செய்திருப்பதாகவும் மற்றும் பல சங்கங்கள் ஆதரித்திருப்பதாகவும் தென்னிந்தியர்

என்றாலும் திராவிடர் என்றாலும் ஒன்றுதான் என்றும் தெரிவித்தார். பின்னர் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஆயிரக்கணக்கான கைகள் உயரத் தூக்கின. ஆட்சேபிக்கிறவர்கள் கை தூக்கும்படி கேட்கப் பட்ட போது யாரும் கை தூக்கவே இல்லை. ஆட்சேபித்த வர்களும் சும்மா இருந்து விட்டார்கள், எனவே தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(குடி அரசு 2-9-44 பக்கம் 3)

**சேலம் மாநாடு பற்றிப் பெரியார் அறிக்கை**

சேலம் மாநாட்டைப் பற்றி ஒரு சிலர் தாறுமாறான அறிக்கைகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வருகிறார்கள். அவைகள் ஒன்றும் நேர்மையானவை அல்ல, பெரும் பாலான விஷயங்கள் உண்மையுமல்ல. அந்த அறிக் கைகள் எனக்கு ஒன்றும் அனுப்பவுமில்லை.

மாநாட்டில் ஜஸ்டிஸ் கட்சிக்கு 'தென் இந்திய நல உரிமைச் சங்கம்' என்று, இருந்த பெயரைத் 'திராவிடர் கழகம்' என்று மாற்றப்பட்டது உண்மைதான், ஆனால் அத்தீர்மானம் பொதுக்கூட்டத்தில் பிரேயித்து ஆமோதித்த வுடன் இதற்குப் ''போதிய நோட்டீஸ் இல்லை'' என்று மாத்திரம் தோழர் நெட்டோ சொன்னார். அதை கணே சங்கரன் ஆதரித்தார். தலைவர் அதற்குச் சமாதானம் சொன்னார்.

''சேலத்தில் 26-11-43ம் தேதியில் நடந்த S. I. L. F நிர்வாகச் சபைக் கூட்டத்தில்'' பெயர் மாற்றம் நிறை வேற்றப்பட்டு அதைச் சேலத்தில் நடக்கும் மாகாண (இந்த) மாநாட்டுக்குச் சிபார்சு செய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டி ருக்கிறது. அதில் தோழர்கள் நெட்டோ, இரத்தினம் பிள்ளை முதலியவர்களும் இருந்திருக்கிறார்கள். அதன் பின் சுமார் 20-க்கு மேற்பட்ட ஜில்லா, தாலுக்கா மாநாடுகளில் இது நிறைவேற்றப்பட்டு சேலம் மாநாட்டுக்குச் சிபார்சு செய் யப்பட்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநாட்டிற்கும் இதுபற்றி வெளியூர்களில் இருந்து ஏராளமான தீர்மானங் கள் வந்திருக்கிறன்றன, அவை தோழர் நெட்டோ அவர்கள் வசமே இன்னமும் இருக்கின்றன.

அன்றியும் தென் இந்தியர் கழகம் என்பதும் திராவிடர் கழகம் என்பதும் ஆதியில் ஏற்படுத்தினவர்களின் கருத்தில் வித்தியாசம் கொண்டதல்ல, மக்களுக்கு இன எழுச்சியும், நாட்டு எழுச்சியும் ஏற்படுவதற்கும், திராவிட நாடு கேட்பதற்கும் ஊக்கம் அளிப்பதற்கும் ஆகவே அச்சிறு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது'' என்று சொன்னார்.

பிரதிநிதிகள் 'ஓட்டு ஓட்டு' என்றார்கள், ஓட்டுக்கு விடப்பட்டது; ஏகமனதாய் நிறைவேறிற்று. அப்போது தோழர் நெட்டோ அவர்களும் மற்றும் இப்போது அறிக்கை விடும் நண்பர்களும் இருந்தார்கள். எதிர்ப்புக்கு நெட்டோவாவது இதர நண்பர்களாகவது கை தூக்கியோ, ஓட்டு கொடுக்கவில்லை; வேறு ஒருவரும் எதிர்ப்புக்கு ஓட்டு கொடுக்கவில்லை. இதுதான் பெயர் மாற்றத் தீர்மானத்தினுடையவும் அதன் எதிர்ப்பினுடையவும் நடவடிக்கையாகும். நெட்டோ முதலியவர்களால் பத்திரி கைகளுக்கு வந்த சேதிகள் பின்னால் யோசித்துச் சொல்லப்படுபவைகளாகும்.

மாநாடு வெற்றியாக முடிந்து தலைவர் முடிவுரை ஆனாவுடன் ராவ்சாகிப் துரைசாமி பிள்ளை அவர்கள் வரவேற்புக் கழகச் சார்பில் தீர்மானங்களைப் புகழ்ந்து கூறித் தலைவருக்கும், தோழர் பாண்டியனுக்கும், வரவேற்புத் தலைவர், காரியதரிசி, ஆகியவர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும், மாநாட்டுக் கொட்டகை உதவிய முனிசிபாலிட்டியாருக்கும் மற்றவர்களுக்கும் பெருத்த கைத்தட்டலிடையே நன்றி கூறினார்கள். மாநாடு எவ்வித ஒரு சிறு அபிப்பிராய பேதமோ மேற்கண்டதைக் தவிர ஒரு சிறு எதிர்ப்போ இல்லாமல் நடைபெற்றது. தீர்மானங் கள் யாவும் ஏகமனதாய் நிறைவேறின. இதற்குப் பத்திரிகை நிருபர்களும் சர்க்கார் C.I.D. சுருக்கெழுத் தாளர்கள், ரிக்கார்டுகளும், அதிகாரிகளும், கட்சியாளர் களும், பிரதிநிகளும் சாட்சியாகும்.

ஈ. வெ. ராமசாமி

(குடி அரசு 2-9-44 பக்கம் 8)

**குறும்புத்தனமான அறிக்கைகள்**

சேலம் மாநாடு முடிந்த பிறகு பத்திரிக்கைகளில் சிலர் குறும்புத்தனமான அறிக்கைகள் விட்ட வண்ணம் இருக்கிறார்கள். நம் எதிரிகளான பார்ப்பனர் முதலிய பத்திரிகைக்காரர்கள் இந்த சமயத்தைத் தங்களுக்கு அனுகூலமாக ஆக்கிக் கொண்டு அதற்கு விஷமத்தன மான பெரிய தலைப்புக் கொடுத்து அதிக விளம்பரம் செய்து வருகிறார்கள். நம் இயக்கம் செய்ய வேண்டிய வேலைகளும் அது அடைய வேண்டிய வெற்றிகளும் இந்த இரு கூட்டத்தினால் தடைப்பட்டு போய்விடாது என்கிற தைரியத்தாலேயே அவைகளை நாம் பிரமாத மாக லட்சியம் செய்வதில்லை என்பதோடு நம் உண் மைத் தோழர்களும் மதிக்கமாட்டார்கள் என்பதும் நாம் அறிவோம்.

ஒரு சபைக்குப் பெயர் மாற்ற அச்சபை பொது மாநாட்டிற்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுவது அறிவுரையாகாதென்றே சொல்வோம்.

அடுத்த ஆட்சேபனை போதிய நோட்டீசு (அறிவிப்பு) இல்லை என்பது. இது பரிகசிக்கத்தக்கதே யாகும்.

நோட்டீசு இல்லாமல் மாநாடுகளில் எத்தனையோ தீர்மானங்கள், எத்தனையோ மாகாண மாநாடுகளில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்றாலும் அந்த முறையையோ, மாத்தியதையையோ இப் பேர் மாற்றத் தீர்மானத்திற்கு நாம் உரிமை பாராட்டவில்லை.

இத்தீர்மானமானது முறைப்படி சேலத்தில் 10 மாதங்களுக்கு முன் கூட்டப்பட்ட நிர்வாக சபைக் கூட்டத்தில் தோழர்கள் இரத்தினசாமி, நெட்டோ, அவர்கள்

வீற்றிருந்த கூட்டத்தில் நெட்டோ அவர்களின் ஆதரிப்பின் பேரிலேயே ''தென் இந்திய நல உரிமைச் சங்கம் என் பதைத் திராவிடர் கழகம் என்று அழைக்கப்பட வேண்டும்'' என்று ஏகமனதாகத் தீர்மானித்து 'இந்த தீர்மானத்தை மாகாண பொது மாநாட்டுக்கு இக்கமிட்டி சிபார்சு செய்கிறது' என்று தீர்மானித்து இருப்பதோடு 'அப்படிக் கூட்டப்படும் மாநாட்டை சேலத்தில் நடத்த வேண்டும்' என்றும் அந்த வினாடியிலேயே மாநாட்டை அழைத்தவர்கள் இதே தோழர்கள் இரத்தினம் பிள்ளை யும் நெட்டோ அவர்களும் ஆவார்கள்.

அன்றியும் சேலம் நிர்வாக சபைக் கூட்டத்திற்குப் பிறகு கூட்டப்பட்ட பல ஜில்லா, தாலுக்கா மாநாடுகளில் இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இவை மாத்திரமல்லாமல் 27-8-44 இல் நடந்த சேலம் மாநாட்டுக்குக் கூட மாநாட்டாரின் அறிக்கைப்படி இது சம்பந்தமாக பல ஸ்தாபனங்களிலிருந்தும், தனிப் பட்டவர்கள் இருந்தும் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. இந்த 10 மாதகாலமாக இவை பத்திரிகைகளிலும் விளம் பரப்படுத்தப்பட்டிருக்கின்றன. இனி எந்த விதமான முன் அறிவிப்பு (நோட்டீசு) வேண்டுமென்று இவர்கள் கருதுகிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

அன்றியும் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தின் போது இந்த ஆலோசனைக்காரர்கள் இருந்து இத் தீர்மானம் நிறைவேற்றப்படும் போது ஒரு அதிருப்தியும் காட்டாமல் ஆதரவாளர்களாக இருந்து விட்டு, வேறு காரியங்களுக்காக இவர்கள் மீது ஒழுங்கு முறை நட வடிக்கைத் தீர்மானம் நிறைவேறியவுடன் அத்தீர்மானம் தங்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள இடமிருக்கிற தென்று கருதி பயந்து போய் அதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு தந்திரமாக இந்தச் சாக்கை ஒரு சிலர் உபயோகிக்க, பின்னால் யோசனை செய்து கண்டு பிடிக்கப்பட்டதல்லாமல் இதில் வேறு உண்மையோ, நியாயமோ, நாணயமோ என்ன இருக்க முடியும் என்று கேட்கிறோம்.

(குடி அரசு 9-9-44 பக்கம் 6, 7)

சேலம் மாநாட்டின் செயலாளராக இருந்தவர் நெட்டோ, சேலம் மாநாட்டின் வரவேற்புக்குழுக் தலை வராக இருந்தவர் இரத்தினம் என்பவர் இவர்கள் இருவரும் தான் திராவிடர் கழகம் என்பதற்குப் பதிலாக பழைய ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரே இருக்க வேண்டும். பெயர் மாற்றம் தேவையற்றது அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அறிக்கை விட்டவர்கள்.

சேலம் மாநாட்டில் பெரியாரின் தலைமையை மாற்ற வேண்டுமென்று செயல்பட்டவர் பாலசுப்பிரமணியம் ஆவார், அவரும் பின்னர் தன்பேச்சை பின் வாங்கிக் கொண்டார்.

கி. ஆ. பெ. விசுவநாதம் மாநாட்டுத் திறப்பாளர். அவர் பெரியாரைப் பற்றி கிண்டலும் கேலியுமாகச் சில வார்த் தைகள் பேச எதிரே இருந்தவர்கள் அவரை உட்காரும்படி முழுக்கமிட்டவுடன் பெரியரைப் புகழ்ந்து பேசிவிட்டுப் பெரியாரின் சர்வாதிகாரத் தன்மை தேவைதான் என்று கூறி முடித்துவிட்டார்.

அருகோபாலன் கூறுவது போல கி.ஆ.பெ.விசுவநாதம் எந்தத் தீர்மானமும் கொண்டு வரவில்லை (குடி அரசு 2-9-44 பக்கம் 2)

கி. ஆ. பெ. அவர்களைப் பற்றி 1984இல் எம்ஃபில் ஆய்வு செய்த மணிமேகலை என்பவர் அவர் உயிருடன் இருக்கும் போதே அவரிடம் நேர் காணல் செய்துள்ளார். சேலம் மாநாட்டைப் பற்றி அவரிடம் கேட்டு பதிவு செய்துள்ளதில் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தின் பெயரைத் '<u>தமிழ் நாடு நீதிக்கட்சி</u>' என்ற பெயரில் மாற்றி அமைத்து ஆதரவு திரட்ட வேண்டுமென்ற தமது விருப்பத்தைத் தெரிவித்தார் என்று தான் பதிவு செய்துள்ளார்.

(முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்,
வ. மணிமேகலை பக்கம் 48)

கி.ஆ.பெ. விசுவநாதம் நீதிக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து 1942ல் விலகும்போது அதற்கான பல காரணங்கள் கூறியிருந்தார்.

ஜஸ்டிஸ் கட்சி எல்லோராலும் போற்றப்பட வேண்டு மானால் அடியிற்கண்ட வேலைத் திட்டத்தைப் போன்ற ஒரு முறையைக் கொண்டு கட்சியைப் பலம் பொருந்திய ஸ்தாபனமாக ஆக்குவதன் மூலம் தான் முடியும் என்ற எனது எண்ணத்தில் இன்றும் கூட மாறுதல் அடைய விரும்புவதில்லை என்பதை வணக்கத்துடன் தெரிவித் துக் கொள்கிறேன் என்று கூறி நீதிக் கட்சியின் வளர்ச்சிக் குப் பல ஆக்கப்பூர்மான யோசனைகள் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பெயர் மாற்றம் பற்றியோ பெரியார் கன்னடர் என்பது பற்றியோ ஒருவரி கூட இல்லை. கடிதத்தை முடிக் கும் போது கூட இவைகளை எனது ஆலோசனைகளாகக் கட்சியின் நலனுக்காகக் குறிப்பிட்டுள்ளேன். நான் சாதாரண அங்கத்தினன் என்ற முறையில் என்னால் இயன்ற உதவிகளையும் எக்காலத்திலும் செய்யக் காத்திருக்கின்றேன் என்பதை வணக்கத்துடன் தெரிவித் துக் கொள்கிறேன்.

(மேற்கண்ட ஆய்வு நூல் பக்கம் 121-127)

மேற்கண்ட அறிக்கையின் மூலமும், சேலம் மாநாட்டில் அவர் கொண்டு வர நினைத்த தீர்மானம் 'தமிழ் நாடு நீதி கட்சி' என்ற பெயரின் மூலம் அவர் பெரியாரைக் கன்னடர் என்று வெறுத்தார் என்பதற்கோ, தமிழர் கழகம் எனப் பெயர் மாற்ற முயன்றார் என்பதற்கோ எந்த வித சான்றும் இல்லை. எனவே அருகோபாலனின் கூற்றாகிய காலை யில் தமிழர் கழகம் என்ற பெயரை மாலையில் பெரியார்

மாற்றினார் என்பது சுத்தமான வடிக்கட்டின பொய் என்பது புலப்படும்.

அருகோ கூறும் இன்னொருவர் அண்ணல் தங்கோ, சுவாமிநாதன் என்ற இயற்பெயர் கொண்ட இவர் அன்றைய வடஆர்க்காடு மாவட்டம் (வேலூர் மாவட்டம்) குடியேற்றம் பகுதியைச் சேர்ந்தவர். அவர் இந்திய தேசிய காங்கிரசில் தீவிரமாக வேலை செய்து வந்தவர். 1934இல் காந்தி தமிழ்நாட்டிற்கு வந்த போது அவரைத் தமது பகுதியில் பேச செய்வதற்கு முன் அனுமதி பெற்று குடியேற்றம் பாலாற்றங்கரையில் மிகப் பெரிய கூட்டத் திற்கு ஏற்பாடு செய்திருந்தார். இவருடைய வளர்ச்சியை விரும்பாத பார்ப்பன இராசாசி, காந்தி அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதபடி பாதையை மாற்றி அழைத்துச் சென்று விட்டார். இதனால் வெறுப்புற்ற சுவாமிநாதன், பார்ப்பன எதிர்ப்பியக்கமான சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். வடஆர்க்காடு மாவட்டத்தில் செல்வாக்குடன் இருந்தவர் சேலம் நீதிகட்சி மாநாட்டில் தீர்மானம் கொண்டுவரும் அளவுக்குச் செல்வாக்கு பெற்றிருக்க வில்லை. அவருடைய பெயர் அந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலிலோ, இதழ்களிலோ இல்லை. இவர் கி.ஆ.பெ.வுடன் சேர்ந்து தமிழர் கழகம் எனப் பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டு வந்தார் என்பது அருகோவின் கற்பனையே ஆகும்.

24.25-8-1940நாள்களில் திருவாரூரில் நடைப்பெற்ற தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தின் 15ஆவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முதன் மையானது அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இந்திய அரசின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது நாம் அனைவரும் திராவிடர் என்றே பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்துக்கள் என்று பதிவு செய்து கொள்ளக் கூடாது. என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியவர் அண்ணல் தங்கோ ஆவார். அதே திருவாரூர் மாநாட்டில் திராவிட நாடு பிரிவினைத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. திராவிடநாடு பிரிவிணைக்கோரிக்கையை செயல்படுத்த ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் கி.ஆ.பெ. விசுவநாதமும் ஒருவராவார். அப்போது அவர் நீதிக் கட்சியின் செயலாளராகவும் இருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (குடிஅரசு 1-9-1940 பக்கம் 12)

சேலம் மாநாடு முடிந்த பிறகும் கி. ஆ. பெ. விசுவநாதம் நாங்கள் தான் உண்மையான ஜஸ்டிஸ் கட்சி என்று கூறிக் கொண்டிருந்த பி. டி. இராசன், பாலசுப்பிரமணியம் குழுவில் நீதிக் கட்சியில் தான் இருந்தார்.

சில ஆண்டுகள் கழிந்த பின்பே அவர் 1947இல் தமிழர் கழகம் என்ற அமைப்பையும் 'தமிழர் நாடு' என்ற இதழையும் நடத்தி வந்தார். அவர் 21-6-1959இல் நடத்திய திருச்சி வானொலி நிலையத்தில் எழுதப்பட்டிருந்த 'ஆகாசவாணி' பெயர்ப் பலகையைத் தார்ப் பூசி அழிக்கும் போராட்டத்தை நடத்திய போது பெரியார் சென்று அதில் கலந்து அவருடைய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். (மேற்கண்ட நூல் பக்கம் 89)

மா.பொ.சி. இந்திய தேசிய காங்கிரசில் இராசீவ் காந்தி தலைமையில் சேருகின்றவரையில் தமிழரசுக் கழகத்தை வைத்துக்கொண்டுதான் இருந்தார். தமிழரசுக் கழகம் என்ற பெயரை வைத்துக்கொண்டுதான் விடு தலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப் பென்றும் அதன் தலைவர் பிரபாகரனை பயங்கரவாதி என்று கூறிக்கொண்டு ராசீவ்-செயவர்தனே ஒப்பந்தத் தை ஆதரித்து, தமிழகம் முழுவதும் துக்ளக் சோ மற்றும் ஜெயகாந்தன் போன்ற தமிழினத் துரோகிகளுடன் இணைந்து பரப்புரைச் செய்தார். (ம.பொ.சி., ஈழத் தமிழரும் நானும் பக். 186).

எனவே தமிழர் என்ற பெயர் கொண்ட அமைப்பை எல்லாம் திராவிட இயக்கத்தினர் அழித்தனர் என்பதெல் லாம் வடிகட்டின பொய்யேயாகும்.

**- தொடரும்**

## சேலம் தலைமை ஆசிரியர் திரு.பெ.திருநாவுக்கரசு (ஓய்வு) அவர்களின் துணைவியார் மு.கோகிலம் அம்மையார் மறைவு



மாணவப் பருவம் தொட்டு தந்தை பெரியாரின் சுய மரியாதைக் கொள்கையில் பெரும் ஈடுபாடு கொண்ட வர் திரு.பெ.திருநாவுக்கரசு அவர்கள். பெரியாருக்குப் பின் வே.ஆனைமுத்து அவர்களிடம் பேரன்பு கொண்டவர். அவரது இயக்கமான மா.பெ.பொ.க. வின் வளர்ச்சிக்கும் அவ்வியக்க ஏடான சிந்த னையாளன் வளர்ச்சிக்கும் பேராதரவு நல்கி வருபவர். மேனிலைப் பள்ளித் தலைமையாசிரியராகி ஓய்வு பெற்றவர். அவரது துணைவியார் திருமதி. மு.கோகிலம் அம்மையாரும் தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். தோழர் வே.ஆனைமுத்து அவர்களும் நானும் இயக்கத் தோழர்களுடன் எப்போது அவர்கள் இல்லம் சென்றாலும் இன்முகத்தோடு வரவேற்று அமுது படைத்து மகிழ்ந்தவர் அம்மையார். தன் கணவருக்கும் தனது பிள்ளைகள் தி.குறள்அமுது (மகன்), மதிமொழி வரதராசன் (மகள்), ச.சாந்தி (மருமகள்), இரா.வரதராசன் (மருமகன்) மற்றும் பேரப் பிள்ளைகளுக்கும் பெருந்துணை யாக விளங்கியவர்.

மு.கோகிலம் அம்மையயார் அவர்கள் 15.3.2018 அன்று நண்பகல் 12.30 மணிக்கு இயற்கை எய்தினார். 16.3.2018 அன்று காலை நானும் நண்பர் களும் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினோம். காலை 11 மணிக்கு இறுதி நிகழ்வு நடைபெற்றது. வாழ்க அம்மையார் புகழ்.

செய்தி : **செ.ஆனையப்பன்,** மாவட்டச் செயலாளர்

# வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் -
## உச்சநீதிமன்றத்தின் தவறான விளக்கம்

இந்தியாவில் 18 கோடிக்கும் மேற்பட்டவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தவர்கள். ஒவ்வொரு 15 நிமிடத்துக்கும் ஒரு முறை ஒரு தலித் தாக்கப்படுகிறார்; நாள்தோறும் 6 தலித் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர். 2007 முதல் 2017 வரையிலான பத்தாண்டுகளில் தலித்துகளுக்கு எதிரான குற்றச் செயல்கள் 66 விழுக்காடு அதிகரித்துள்ளன. கடந்த பத்தாண்டுகளில், தலித் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்குவதும் இரட்டிப்பாகியிருக்கிறது. இந்த நிலையில்தான், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தொடர்பான வழக்கில் ''அப்பாவிகள் மீது பொய்ப் புகார்கள் அளிக்கப்பட்டு அலைக்கழிக்கப்படுவதாகவும், குற்றம்சாட்டப்பட்டவர்கள் ஜாமீனில் வெளிவர முடியாமல் இருப்பதை நீக்க வேண்டும்'' என்றும் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்திருக்கிறது.

தலித் மக்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக 'தேசிய குற்றப்பதிவு ஆணையம்' (என்சிஆர்பி) அளித்துள்ள தரவுகள் எள் முனையளவைப் போன்றது; பெரிய மலையளவுக்கு குற்றங்கள் மறைக்கப்படுகின்றன. காரணம், ஆதிக்க சாதியினர் பழிவாங்குவார்கள் என்ற அச்சத்தில் பெரும்பாலானவர்கள் புகார் செய்வதே இல்லை. அப்படியே புகார் ஏற்கப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு நடந்தாலும் குற்றம்சாட்டப்பட்டவர் மீதான புகாரை நிரூபிக்க போதிய ஆதாரம் இல்லை என்ற வகையில் விடுதலையாகி விடுவார். இதற்குக் காரணம் இத்தகைய வழக்குகளில் ஒவ்வொரு நிலையிலும் சாதிச் சார்புநிலை அப்பட்டமாக வெளிப்படுவதுதான்.

### நீர்க்கச் செய்வது சரியல்ல

காசிநாத் மகாஜன் வழக்கில், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஏ.கே. கோயல், யு.யு. லலித் ஆகியோர், முன்ஜாமீன் வழங்கத் தடை விதிக்கும் சட்டப் பிரிவு குறித்து உள்நோக்கத்துடன் விளக்கம் அளித்து, சட்டத்தையே நீர்த்துப்போக வைத்துள்ளனர். இந்தத் தீர்ப்பானது சாதிரீதியான அக்கிரமங்களுக்கு முக்கியத்துவம் தரவில்லை; இன்றைக்கும் கடைப்பிடிக்கப்படும் தீண்டாமைக் கொடுமைபற்றி ஏதும் கூறாமலேயே புறக்கணிக்கிறது. தலித்துகள் தங்களுடைய உரிமைகளை வலியுறுத்தும்போதெல்லாம் ஆதிக்க சக்திகள் அவர்களைக் கடுமையாக அடக்கி ஒடுக்குகின்றன என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான காரண விளக்கத்தில் அரசே குறிப்பிட்டிருக்கிறது. தலித்துகளுக்கு எதிராக நிகழ்த்தப்படும் கொடுமைகளின் தீவிரத்தன்மையைக் கருத்தில்கொண்டே, 'குற்றம்சாட்டப்படுபவர்கள் ஜாமீனில் வெளிவர முடியாதபடியான பிரிவு' சட்டத்தில் சேர்க்கப்பட்டது. இச்சட்டப்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றங்கள் எவை என்ற பட்டியலைப் பார்த்தாலே, ஜாமீன் மறுக்கப்படுவதற்கான காரணமும் புரியும். இத்தீர்ப்பின்போது நீதிபதி கோயல் சுட்டிக்காட்டிய 'கர்தார் சிங் வழக்கில்' தீர்ப்பளித்த ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வும் அரசியல் சட்டப்படியே இந்த முன்ஜாமீன் மறுப்பு இருப்பதாகக் கூறி ஏற்றிருக்கிறது.

தலித்துகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் விசாரணை முடிந்து தண்டனை வழங்கப்படுவது மிகவும் குறைவாக இருப்பதால், இந்தப் புகார்கள் போலியானவை என்ற தவறான எண்ணம் பலருக்கு ஏற்படுகிறது. இந்த எண்ணம் உண்மையல்ல என்பதை தேசியக் குற்றப்பதிவு ஆணையத்தில் உள்ள தரவுகள் உணர்த்துகின்றன. இந்தச் சட்டப்படி பதிவுசெய்யப்படும் போலி வழக்குகளின் எண்ணிக்கை 2009-2015 காலத்தில் குறைந்துவிட்டன; அத்துடன் தண்டனை விதிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கையும் 2013-ல் 23.8 ஆக இருந்தது 2014-ல் 28.8 ஆக உயர்ந்திருக்கிறது. பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு 2015-ல் இது ஏன் குறைந்தது என்பது தனியாக ஆராயப்பட வேண்டும். சாதாரணக் குற்றவழக்குகளின் எண்ணிக்கையையும் சாதி, இனம், மதம் போன்றவற்றின் அடிப்படையில் வெறுப்பில் நிகழ்த்தப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்கு எண்ணிக்கையையும் ஒப்பிடுவதே நியாயமுமில்லை, பகுத்தறிவுக்கு ஏற்றதும் இல்லை.




வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைச் செயலற்றதாக்கும் வகையில் விளக்கமளித்த உச்சநீதிமன்றத்தின் போக்கிற்கு எதிராக 2-4-18 அன்று இந்தியா முழுவதும் தலித்துகள் தீவிரமான போராட்டங்களை நடத்தினர்

**பிறழ்சாட்சிகள்**

மோசமான புலன் விசாரணையும், திறமையற்ற வழக்குத் தொடுப்பும்தான் இந்த எண்ணிக்கைகள் குறைவதற்கு முக்கியக் காரணம். இத்தகைய வழக்குகளில் சாட்சிகள், பெரும்பாலும் பிறழ்சாட்சிகளாகிவிடுகின்றனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டப்படி தொடரும் வழக்குகளிலும் தண்டனை பெறுவது மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது; அதனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளையும் தளர்த்திவிடலாமா? குற்றம்சாட்டப் பட்டவர் நிரபராதியாக இருக்கலாம் என்று கருத வேண்டும் என்றால், எல்லா வழக்குகளிலும் எல்லா சட்டங்களிலும்கூட இப்படிக் கருதி முன்ஜாமீன் பெறும் உரிமையை எதிரிகளுக்கு வழங்கிவிடலாமே!

அவருக்கு எதிரான குற்ற வழக்கைத் தள்ளுபடி செய்ய உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டதால் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டி ருக்கிறார். வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தவும் வாய்ப்புகள் இருந்தாலும், அதன் தண்டனை யளிக்கும் பிரிவுகளில் குற்றம்காணக் கூடாது. அப்படிச் செய்தால் அது நசுக்கப்பட்ட மக்களுக்குத் தவறான சமிக்ஞையை அளித்து விடும் என்று உயர் நீதிமன்றம் கூறியிருக்கிறது. ஆனால் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பு மூலம் தவறான சமிக்ஞைகளைத்தான் வெளியிட்டிருக்கிறது.

ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட நீதிசார்ந்த கருத்துகளி லிருந்து உச்சநீதிமன்றம் இப்போது விலகியிருக்கிறது. முன்ஜாமீன் என்பது 1973-ல் தான் சட்டத்தில் சேர்க்கப்பட்டது; இது வரையறைக்குட்பட்ட அரசியல் சட்டப்படியான உரிமையே தவிர வாழ்வுரிமை, தனிப்பட்ட சுதந்திர உரிமை ஆகியவற்றை உறுதிசெய்யும் அரசியல் சட்டத்தின் 21-வது கூறின்படியானது அல்ல என்று உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே கூறியிருக்கிறது. நீதிபதி கோயலின் தீர்ப்பானது தலித்துகளுக்கு எதிரான குற்றங்களுக்காக வழக்குக்கு ஆளாகும் அதிகாரிகளுக்குச் சாதகமாக அதிக இடம் கொடுத்திருக்கிறது. குஜராத் உயர் நீதிமன்றத் தீர்ப்பிலிருந்து அவர் நிறைய மேற்கோள் காட்டி யிருக்கிறார். வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்படியான வழக்குகளில் மிகமிகக் குறைந்த அளவுக்கே தண்டனை வழங்கியுள்ள மாநிலம் குஜராத் என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்.

இந்த வழக்கில் அரசுத் தரப்பு வாதத்தைத் தீர்ப்பில் ஒரு பத்தி மட்டுமே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது; அதற்கும் மேல் சொல்ல ஏதும் இல்லை. அரசுத்தரப்பு இந்த வழக்கில் இப்படி அசுவாரசியமாக வாதாடியதில் நமக்கு வியப்பு ஏதும் இல்லை!

அரசு அதிகாரிகள் நல்ல நம்பிக்கையில் நடவடிக்கைகள் எடுத்திருந்தால் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் 22-வது பிரிவு அவர்களைப் பாதுகாக்கிறது. இப்போது புதிய தீர்ப்புக்குப் பிறகு பூர்வாங்க விசாரணையின்றி முதல் தகவல் அறிக்கையைக் கூட பதிவு செய்ய முடியாது. அப்படியே முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டாலும், அவருடைய மேல் அதிகாரி அனுமதி தராமல் கைதுசெய்ய முடியாது. காவல் துறையின் மூத்த கண்காணிப்பாளரின் ஒப்புதலின்றி யார் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்ய முடியாது.

தலித்துகளுக்கு எதிராகக் குற்றங்கள் இழைக்கப்பட்டாலும் காவல் துறையிடம் புகார்செய்வது ஏற்கெனவே குறைவாக இருக்கிறது. இந்தத் தீர்ப்புக்குப் பிறகு அவர்களுக்கு அச்சமே அதிகமாக இருக்கும். மத்திய அரசு விரைந்து இந்தத் தீர்ப்புக்கு எதிராக மறு சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்!

- ஃபைஸான் முஸ்தஃபா, ஹைதராபாதில் உள்ள நல்சார் சட்டப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்.
தமிழில்: சாரி,
நன்றி : தி இந்து (தமிழ்) 2.4.2018

## லெனின், பெரியார் சிலையை உடைத்து மதவெறியைத் தூண்டும் எச்(சை) இராசாவுக்கும் பாஜாவுக்கும் கீழ்பென்னாத்தூரில் கண்டன ஆர்ப்பாட்டம்




புரட்சியாளர் லெனின், தந்தை பெரியார் சிலைகளைக் குறிவைத்து, மதவெறியைத் தூண்டிய எச்(சை) ராசாவைக் குண்டர் சட்டத்தில் கைது செய்யக்கோரி, திருவண்ணா மலை மாவட்டம் கீழ்பென்னாத்தூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், மா.பெ.பொ.கட்சி தலைமையில் அனைத்து கட்சியினரும் கலந்து கொண்டு நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டம் 9.3.2018 வெள்ளிகிழமை மாலை 5 மணி அளவில் கீழ்பென்னாத்தூர் பேருந்து நிலையம் அருகில் மா.பெ.பெ.கட்சியின் திருவண்ணா மலை மாவட்டச் செயலாளர் பொன். சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் முகில்வண்ணன், சாதிகலைந்தோர் சங்கம், ச.க.அன்பு, தி.மு.க., அ.சித்திர வேல், ம.தி.மு.க., ம.சக்திவேல், டிடிவி தினகரன் அணி, பெ.பலராமன், பா.ம.க. கோ.அண்ணாமலை, இலக்கிய அணி தி.மு.க., முகிலன், மக்கள் சனநாயக குடியரசுக் கட்சி, கோ.கோதண்டராமன் மாவட்ட துணை செயலாளர், மா.பெ.பொ.க., க.ஆதிமூலம், சுந்தர், அம்பேத்கர் எழுச்சி இயக்கம், கரிக்கலாம்பாடி ஆகியோர் கண்டன உரை யாற்றினர். இறுதியில் பொன்.சுப்பிரமணியன் அனைத் துக் கட்சிகள் மற்றும் அமைப்புகள் சார்பில் கலந்து கொண் டோருக்கு நன்றி கூறினார்.

# புரட்சியாளர் அம்பேத்கர்

மரு.க.சோமாஸ்கந்தன்

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

**நாகபுரி அனைத்திந்தியத் தாழ்த்தப்பட்டோர் மாநாடு:-**

1942 சூலை 18, 19 நாள்களில் திரு.என். சிவராஜ் தலைமையில் நடைபெற்ற அனைத்திந்தியத் தாழ்த்தப் படோர் மாநாட்டில், அம்பேத்கர் உரையாற்றினார். இம் மாநாட்டின் வெற்றி உங்கள் உறுதிமிக்க உழைப்பால் விளைந்ததாகும். நம் மக்கள் அரசியல் விழிப்படைந் துள்ளனர். கல்வி உள்பட பல துறைகளிலும் முன்னேறி யுள்ளனர். அரசுப் பணிகளிலும் காலூன்றியுள்ளனர். பெண்களும் முன்னேறியுள்ளனர். இது மன நிறை வைத் தருகின்றது, நமக்குத் தனி அரசியல் உரிமைகள் அளிக்கப்பட வேண்டும், என்றார். உலகப்போரில், சர்வாதிகாரம் வென்றிடாமல் தடுத்திட அரசின் போர் நடவடிக்கைகளுக்குக் கை கொடுத்திடல் வேண்டும் எனக் கூறினார்.

"அனைத்திந்திய தீண்டப்படாத வகுப்புகளின் பேரவை" உருவாக்கப்பட்டது பற்றி மாநாட்டில் அறி விக்கப்பட்டது. நாகபுரியில் இருக்கும் போது தான், சூலை 20 அன்று தந்தி மூலம் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் பொறுப்பை ஏற்றார். வானொலியில், அம்பேத்கர் உரையாற்றி அரசின் போர் நடவடிக்கை களுக்கு ஆதரவளித்தார். இது சர்வாதிகாரத்திற்கும் சன நாயகத்திற்கும் இடையே நடக்கும் போர். சர்வாதி காரத்திற்கு அடிப்படையாக இருப்பது இனவெறி கொண்ட ஆணவமேயாகும். நாசிசம் மானுடத்தின் எதிர்காலத் திற்கே அச்சுறுத்தலாகும். சன நாயகத்தையும் இவ்வு லகையும் அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டியது நம் கடமையாகும்" என்று அம்பேத்கர் 1942, நவம்பர் 15 ஆம் நாள் பம்பாய் வானொலியில் "போரும் இந்தியத் தொழிலாளரும்" என்ற தலைப்பில் பேசினார். ஆனால் மகாத்மா காந்தி, பிரிட்டிஷ் அரசு இந்திய மக்களின் அனுமதி பெறாமலே இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தி யதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆகஸ்டு போராட்டத்தைத் தொடங்கினார்.

**தொழிலாளர் முத்தரப்பு மாநாடு :**

தொழிலாளர் நல அமைச்சர் அம்பேத்கர் தலை மையில் டில்லியில் 1943 செப்டம்பர் 6,7 ஆகிய நாள்களில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் அம்பேத்கர் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கான கோரிக்கைகளை முன் வைத்தார். உணவு, உடை, உறையுள், கல்வி, கலாச்சார மேம்பாட்டு வசதிகள், மருத்துவம் ஆகிய வையே தொழிலலர்கள் கோரும் தேவைகள் என விளக்கினார்.தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கான திட்டத்தை அரசு உருவாக்க வேண்டும். தன்னுடைய முயற்சியால் மத்திய சட்டசபையிலும், மத்திய மேல் சட்டசபையிலும் தீண்டப்படாத வகுப்பினர்களுக்கான



பிரதிநிதித்துவம் கூடுதலாகப் பெற்றது பற்றி, அம்பேத்கர் மன நிறைவு கொண்டார். தீண்டப்படாத வகுப்பினர் இராணுவத்தில் உயர் அதிகாரிகளாகப் பதவி வகிக்கக் கூடாது என்று இருக்கின்ற தடையை நீக்கவேண்டும் என்று கோரி ஐக்கியமாகாணங்களைச் சார்ந்த தீண்டப் படாத வகுப்பு உறுப்பினரான பியாரிலால் குரீல் தாலீப் மத்திய சட்ட சபையில் கொண்டுவந்த தீர்மானம் 1943 அக்டோபர் மாதத்தில் நிறைவேறியது.

தான் அமைச்சரான பிறகு, தீண்டப்படாத வகுப்பின ருக்காக தான் பெற்றுத் தந்துள்ள நன்மைகளை 1943 நவம்பரில் தொழிலாளர்களிடம் விளக்கினார். தீண்டப் படாதவர்களுக்கு மத்திய அரசு அலுவலகங்களில் 8.33 விழுக்காடும், இலண்டனில் தொழிற்கல்வி படிப்பில் தனி இடஒதுக்கீடும், மத்திய சட்ட சபையில் கூடுதலாக ஓர் இடமும், மாநிலங்கள் அவையில் புதியதாக ஓர் இடமும் பெறப்பட்டுள்ளதை அம்பேத்கர் விளக்கினார்.

1944 ஏப்ரல் மாதத்தில் நிலையாக இயங்கிக்கொண் டிருக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழி லாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்று கோரும் திருத்த மசோதவை மத்திய சட்ட சபையில் அம்பேத்கர் முன்மொழிந்தார். வைசிராய் வேவல் பிரபு, 1945 செப்டம்பரில் இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெறும் என அறிவித்தார். காங்கிரஸ், வெள் ளையனே வெளியேறு என்ற முழக்கத்துடனும், பண பலத்துடனும் முஸ்லீம் லீக் பாகிஸ்தான் பிரிவினைக் கோஷத்தோடும், இந்து மகாசபை இந்தியாவின் சுதந்திரம், இந்திய ஒற்றுமை என்ற பிரச்சாரத்துடனும் தேர்தலைச் சந்தித்தன. தீண்டப்படாத மக்கள் பேரவைக்கு அமைப்பு வசதியும் பணபலமும் இல்லாத நிலையில் தேர்தலை எதிர்கொண்டது.1945 அக்டோபர் 4 ஆம் தேதி தேர்தல் பிரச்சாரத்தைப் பூனாவில் தொடங்கினார். காங்கிரஸின் வழிகாட்டுதலை நம்பக்கூடாது, காங்கிரஸ் முதலாளி

களின்-பனியாக்களின் கையாளாக இருந்து வருகிறது. தீண்டப்படாதவர்களின் குறைகளை நீக்க காங்கிரஸ் எத்தனிக்கவே இல்லை. இதற்குப் பரிகாரம் தீண்டப்படாத வர்களின் கையில்தான் இருக்கிறது. அரசியல் அதிகாரத் தைத் தீண்டப்படாதவர்கள் பிடிக்கவேண்டும். தொழி லாளர்கள், இந்தியாவில் தொழிலாளர்களின் அரசை ஏற்படுத்துவதற்காகப் பாடுபடவேண்டும். இதுதான் தன் நோக்கமாகும் என்றார் அம்பேத்கர் . இந்தியா சுதந்தரம் அடைவது மட்டும் போதாது. அதைவிட முக்கியமானது அந்தச் சுதந்தரம் யாருடைய கையில் இருக்கவேண்டும் என்பதே ஆகும் என்று குறிப்பிட்டார். அந்தத் தேர்தல் அவர்களுக்கு வாழ்வா, சாவா என்பதாகும். அரசியல் சட்டம் ஏற்படுத்தும் குழுவை, மாநில சட்டசபைகள் தான் தேர்ந்தெடுக்கப் போகின்றன என்று பேசினார்.

தேர்தலில் அம்பேத்கரும் அவரது கட்சியினரும் தோல்வியைச் சந்தித்தனர். காங்கிரஸ் பெரும் வெற்றி யினை அறுவடை செய்தது.

இந்தியர்களும், இந்திய இராணுவ வீரர்களும் விடுதலை உணர்வு மிக்கவர்களாகக் கிளர்ச்சிகளிலும் ஈடுபடலாயினர். ஆங்கிலேயர்களும் இந்தியாவை வெகு நாள்களுக்கு அடிமைப்படுத்தியிருக்க முடியாது என்று உணர்ந்தார்கள். பிரதமர் அட்லி 1946 மார்ச் 15 ஆம் தேதி இந்தியா முழுசுதந்திரம் அடையும் உரிமையையும், தமது பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் சேர்ந்தோ அல்லது சேராமலோ இருக்கலாம் என்பதையும் ஒப்புக்கொண்டார்.

சுதந்திரம் வழங்குவது குறித்து ஆய்வு செய்திட பிரிட்டிஷ் பிரதமர் அமைச்சரவைக் குழுவினை அனுப்பினார், அக்குழு 1946 மார்ச் 24 இந்தியா வந்து சேர்ந்தது. அக்குழுவை, காங்கிரஸ் சார்பில் மௌலானா அபுல்கலாம் ஆசாத், முஸ்லீம் லீக் சார்பில் முகம்மது அலி ஜின்னா, சிற்றரசர்கள் சார்பாக போபால் நவாபு ஆகியோர் சந்தித்து சாட்சியம் அளித்தனர் இந்தியா முழுவதையும் மூன்று முஸ்லீம்களே பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். தாழ்த்தப் பட்டவர்களின் கோரிக்கையைத் தனியாக அம்பேத்கர் எழுதிக்கொடுத்தார்.

1946 மே 16 இல் அந்தக்குழு தன் முடிவை அறிவித்தது. தாழ்த்தப்பட்டவர்களின் கோரிக்கையை அக்குழு ஏற்றுக் கொள்ளவில்லை.

1946 இல் வைசிராய் இடைக்கால பாதுகாப்பு அரசை அமைத்திட இருந்தார். ஆகவே நிர்வாகக்குழு உறுப்பி னர்கள் 1946 சூன் மாதம் மூன்றாவது கிழமை பதவி விலகினர். தொழிலாளர் அமைச்சராக இருந்த அம்பேத் கரும் விலகினார். ஜுன் 29 இல் பாதுகாப்பு அரசு அறிவிக் கப்பட்டது.

''மக்கள் கல்விக் கழகம்'' என்ற அமைப்பை உருவாக்கினார் அக்கல்விக்கழகம்.1946 சூன் 20 இல் தீண்டப்படாத மக்களின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் ஒரு கல்லூரியைத் தொடங்கியது. இந்தியா விலேயே சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக அக்கல்லூரித் திகழ்ந்தது. அந்தக் கல்லூரிக்கு சித்தார்த்தா என்று பெயரிடப்பட்டது புதிய வைஸ்ராய் மௌண்ட்பேட்டன் பிரபு 1947 ஜுன் 3ஆம் நாள் பிரிட்டிஷ் அரசின் திட்டத்தை வெளியிட்டார். இத்திட்டத்தின்படி இரண்டு மத்திய அரசுகள், இரண்டு அரசியல் நிர்ணய சபைகள் ஏற் படுத்தப்படும். இந்தியாவைத் துண்டாடுவதை எதிர்த்து வந்த மகாத்மா காந்தியும் இறுதியில் இத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார்.

**1947 ஜுலை 15 ஆம் நாள் பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கும் மசோதா நிறைவேறியது. அரசியலமைப்புச் சட்ட அவையின் கொடி வடிவமைப்புக் குழுவின் உறுப்பினராக அம்பேத்கர் இருந்தார். 1947 ஜுலை 22 ஆம் நாள் அரசியலமைப்புச் சட்ட அவை, அசோகச் சக்கரத்துடனான மூவண்ணக் கொடியை இந்திய நாட்டின் தேசியக் கொடியாக ஏற்றுக் கொண்டது.**

1947 ஆகஸ்டு 15 இல் இந்திய விடுதலைக்குப் பின் அமைந்த காங்கிரஸ் ஆட்சியின் போது, இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பொறுபேற்க அம்பேத்கர் அழைக்கப்பட்டார். ஆகஸ்ட் 29 இல் அம்பேத்கர் தலைமையில் இந்திய அரசியலமைப்புச் சட்ட வரைவுக் குழு அமைக்கப்பட்டது. கோபால்சாமி ஐயங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், கே.எம்.முன்ஷி, டி.டி. கிருஷ்ண மாச்சாரி, என்.மாதவராவ் (அனைவரும் பிராமணர்) முகம்மது சதகத்துல்லா, ஆகியோர் உறுப்பினர்கள். ஐந்து பிராமணர், ஒரு முஸ்லீம், ஒரு தீண்டப்படாதவர், என அன்று கல்வி, சமூக மேதைகள் சமூக ரீதியில் இப்படித் தான் இருந்தனர். அம்பேத்கர் தலைவராகப் பொறுப் பேற்று அரசியல் அமைப்புச் சட்டம் எழுதும் பணியில் ஈடுபட்டார்.

1947 ஆகஸ்டு மாதம் முதலே உடல் நலம் குன்றியிருந்த நிலையிலும் எடுத்தகாரியத்தைச் சிறப்புற முடித்திட வேண்டும் என்று ஊக்கத்துடன் அம்பேத்கர் தன் பணியைத் தொடர்ந்தார் 1948 பிப்ரவரி மாதக் கடைசி வாரத்தில் அம்பேத்கர் அரசியலமைப்புச் சட்டத்தை எழுதி முடித்தார். அதன் பின் தன் உடல் நலம் பேணிட பம்பாய் மருத்துவமனைக்குச் சென்றார். மருத்துவமனையில் அம்பேத்கருடன் உடனிருந்து உடல் நலம் பேணிக்காத் திட்ட மருத்துவர் செல்வி சவிதா கபீர் அவர்களைத் தன் வாழ்க்கைத் துணைவியாக 1948 ஏப்ரல் 15 ஆம் நாள் ஏற்றுக்கொண்டார்.

1948 நவம்பர் 4 இல் அரசியல் சட்ட முன்வரைவு, அரசியல் நிர்ணயசபையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அம்பேத்கரின் விளக்கவுரையும் அரசியல் அமைப்புச் சட்டமும் எல்லாராலும் போற்றிப் புகழப்பட்டன. 1949 நவம்பர் 26 ஆம் நாள் 395 விதிகளையும், 8 அட்ட வணைகளையும் கொண்ட அரசியல் அமைப்புச் சட்டத்தை அரசியல் சட்டசபை நிறைவேற்றியது. அரசியல் சட்டவரைவு நகலின்பேரில் 7600 திருத்தங்கள் முன்மொழியப்பட்டன அவற்றுள் 2473 மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றின் மீது முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்துச் சட்டத் திருத்த மசோதாவை அம்பேத்கர் 1948 அக்டோபரில் அரசியல் சட்ட அவையிடம் அளித்திருந்தார்.

இந்த மசோதாவை எதிர்த்தும் ஆதரித்தும் விவாதங்கள் பாராளுமன்றத்தில் நடைபெற்றன. பிரதமர் பண்டித நேரு இந்த இந்துச் சட்டமசோதா நிறைவேற்றப்பட வேண்டும் என்று உறுதியுடன் ஆதரவளித்தார். ஆனால் சர்தார் வல்லபாய் படேல், இராஜேந்திர பிரசாத் போன்றவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். ஆதலால் இம் மசோதவை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்து விவாதிக்க காலங்கடத்தினார் பண்டித நேரு.

இந்துச் சட்ட திருத்தத் மசோதாவை நிறைவேற்றிட பலத்த எதிர்ப்புகளும் தடைகளும் ஏற்படுத்தப்பட்டன. இதனால் மனம் வருந்திய அம்பேத்கர் 1951 செப்டம்பர் 27 இல் அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

அதன் பின் அம்பேத்கர் 1951 நவம்பர் 18ஆம் நாள் பம்பாய் சென்றார். அங்கே அவருக்கு விக்டோரியா டெர்மினசில் தீண்டப்படாத சாதிகள் பேரவையும் சோஷலிஸ்டு கட்சியும் இணைந்து மாபெரும் வரவேற்பளித்தன. அதன் பின்னர் சித்தார்த்தா கல்லூரிக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அக்கல்லூரியில் தங்குவதை வழக்கமாக்கிக் கொண்டார். தேர்தலில் ஈடுபட காங்கிரசுக்கு எதிராக, சோஷலிஸ்டு கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டார். பம்பாய் சௌபாத்தியில் நடைபெற்ற கூட்டத்தில், இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தவர் சுபாஸ் சந்திரபோஸ்தானே தவிர காங்கிரஸ் அல்ல என்று கூறினார். அடுத்த நாள் கவாஸ்ஜி ஜகாங்கீர் அரங்கில் தீண்டப்படாத சாதிகள் பேரவையும் சோஷலிஸ்டு கட்சியும் இணைந்து நடத்திய கூட்டத்தில் பேசினார். காங்கிரஸ் அரசு தூய்மையான ஆட்சியைத் தரத் தவறிவிட்டது. பிரதமர் நேரு, ஆட்சியில் உள்ள ஊழல், பெருங்கேடானதாக இல்லை என்று கூறியுள்ளது மிகவும் வேதனையாக உள்ளது என்றார். காங்கிரஸ் கட்சிக்கு நன்றி மறந்தவராக மாறிவிட்டார் அம்பேத்கர் என்ற குற்றச்சாட்டுக்கு அவர் பதிலளித்தபோது, "எந்த ஒரு மனிதனும் தன் சுயமரியாதையை இழந்து நன்றி செலுத்தமாட்டான். எந்த ஒரு நாடும் தன் சுதந்திரத்தை இழந்து நன்றி செலுத்தாது; எந்தவொரு பெண்ணும் கற்பை இழந்து நன்றி செலுத்தமாட்டாள்", என்று ஜரிஷ் தத்துவமேதையின் கூற்றை எடுத்துக்காட்டிப் பேசினார்.

1952 இல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் வடக்கு பம்பாய் தொகுதியில் வேட்பாளராக நின்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் அவருடைய முன்னாள் உதவியாளர் நாராயண் கஜ்ரோல்கர் ஆவார். அவரிடம் அம்பேத்கர் தோல்வியுற்றார். பின்னர் அம்பேத்கர் ராஜ்யசபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

1954 இல் பந்தாராவில் நடைபெற்ற லோக் சபை இடைத்தேர்தலில் போட்டியிட்டு காங்கிரஸ் வேட்பாளரிடம் தோல்வியைச் சந்தித்தார். 1957 இல் இரண்டாவது பொதுத் தேர்தல் நடைபெற்ற போது அம்பேத்கர் உயிருடன் இல்லை.

அம்பேத்கர் இளமையில் மகாபாரதத்தையும், இராமாயணத்தையும் ஆர்வமுடன் படித்திருந்த போதும் அவர் தன்னைச் சிறந்த மனிதராக உருவாக்கி வளர்த்துக் கொண்டதில் புத்தரின் வாழ்வும், கபீரின் போதனைகளும், சோதிபா புலேயின் போராட்டங்களும் பெரும் பங்காற்றின. அவர் மேலை நாட்டில் பெற்ற கல்வி அவருக்கு அறிவாயுதங்களை வழங்கியது.

**புத்தம் தழுவுதல்**

1950 முதல் அம்பேத்கர் புத்தமதத்தின் மீது ஈடுபாடு கொண்டிருந்தார் புத்தமத நூல்களைப் படித்து ஆய்வு செய்து வந்தார். மே 25 இல் தன் மனைவியுடனும் சுதந்தரக் கட்சியின் செயலாளர் ராஜ்போஜ்வுடனும் கொழும்பு சென்று புத்தமதத்தின் செயற்பாடுகளைக் கண்டறிந்தார். 1954 டிசம்பரில் மூன்றாவது உலக பௌத்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இரங்கூனுக்குச் சென்றார். 3-1-1955 இரங்கூனில் பெரியாரைச் சந்தித்து அங்கு உரையாடினார். "புத்தரும் அவருடைய தம்மமும்", "பண்டைய இந்தியாவில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும்", "புத்தரும் மார்க்சும்" ஆகிய நூல்களை 1956 பிப்ரவரியில் எழுதி முடித்தார்.

மதம் மாறுவது குறித்து 23-9-1956 அன்று அறிக்கை வெளியிட்டார். 14-10-56 அன்று நாகபுரியில் தன் மனைவியுடன் புத்தமதத்திற்கு மதம் மாறினார். அவரைத் தொடர்ந்து அவரின் ஐந்து இலட்சம் தொண்டர்களும் மதம் மாறினர். 1956 நவம்பர் 15 ஆம் நாள் காட்மண்டுவில் உலக பௌத்த சங்க நான்காவது மாநாடு நடைபெற்றது உடல்நிலை சரியில்லாத நிலையிலும் அம் மாநாட்டில் கலந்துகொண்டார். 1956 டிசம்பர் 2ஆம் தேதி அசோக்விகாரில் தலாய்லாமாவிற்கு அளிக்கப்பட்ட வர்வேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். 1956 டிசம்பர் 4ஆம் தேதி மாநிலங்கள் அவை வராந்தாவில் சில நண்பர்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார். நாடாளுமன்றத்திற்கு அம்பேத்கரின் கடைசி வருகையாக அது அமைந்து விட்டது..

1956 டிசம்பர் 6 ஆம் நாள் காலை 6.30 மணியளவில் அந்தப் புரட்சியாளர் மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்டார்.

**பெரியார் இரங்கல்:-**

"இந்தியாவின் சிறந்த அறிஞர்களில் முன்னணியிலுள்ள அறிஞரும், ஏராளமான விஷயங்களைக் கற்றுத் தேர்ந்த கலாநிதியுமான அம்பேத்கர் அவர்கள் முடிவெய்தி விட்டார் என்ற செய்தி கேட்டவுடன் திடுக்கிட்டுப் பதறிவிட்டேன். உண்மையில் சொல்லவேண்டுமானால் டாக்டர் அம்பேத்கர் மறைவு சரி செய்யமுடியாத மாபெரும் நட்டமேயாகும். அவர் சிறப்பாக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்குத் தலைவர் என்று சொல்லப்பட்டாலும், பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாகவுள்ள பேரறிஞராக விளங்கினார். எப்படிப்பட்டவரும் எடுத்துச் சொல்லப் பயப்படும்படியான புரட்சிகரமான விஷயங்களையெல்லாம் வெகு சாதாரணத் தன்மையில் எடுத்துச் சொல்லும் படியான வீரராகவும் விளங்கினார்.

இந்து மதம் என்பதான ஆரிய ஆத்திகக் கோட்பாடுகளை வெகு அலட்சியமாகவும் ஆபாசமானதாகவும், அர்த்தமற்றதாகவும் மக்கள் கருதும்படியாகவும் பேசியும்

எழுதியும் வந்தார். உதாரணம் சொல்லவேண்டுமென் றால், காந்தியாரையே ஒரு பத்தாம்பசலி, பிற்போக்குவாதி என்றும், அவரால் பிரமாதமாகப் படிக்கப்பட்டு வந்த கீதையை, முட்டாள்களின் உளறல்கள் என்றும் சொன்ன தோடு, காந்தியாரின் கடவுளான இராமனை மகாக் கொடியவன் என்றும், இராமாயணக் காவியம் எரிக்கத் தகுந்தது என்றும் சொல்லி, பல்லாயிரக் கணக்கான மக்களிடையில் இராமாயணத்தை எரித்துச் சாம்பலாக்கிக் காட்டினார். இந்துமதம் உள்ளவரையும் தீண்டாமையும், சாதிப்பிரிவும், அவற்றால் ஏற்பட்ட கொடுமையும் ஒழியவே ஒழியாது என்றும் ஓங்கி அறைந்தார். இந்தக் கருத்துகள் தவழும்படியான ஏராளமான நூல்களை எழுதி வெளியிட்டார். இப்படியாக அநேகக் காரியங்களைச் செய்த மாபெரும் பகுத்தறிவுவாதியும், ஆராய்ச்சி யாளரும், சீர்திருத்தப் புரட்சி வீரருமான டாக்டர் அம்பேத்கர் முடிவு எய்தியது இந்தியாவுக்கும், தாழ்த்தப்பட்டமக்களுக்கும், பகுத்தறிவு வளர்ச்சிக்கும் எளிதில் பரிகரிக்க முடியாத பெரியதொரு குறைவேயாகும்.

**அம்பேத்கரின் மறைவு என்னும் செய்தி திடீரென்று மொட்டையாக வெளியானதிலிருந்து, அவருடைய மரணத்துக்குப் பின்னால் சில ரகசியங்கள் இருக்க லாமென்று கருதுகிறேன். அதாவது காந்தியார் மரணத்துக்கு உண்டான காரணங்களும், அதற்கு ஆதாரணமான பல சங்கதிகளும் டாக்டர் அம்பேத்கர் மரணத்துக்கும் இருக்கக்கூடும் என்பதே ஆகும்'' என்று, பெரியார் அறிக்கை வெளியிட்டார்.**

**அம்பேத்கர் நினைவைப் போற்றி**

அம்பேத்கர் இறந்தபின், இந்தியரசின் உயர்ந்த விருதான பாரத ரத்னா விருதினை 1990 ஆம் ஆண்டில் அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கியுள்ளது லக்னோ வில் உள்ள பூங்காவிற்கு, அம்பேத்கர் பூங்கா எனப் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகிறது. அப்பூங்காவில் அம்பேத்கர் சிலையும் நிறுவப்பட்டுள்ளது அவுரங்கா பாத்திலுள்ள மராத்வாடா பல்கலைக்கழகம், டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கர் பல்கலைக்கழகம் எனப் பெயரி டப்பட்டுள்ளது. அங்கே டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கர் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

நாக்பூரில் உள்ள சர்வதேச விமான நிலையம் சோனேகான் விமான நிலையம் என அறியப்பட்டது. .அதற்கு டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கர் சர்வதேச விமான நிலையம் எனப் பெயரிடப்பட்டுள்ளது, ஜலந்தரில் உள்ள நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜிக்கு டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி எனப் பெயரிடப்பட்டது.

இந்திய நாடாளுமன்றக் கட்டிடத்தில் அரசால் அங்கீ கரிக்கப்பட்ட அம்பேத்கர் ஓவியம் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது. சென்னைச் சட்டக் கல்லூரி, அம்பேத்கர் சட்டக் கல்லூரி என்று அழைக்கப்படுகிறது.

**வெல்க அம்பேத்கரின் கொள்கைகள்!**

**- முற்றும்**


## காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக்கோரி வாணியம்பாடியில் ஆர்ப்பாட்டம்



வேலூர் மாவட்டம் வாணியம்பாடியில் தமிழக வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் சார்பில் 31.03.2018 காரிக்கிழமை காலை 10.30 மணி முதல் 11.30. மணி வரை காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத நடுவணர சையும் மாநில அரசையும் கண்டித்து விடுதலைச் சிறுத் தைகள் கட்சியின் மாநில மருத்துவர் அணிச் செயலாளர் மருத்துவர் சு. ஞானசேகரன் தலைமையில் ஆர்பாட்டம் நடைபெற்றது. ஆர்பாட்டத்தில் தமிழக மக்கள் முன்னனியின் தோழர் செவ்வேள் தமிழ்நாடு பவுத்த சங்கத்தின் ஒருங் கிணைப்பாளர் அ. கஜேந்திரன் மு.சு.தங்கவேலன் அன்புச் சேரன் குமரேசன் வி.சி.க.வேலு பிரதாப்பன் புரட்சி கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் வாணியம்பாடி செயலாளர் புலவர் அ. சகாதேவன் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் ஒன்றியச் செயலாளர் தோழர் சீனி பழனி மற்றும் நகரசெயலாளர் நா.மதனகவி ஆகியோர் பங்கேற்றனர்.

செய்தி : **நா. மதனகவி**

## திருச்சி, திருவெறும்பூர் மா.ரெத்தினம் மறைவுற்றார்



தந்தை பெரியார், அம்பேத்கர் கொள்கைப் பற்றாளரும், கடந்த முப்பது ஆண்டுகளாக, கண்தானம், இரத்ததானம், உடல்தானம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்திவருப வரும் மற்றும் கடவுள், மதம், சாத்திர மூடநம்பிக்கைகளுக்கு எதிராகச் செயல்பட்டுவருபவரும் 'நாளை விடியும்' ஆசிரியரும் சமூக செயல் பாட்டாளருமான தோழர் இரா.அரசெழி லன் அவர்களின் தந்தையார் மா.ரெத்தினம் (85) அவர்கள் உடல்நலக்குறைவால் தனது வீட்டில் 13.3.2016 அன்று மறைவுற்றார். அவரது கண்கள் தானமாக வழங்கப்பட்டன. 14.3.16 மதியம் அவரது உடல் திருச்சி கி.ஆ.பெ.விசுவ நாதம் அரசு மருத்துக் கல்லூரிக்குக் கொடையாக அளிக்கப் பட்டது.

தோழர் இரா.அரசெழிலன் தந்தையார் மறைவால் இழந்து வருந்தும் குடும்பத்தார் அனைவருக்கும் மா.பெ.பொ.க. சார்பாக ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரி வித்துக் கொள்கிறோம். இறுதி நிகழ்வில் வடக்கலூர் ந.கருணாகரன், உறையூர் இரா.கலியபெருமாள் கலந்து கொண்டனர். செய்தி : திருச்சி. **ந.கருணாகரன்**

# தமிழ்மொழி 4,500 ஆண்டு பழமை வாய்ந்தது

தமிழ் உள்பட, 82 மொழிகளை உள்ளடக்கிய திராவிட மொழிக்குடும்பம் 4,500 ஆண்டுகள் முன்பு தோன்றியது என்று ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக் கப்பட்டுள்ளது. அவற்றுள் தமிழ்தான் மிகப் பழமை யான மொழி என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமஸ்கிருதம் போல சிதைந்து அழியாமல் தமிழ் மொழி தொடர்ந்து செழுமையோடு பயன்பாட்டில் இருப்பதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜெர்மனியில் உள்ள 'மேக்ஸ் பிளான்க்' அறிவியல்-மானுடவியல் வரலாற்றுக் கல்வி நிறுவனமும், உத்தர காண்டின் டேராடூனில் அமைந்துள்ள இந்திய வன உயிர்க் கல்வி நிறுவனமும் இணைந்து இம்மொழி ஆராய்ச்சினை மேற்கொண்டன.

இந்தியாவின் ஆதி இனமாகக் கருதப்படும் திராவிடர் களின் மொழியியல் குறித்த ஆய்வை அந்நிறுவனங் களைச் சேர்ந்தவர்கள் மேற்கொண்டனர். தமிழில் இருந்து தோன்றிய பிற மொழிகள் குறித்தும், அவற்றி லிருந்து பிரிந்து புதிதாக உருவான கிளை மொழிகள் குறித்தும் அவர்கள் பல்வேறு தரவுகளைச் சேகரித்தனர். அதன் அடிப்படையில் சில விஷயங்களைக் கண்டறிந்து அதனை ஆய்வறிக்கையாகச் சமர்ப்பித்துள்ளனர். அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது:

கிழக்கே வங்கதேசத்தில் இருந்து மேற்கே ஆப் கானிஸ்தான் வரை பரவியிருக்கும் தெற்காசியப் பகுதி யானது குறைந்தது 600 மொழிகளின் தாயகமாக விளங்கியுள்ளது. திராவிடம், இந்தோ-ஐரோப்பா, சீனா-திபெத்தியம் உள்பட 6 மொழிக் குடும்பங்களின் கீழ் அந்த மொழிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் முதன்மையானதும், பழமையானது மான திராவிட மொழிக் குடும்பம், சுமார் 80 மொழி களை உள்ளடக்கியது. ஏறத்தாழ 22 கோடி மக்கள் அம்மொழிகளை தற்போது பேசுகின்றனர். தென்னிந்தியா மற்றும் மத்திய இந்தியாவில்தான் அவற்றின் பயன் பாடு அதிக அளவில் உள்ளது. திராவிட மொழிக்குடும் பத்தில் பழமையான மொழி தமிழ்மொழிதான். அதைத் தவிர கன்னடம், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளும் பரவலாக உள்ளன. அம்மொழிகளின் இலக்கியங்கள் அனைத்தும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றியவை.

உலகின் மூத்த மொழிகளில் தமிழைப் போலவே சமஸ்ருதமும் கருதப்படுகிறது. ஆனால், தமிழைப் பொருத்தவரை சமஸ்கிருதத்தைப் போல சிதைந்து போகாமல் அதன் காப்பியங்களும், கல்வெட்டுகளும் முற்காலத்திலிருந்து தற்காலம் வரை தொடர்ந்து காணக் கிடைக்கின்றன.

பூகோள அடிப்படையில் திராவிட மொழிகளின் தோற்றம் எங்கு என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை; அதேபோன்று, எந்தக் காலத்தில் அவை தோன்றின என்பதை அறுதியிட்டுக் கூறவும் இயலாது. அதேவேளையில், தற்போது கிடைக்கப் பெற்றுள்ள சில சான்றுகளின்படி ஆய்வு செய்ததில், ஆரியர்கள் 3,500 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்குள் வரு வதற்கு முன்பே திராவிடர்கள் இங்கு வாழ்ந்து வந்தனர் என்பது தெரிகிறது. இந்த விஷயத்தில் ஆராய்ச்சி யாளர்களிடையே கருத்தொற்றுமையும் உள்ளது.

மேலும் சில தரவுகள் மற்றும் சான்றுகளின் அடிப் படையில் ஆய்வு செய்தபோது தமிழை உள்ளடக்கிய திராவிட மொழிக் குடும்பம் 4,500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதை அறிய முடிகிறது என்று அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நன்றி : தினமணி, 22-3-2018

## தீண்டாமை மறைந்து வருகிறதா?

*தீண்டாமை மறைந்து போய்க் கொண்டிருக்கிறது என்கிற ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. இந்த வாதம் வாதமே அல்ல. ஆனால் சிலர் இந்த வாதத்தினால் ஈர்க்கப்படலாம் என்பதால், அதனை அம்பலப்படுத்தவும், அது எவ்வளவு பயனற்றது என்பதைக் காட்டவும் விரும்புகின்றேன். இந்த வாதத்தை எழுப்புகிறவர்கள் "என்னைத் தொடாதே" என்ற முறையிலான தீண்டா மைக்கும் சமூகப் பாகுபாட்டில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் மனப்போக்கு என்ற முறையிலான தீண்டா மைக்கும் இடையில் வேறுபடுத்திப் பார்ப்பதாகத் தெரிய வில்லை. இரண்டும் அறவே வெவ்வேறானவை. "என்னைத் தொடாதே" என்ற முறையிலான தீண்டாமை நகரங்களில் பையப் பைய மறைந்து கொண்டிருக்கலாம்; என்றாலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்பது பற்றி எனக்குச் சந்தேகமே. ஆனால் தீண்டப்படாத மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டவேண்டும் என்ற அளவில் இந்துக்களிடம் ஒரு மனப்போக்காக இருக்கின்ற தீண்டாமையானது கற்பனைக் கெட்டக் கூடிய காலத்திற்குள் நகரங்களிலோ கிராமங் களிலோ மறைந்து போகாது என்று நான் உறுதியாகக் கருதுகிறேன்.*

***- டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்***

*(காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாத மக்களுக்குச் செய்தது என்ன? நூல் - 1945)*

## மணமகள் தேவை



பெயர் : க.விடுதலைத் தமிழன்
வயது : 27 (12.3.1991)
இனம் : ஆதி திராவிடர் (பறையர்)
படிப்பு : BBA, M.B.A., DCA., Typewrirting English - High
அப்பா : ந.கருணாகரன் (பணி ஓய்வு) பாரதிதாசன் பல்கலைக்கழகம்
அம்மா : திருமதி. க. ஜெயக்கொடி
தங்கை : திருமதி. க.தமிழ்க்குயில், M.Sc., க/பெ. பெ.சதீஷ்குமார், B.E.,
இருப்பிட முகவரி : எண்.88, தமிழன் இல்லம், மனித சக்தி நகர், மாத்தூர் அஞ்சல் - 622 515. புதுக்கோட்டை மாவட்டம்.
நிரந்தர முகவரி : ந. கருணாகரன், வடக்கலூர் அஞ்சல் குன்னம் வட்டம், இலப்பைக்குடிக்காடு (வழி) பெரம்பலூர் மாவட்டம் - 621 108.
தொடர்புக்கு: 8072541180, 9788202391

குறிப்பு:சீர்திருத்தத் திருமணம், வேலைக்கு செல்பவராக இருத்தல் மகிழ்ச்சி (அ) ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு

## கீழ்ப்பென்னாத்தூர் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம்



4.3.2018 அன்று கீழ்பென்னாத்தூர் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம் சார்பில் பேருந்து நிலையம் அருகில் தினமும் ஒரு குறளும் அதன் பொருளும் எழுதும்வண்ணம் திருவள்ளுவர் குறள்பலகைத் திறந்து வைக்கப் பட்டது.

தலைவர் புலவர் தி.மு.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். குறள் பலகையைத் திறந்து வைத்து தி.மு.பொன் சுப்பிரமணியன் திருவள்ளுவர் பற்றிப் பேசினார். அனைவரையும் சங்கச் செயலாளர் அண்ணாமலை வரவேற்றுப் பேசினார். ஆசிரியர்கள் கோ.கோதண்டராமன் தாசப்பன், தானப்பன். தமிழ்மணி சக்திவேல், முத்துமாணிக்கம். சுந்தரமூர்த்தி, இரஹமதுல்லா மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திருவள்ளுவர் குரல் பலகைக்கு ரூ.5000 செலவு செய்த பி.குப்புசாமி வாழ்த்திப் பேசினார். விழா முடிவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப் பட்டது. சக்திவேல் அனைவருக்கும் தேநீர் விருந்து அளித்தார்.

## அடிமை விலங்கொடிக்க...

இந்துதேசம் இந்துநாடாய் மாற்றத்துணிகிறார் மோடி
தேசியஇனத்தின் உரிமையை நசுக்குது அத்தாடி
தமிழ்த்தாய் வாழ்த்தை மறுப்போர்மேலே ஒருபடி
அய்அய்டியில் பாடுவர்யானை கணபதி துதி

பார்ப்பனியம் இராமராச்சியத்தை திணிக்கத் துடிக்குது
பாரெங்கிலும் மனுதர்மத்தை வேரூன்ற பார்க்குது
ஆர்எசசும் பரிவாரங்களும் ஆரியக் கூத்தாடுது
பார்தமிழினமோ அடிமை போதையில் திளைக்குது

ஆண்டாண்டாய் அநீதிதமிழர்க்கு காவிரி உரிமையில்
ஆண்டஅரசுகளால் பயனென்ன? நாமளித்த வாக்குரிமையில்
மேலாண்மை வாரியம் மட்டுமே நெடுந்தீர்வு
நீராண்மையை முறைமை செய்தால்தான் நமக்குவாழ்வு

அச்சுறுத்தியே மக்களை வதைக்குது பாசகஅரசு
எச்சைராசா வகையராக்கள் கக்குவர் பாசிசநஞ்சு
சிலைகளை தகர்த்தது வரலாற்றின் வடு
பழனிச்சாமியும் பன்னீரும் தமிழ்நாட்டிற்குக் கேடு

நிலங்களை மலடாக்கி வேளாண்மை பாழாக்குது
வளங்களை வணிகமாக்கி சுரண்டுது தரகுஅரசு
மரபுமாற்று விதைவிதைக்க கார்ப்பரேட்டோடு கைகோக்குது
அய்ட்ரோகார்பனும் இசுடெர்லைட்டும் மண்ணிற்குப் பேராபத்து.

பொதுமை கோட்பாட்டை வகுத்த மார்க்சுஎங்கல்சும்
மடமையை மடைமாற்றிய பகுத்தறிவன் பெரியாரும்
தீண்டாமைக்குத் தீயிட்ட மேதை அம்பேத்கரும்
இவர்களின் இயமேதீர்வு தொடர்வோம் துணிந்து

- நா. மதனகவி

## பேராசிரியர் க.நெடுஞ்செழியன் தாய் க.மீனாட்சி மறைவு

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பெரியார் உயராய்வு மய்ய முன்னாள் தலைவரும். ஆசீவகம் ஆய்வறிஞரும், தந்தை பெரியார் கொள்கையாளருமான பேராசிரியர் க.நெடுஞ்செழியன் அவர்களின் தாயார் க.மீனாட்சி (95) அவர்கள் அன்பில்படுகை என்ற கிராமத்தில் 19.3.2018 அன்று மறைவுற்றார். 20.3.2018 அன்று மாலை எந்தவித மதச் சடங்குகள் இன்றி உடல் அடக்கம் செய்யப்பட்டது.

தன் தாயை இழந்து வருந்தும் பேராசிரியர் நெடுஞ்செழியன், அவரின் துணைவியார் இரா.சக்குபாய், தம்பி வழக்குரைஞர் க.புகழேந்தி, தங்கைகள், மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் சார்பாகவும், மா.பெ.பொ.க. கட்சி சார்பா கவும் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள் கிறோம்.

மா.பெ.பொ.கட்சி மாவட்டச் செயலாளர் இரா.கலிய பெருமாள், வி.கே.மணிமாறன், ந.கருணாகரன், தந்தை பெரியார் திராவிடர் கழகம் விடுதலை அரசு, ம.தி.மு.க. அடைக்கலம், தென்மொழி ஈகவரசன், தமிழ்நாடு பொதுவுடைமைக்கட்சி செல்வமணி, திராவிட முன்னேற்ற கழகத்தினர், பேராசிரியர்கள், அனைத்துக் கட்சித் தோழர்கள் திரளாக இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

செய்தி : திருச்சி. **ந.கருணாகரன்**

## அறிவிப்பு

### உரிமை மற்றும் வெளியீடு பற்றிய விவரம்

### அறிக்கை படிவம் IV (விதி எண்.8இன்படி)

### சிந்தனையாளன் - மாத இதழ்

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடப்படும் இடம் | : மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |
| 2. | அச்சிடுவோர் | : பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம் |
| 3. | வெளிவரும் காலம் | : மாதந்தோறும் |
| 4. | வெளியிடுவோர் பெயரும் முகவரியும் | : வே. ஆனைமுத்து மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |
| 5. | ஆசிரியார் பெயரும் முகவரியும் | : மேலே உள்ளபடி |
| 6. | இதழுக்கு உரிமையாளர் களின் பெயர்(களும்) முகவரி(களும்) | : மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |

இங்கு மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானவை என்று இதன்மூலம் உறுதி கூறுகிறேன்.

சென்னை
31.03.2018

ஒப்பம்
**வே. ஆனைமுத்து**
வெளியிடு

## வாழ்க்கை ஒப்பந்த விழா





வேலூர் தோழர் வே.ஆ.அரி-மாதவி மகள் அ.மா.தான்யாவுக்கும் சென்னை, சக்திவேல் பிரகாசுக்கும் திருமணம் 11.02.2018 அன்று சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. மா.பெ.பொ.க. வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி.சங்கரும் தோழர் சா.குப்பனும் திருமண விழாவில் பங்கேற்றனர்.

## டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் பிறந்தநாள் செய்தி

சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ‘‘ஜெய்பீம்’’ இதழ் 1947 ஏப்பிரல் 14 அன்று டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் 55ஆவது பிறந்தநாள் மலருக்குப் பிறந்தநாள் செய்தி அனுப்புமாறு அம்பேத்காரிடம் கேட்டது. அந்த வேண்டுகோளை ஏற்று அம்பேத்கர் அனுப்பிய செய்தியின் ஒருபகுதி கீழே தரப்பட்டுள்ளது.

‘‘என்னுடைய 55ஆவது பிறந்தநாளையொட்டி நீங்கள் வெளியிடவுள்ள சிறப்பிதழுக்குச் செய்தி அனுப்புமாறு என்னிடம் கேட்டீர்கள். இந்தியாவில் அரசியல் தலைவரை இறைத்தூதருக்கு இணையாக மதிக்கும் இழிந்த போக்கு இலங்குகிறது. இந்தியாவுக்கு வெளியில் மக்கள் தங்கள் இறைத்தூதர்களின் பிறந்தநாள்களைக் கொண்டாடுகின்றனர். ஆனால் இந்தியாவில் மட்டும்தான் இறைத்தூதரின் பிறந்த நாளையும் அரசியல் தலைவரின் பிறந்த நாளையும் கொண்டாடுகின்றனர். இத்தகைய நிலை இருப்பது வருந்தத்தக்கதாகும்.

என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதை நான் விரும்பவில்லை. சனநாயகத்தில் மிகுந்த நம்பிக்கை உள்ளவன் என்பதால் மனித வழிபாட்டை நான் ஏற்பதில்லை. மனிதனை வழிபடுவது என்பது சனநாயகத்துக்கு எதிரானதாகும். ஒருவர் தகைசான்றவராகயிருப்பின் அவர்பால் அன்பு செலுத்துதலும் வியத்தலும் மதித்தலும் இயல்பே ஆகும். இந்நிலையே அத்தலைவருக்கும் தொண்டர்களுக்கும் சரியானதாகும். ஆனால் தலைவரை வழிபடுதல் என்பதை ஏற்க இயலாது. இறைத்தூதருக்கு இணையான நிலையில் ஒரு அரசியல் தலைவரை வைக்கும் போது, இறைத்தூதர்கள் தங்களைப் பின்பற்றியவர்களுக்கு அறநெறிகளை வகுத்தளித்தது போல் அரசியல் தலைவரும் உபதேசம் செய்யவேண்டும்.

தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு நான் விடுக்கும் செய்தி என்னவெனில், போராடுங்கள், தொடர்ந்து போராடுங்கள், தியாகம் செய்யுங்கள், மேன்மேலும் தியாகம் செய்யுங்கள். ஏற்ற துன்பங்கள், செய்த தியாகங்கள் பற்றி எண்ணிப் பார்க்காமல் தொடர்ந்து போராடுங்கள். அத்தகைய போராட்டம் மட்டுமே உங்கள் விடுதலையைப் பெற்றுத்தரும்.

(அம்பேத்கரின் உதவியாளராக இருந்த நானக் சந்த் ரட்டு எழுதிய அம்பேத்கரின் நினைவுகள் எனும் நூல் (ஆங்கிலம்) பக்கம் 85, 86)

# சரக்கு மற்றும் சேவை வரியில் உள்ள கோளாறுகளில் சில...

பல வழிகளில் வரி என்ற பெயரில் மத்திய அரசும் மாநில அரசும் முன்பு வசூலித்து வந்தன. கடந்த சூலை 2017 முதல் சரக்கு மற்றும் சேவை வரி என்ற பெயரில் மத்திய அரசும், சொத்துவரி, குடிநீர் வரி, சாலை வரி, தொழிலாளர் வரி, நலவாரிய வரி, கல்வி வரி, தொழில் வரி என்ற பெயரில் வரியை மாநில அரசும் வசூல் செய்கின்றன.

சரக்கு மற்றும் சேவை வரியை மத்திய அரசு வசூல் செய்கிறது. வியாபாரம் நன்கு ஒழுங்குப்படுத்தப்படுகின்றன. எந்தவொரு பொருள் வாங்கினாலும், விற்றாலும் கணக்கில் காட்டித்தான் ஆகவேண்டும். வரியை வசூலிக்கவும் வரியைக் கட்டவும் நன்கு திட்டமிட்டுச் செயல்படுகின்றன. சரக்கு மற்றும் சேவைவரிக் கணக்கில் தவறுதலாகப் (எழுத்துப் பிழையாக) பதிந்த கணக்குகளைத் திருத்த வழி (பிழை என்றால் சரியான எண் 100க்கு பதில் 1000 என்று பதிந்தால்) இன்றுவரை வழி வகைகள் செய்யவில்லை.

இந்த வரிவசூல் செய்யும் கணக்கை இந்திய அரசு ஒழுங் குப்படுத்த இன்போசீஸ் என்ற தனியார் நிறுவனத்திடம் கோடிக்கணக்கில் பணத்தைக் கொடுத்து வேலைக்கு ஒப்பந்த முறையில் அமர்த்தி, கணக்கைச் சரி பார்க்கின்றனர். இந்த ஒப்பந்தத்தால் விற்பனைவரித் துறையில் பணி செய்ய புதிய ஆட்களைப் பணியமர்த்தாமல் தற்போது பணியில் இருப்பவர் களையும் அனுப்பும் முயற்சிகள் நடக்கின்றன. இனி இதே போன்று அனைத்துத் துறைகளும் தனியார் மயமாக்கப் படும். அப்படித் தனியார்மயமானால் இடஒதுக்கீட்டுக்கு நிர்பந்தம் குறைகின்றது. கையூட்டுக்குப் பதில் பங்குபோட்டு, கேள்விக்கு இடமின்றி மத்திய அரசு கொள்ளையடிக்கின்றது.

பொதுமக்களுக்குக் கிடைக்கும் வேலைவாய்ப்பு பாதிக்கப்படு கின்றது. சரக்கு மற்றும் சேவை வரியில் கணக்கில் காட்டப் படாத சேவைவரி அதிகமாக மறைக்கப்படுகின்றது (உதாரணம் அனைத்து உணவகங்கள், மருத்துவமனைகள் போன்ற நிறுவனங்கள் காட்டியதுதான் கணக்கு, காட்டப்படாத 80% கணக்கு வரி ஏய்ப்புதான். இதிலும் அரசியல்வாதிகள் பங்கு வாங்கிக் கொண்டு விட்டுவிடுகின்றனர்.

பொதுமக்களுக்கு வரிப்பணம் முழுமையாகப் பயனளிக்க வில்லை. இப்பொழுது நடைபெறும் வங்கி ஊழலை மறைக்க ஆளும் கட்சி ரதயாத்திரை விடுகின்றது. பொதுமக்களைத் திசை திருப்பியே எல்லா ஊழல்களும் மறைக்கப்படுகின்றன.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ஏப்ரல்-2018

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| மருத்துவர் **சோமாஸ்கந்தன்** | கோவை | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - ஏப்ரல்-2018

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Community Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**